فَإِنْ تَوَلَّوْا فَخُذُوهُمْ وَاقْتُلُوهُمْ حَيْثُ وَجَدْتُمُوهُمْ ۖ
وَلَا تَتَّخِذُوا مِنْهُمْ وَلِيًّا وَلَا نَصِيرًا ۝

89. அவர்கள் நிராகரிப்பவர்களாகி விட்டதைப் போல் நீங்களும் நிராகரிப்பவர்களாவதை அவர்கள் விரும்புகின்றனர்; அப்பொழுது நீங்களும் (அந்த நிராகரிப்பவர்களுக்குச்) சமமாகி விடுவீர்கள். அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்யும் வரையில், அவர்களிலிருந்து (யாரையும் உங்களுக்குக்) நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். ஆகவே, அவர்கள் பின் வாங்கினால், அவர்களை (நீங்கள் கைதிகளாய்)ப் பிடியுங்கள்; இன்னும், நீங்கள் (நயவஞ்சமாய்ச் சதி செய்பவர்களான) அவர்களைக் கண்டவிடத்தில் வெட்டுங்கள்; இன்னும் அவர்களிலிருந்து (யாரையும்) நண்பராகவோ, உதவியாளராகவோ ஆக்கிக் கொள்ளாதீர்கள்.

முனாஃபிக்குகள் குஃப்ரான காரியத்தில் முனைந்து நிற்பதும், தாங்கள் வழி தவறியதுமல்லாமல் மற்றவர்களையும் வழி தவறச் செய்ய முயலுவதும் இந்த ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும், பிறர் காஃபிராகி விடவேண்டுமென்று ஒருவர் விரும்பு வாராயின் அவரது அகத்தில் குஃப்ரான எண்ணங்கள் நிறைந் திருக்கின்றன என்பதற்கு அடையாளம் என்பது இதில் சமிக்ஞையாகக் கூறப்பட்டிருக்கிறது.

قَالَ عَلَيْهِ السَّلَامُ الرِّضَى بِالْكُفْرِ كُفْرٌ

"குஃப்ரைப் பற்றிப் பொருந்துவது குஃப்ரு" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِلَّا الَّذِينَ يَصِلُونَ إِلَىٰ قَوْمٍ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِيثَاقٌ
أَوْ جَاءُوكُمْ حَصِرَتْ صُدُورُهُمْ أَنْ يُقَاتِلُوكُمْ أَوْ يُقَاتِلُوا

قَوْمَهُمْ ۚ وَلَوْ شَاءَ اللَّهُ لَسَلَّطَهُمْ عَلَيْكُمْ فَلَقَاتَلُوكُمْ ۚ
فَإِنِ اعْتَزَلُوكُمْ فَلَمْ يُقَاتِلُوكُمْ وَأَلْقَوْا إِلَيْكُمُ
السَّلَمَ فَمَا جَعَلَ اللَّهُ لَكُمْ عَلَيْهِمْ سَبِيلًا ۝

90. (ஆனால்) உங்களுக்கும் எவர்களுக்குமிடையில் (சமாதான) உடன்படிக்கை ஏற்பட்டிருக்கின்றதோ அந்த கூட்டத்தார்களிடம் சேர்ந்து கொண்டவர்களை அல்லது, உங்களை எதிர்த்து யுத்தஞ் செய்வதற்கோ அல்லது அவர்களுடைய வர்க்கத்தாரை எதிர்த்து யுத்தஞ் செய்வதற்கோ தங்களின் இருதயங்கள் இடங்கொடாமல் உங்களிடம் வருபவர்களைத் தவிர (மற்றவர்களைக் கண்டவிடத்தில் வெட்டுங்கள் - கைதியாகப் பிடியுங்கள்). மேலும், அல்லாஹ் நாடியிருந்தால், இவர்களுக்கு உங்கள் மீது ஆதிக்கம் கொடுத்திருப்பான்; அவர்கள் உங்களை எதிர்த்து யுத்தஞ் செய்திருப்பார்கள். எனவே, இவர்கள் உங்களை விட்டு விலகி, உங்களை எதிர்த்து யுத்தஞ் செய்யாமல் உங்களிடம் (வந்து) சமாதானம் செய்து கொள்ள விரும்பினால், அல்லாஹ் உங்களுக்கு அவர்களின் மீது (யுத்தஞ் செய்வதற்கு) எந்த வகையான வழியையும் ஏற்படுத்தவில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய விருப்பமில்லாமல், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் அஸ்லமீ கூட்டத்தினர்கள் உடன்படிக்கை செய்திருந்தனர்.

பனுமுத்லஜ் என்னும் கோத்திரத்தார் தங்களுடைய கூட்டத்தாருடன் சேர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், முஸ்லிம்களையும் எதிர்த்து யுத்தஞ் செய்யவோ அல்லது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சேர்ந்து தங்கள் கூட்டத்தினரை எதிர்த்து யுத்தம் செய்யவோ

விருப்பமில்லாமல் முஸ்லிம்களிடம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் யுத்தம் செய்வதில்லை என்று முஸ்லிம்களிடத்திலும் குறைஷியரிடத்திலும் உடன்படிக்கை செய்திருந்தனர். இவர்களது இருதயத்தில் அல்லாஹு தஆலா திடுக்கத்தை ஏற்படுத்தி இருந்ததால், இவர்கள் முஸ்லிம்களிடம் செய்த உடன்படிக்கையை முறித்து முஸ்லிம்களை எதிர்த்து யுத்தஞ் செய்ய இஷ்டப்படவில்லை. குறைஷியர் தங்களது மார்க்கத்தாராக இருந்ததால் அவர்களிடம் செய்த உடன்படிக்கையை முறித்து அவர்களை எதிர்க்கவும் இஷ்டப்படவில்லை. ஆகவே, இவர்களைக் கைதி செய்யவும், கொல்லவும் வேண்டாம் என்று இங்கு இறைவன் கூறியுள்ளான்.

سَتَجِدُوْنَ اٰخَرِيْنَ يُرِيْدُوْنَ اَنْ يَّاْمَنُوْكُمْ وَ
يَاْمَنُوْا قَوْمَهُمْ ؕ كُلَّمَا رُدُّوْٓا اِلَى الْفِتْنَةِ اُرْكِسُوْا
فِيْهَا ۚ فَاِنْ لَّمْ يَعْتَزِلُوْكُمْ وَيُلْقُوْٓا اِلَيْكُمُ السَّلَمَ
وَيَكُفُّوْٓا اَيْدِيَهُمْ فَخُذُوْهُمْ وَاقْتُلُوْهُمْ حَيْثُ
ثَقِفْتُمُوْهُمْ ؕ وَاُولٰٓئِكُمْ جَعَلْنَا لَكُمْ عَلَيْهِمْ سُلْطٰنًا
مُّبِيْنًا ۟

91. (முஃமீன்களே) அடுத்து வேறு சிலரையும் நீங்கள் காண்பீர்கள், உங்களிடம் அபயம் பெறுவதையும், இன்னும், தங்களின் சமூகத்தினரிடத்திலும் அபயம் பெறுவதையும் விரும்புகின்றார். குழப்பம் செய்வதற்கு அவர்கள் அழைக்கப்பட்டால் அவர்கள் அ(வ்விஷயத்)தில் தலைகீழாக விழுந்து விடுகின்றனர்; ஆதலின், அவர்கள் (போரிடுவதை நிறுத்தி) உங்களை விட்டு ஒதுங்காமலும், உங்களிடத்தில் சமாதானத்தை முன் வைக்காமலும், (பகைவர்களுடன் சேர்ந்து உங்களுக்குத் தீங்கிழைப்பதை விட்டு அவர்கள் தங்களின் கைகளைத் தடுத்துக் கொள்ளாமலும்,

இருந்தால், அப்பொழுது அவர்களை(க் கைதிகளாக)ப் பிடியுங்கள்; இன்னும், அவர்களை நீங்கள் காணுமிடங்களில் கொல்லுங்கள்; அவர்கள்தாம் - அவர்கள்மீது (அவ்வாறு செய்ய) உங்களுக்கு தெளிவான ஆதாரத்தை பகிரங்கமான அத்தாட்சியை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

இந்த ஆயத்தில் அஸது, கத்ஃபான் ஆகிய இரண்டு கூட்டத்தினரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் மதீனா முனவ்வராவிற்கு வந்தால் முஸ்லிம்களிடம் அச்சந்தீர்ந்திருப்பதற்காக இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி உடன்படிக்கையும் செய்து கொள்வர். தங்களது கோத்திரத்தாரிடம் சென்றால் அவர்களிடம் அச்சந்தீர்ந் திருப்பதற்காக காஃபிர்களாகி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் செய்த தங்களது உடன்படிக்கையை மீறிச் சேர்ந்து கொள்வர். தவிரவும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய வரவேண்டும் என்று அவர்களது கோத்திரத்தார் கூறினால் உடனே அவர்கள் அதற்குத் தயாராகி யுத்தத்திற்கும் வருவர். இவ்விதமாகச் செய்து கொண்டிருக்கிற முனாஃபிக்குகள் முஸ்லிம்களிடம் எக்காரணத்தைக் கொண்டும் குறுக்கிடாமல் விலகி, சமாதானத்தை வேண்டி, யுத்தம் செய்ய வராமல் நின்று கொள்ள வேண்டும். இம்மூன்று காரியங்களையும் அவர்கள் செய்யவில்லையானால் அவர்களைக் கண்ட விடத்தில் கைதி செய்யும்படியும், கொல்லும்படியும் இந்த ஆயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

وَمَا كَانَ لِمُؤْمِنٍ اَنْ يَّقْتُلَ مُؤْمِنًا اِلَّا خَطَـًٔا ۚ وَمَنْ
قَتَلَ مُؤْمِنًا خَطَـًٔا فَتَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ وَّدِيَةٌ
مُّسَلَّمَةٌ اِلٰٓى اَهْلِهٖٓ اِلَّآ اَنْ يَّصَّدَّقُوْا ؕ فَاِنْ كَانَ
مِنْ قَوْمٍ عَدُوٍّ لَّكُمْ وَهُوَ مُؤْمِنٌ فَتَحْرِيْرُ رَقَبَةٍ

مُؤْمِنَةٍ ۚ وَإِنْ كَانَ مِنْ قَوْمٍ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِيثَاقٌ
فَدِيَةٌ مُسَلَّمَةٌ إِلَىٰ أَهْلِهِ وَتَحْرِيرُ رَقَبَةٍ مُؤْمِنَةٍ ۖ
فَمَنْ لَمْ يَجِدْ فَصِيَامُ شَهْرَيْنِ مُتَتَابِعَيْنِ تَوْبَةً
مِنَ اللَّهِ ۗ وَكَانَ اللَّهُ عَلِيمًا حَكِيمًا ۝

92. மேலும் தவறுதலாகவே அன்றி, ஒரு விசுவாசிக்கு மற்றொரு விசுவாசியைக் கொலை செய்வது ஆகுமானதல்ல; (உங்களில் எவரேனும்) ஒருவர் ஒரு விசுவாசியைத் தவறுதலாகக் கொலை செய்து விட்டால், (அதற்கு நஷ்டஈடு) விசுவாசியான ஓர் அடிமையை விடுதலை செய்வதாகும். இன்னும் (கொலையுண்ட) அவருடைய குடும்பத்தினரிடம் (துக்க) நஷ்டஈடும் ஒப்படைத்தலாகும் – (நஷ்ட ஈடு வேண்டாமென அக்குடும்பத்தினராகிய) அவர்கள் தருமமாக (மன்னித்து) விட்டால் தவிர; (தவறுதலாகக் கொல்லப்பட்ட) அவன் உங்களுடைய விரோதியின் கூட்டத்தில் உள்ளவனாகவும், அவன் விசுவாசியாகவும் இருந்தால், அப்பொழுது விசுவாசியான ஓர் அடிமையை விடுதலை செய்வதாகும்; இன்னும் (கொல்லப்பட்ட) அவன், உங்களுக்கும் எவர்களுக்கும் மத்தியில் (சமாதான) உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதோ அக்கூட்டத்தில் உள்ளவனாக இருந்தால், அப்பொழுது அவனுடைய குடும்பத்தாரிடம் (துக்க) நஷ்டஈடு ஒப்படைக்கப்படுதலாகும்; இன்னும் விசுவாசியான ஓர் அடிமையை விடுதலை செய்தலுமாகும். எவரேனும் (நஷ்ட ஈட்டிற்குரிய பொருளைப்) பெற்றிரா விட்டால், அல்லாஹ்விடமிருந்து பாவமன்னிப்புப் பெறுவதற்காகத் தொடர்ந்து இரண்டு மாதங்கள் நோன்பு நோற்பதாகும். அல்லாஹ் முற்றிலும் அறிந்தவனாகவும், ஞானமுள்ளவனாகவும் இருக்கிறான்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனாவிற்கு வருவதற்கு

முன்னர் இயாஷுப்னு அபீரபீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி, தமது குடும்பத்தாருக்குப் பயந்து கொண்டு மதீனமா நகருக்கு ஹிஜ்ரத்துச் செய்து வந்துவிட்டார். இவரது தாயார் தமது புதல்வர் திரும்ப வராமல் உண்பதுமில்லை, குடிப்பதுமில்லை, நிழலைத் தேடிக் கொள்வதுமில்லை என்று சத்தியம் செய்து கொண்டாள். இவளது மற்றொரு புதல்வரான அபூஜஹ்ல் (இயாஷுடைய தந்தை வேறு, அபூஜஹ்லின் தந்தை வேறு) ஹாரிதுப்னுஜைத் என்பவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு, மதீனா முனவ்வராவிலுள்ள ஒரு மலையில் தனது தாயின் மைந்தரைக் கண்டு விஷயத்தை அறிவித்து "உறவினர்களை அரவணைக்க வேண்டும் என்று முஹம்மது உமக்குக் கூறி இருக்கிறாரல்லவா? நீர் மக்காவிற்குத் திரும்ப வந்து உமது தாய்க்கு நன்றி செய்யும். உமது மார்க்கத்திலேயே நீர் இருந்து கொள்ளலாம். அது விஷயத்தில் நாங்கள் உம்மை தொந்தரவு செய்ய மாட்டோம்" என்று கூறினான். ஆகவே, அவனது சொல்லை நம்பி அவர் மலையிலிருந்து இறங்கி மக்காவை நோக்கி அவ்விருவருடன் சென்றார். திருமதீனாவை விட்டு வெகுதூரம் வரை வந்தபின் இவ்விருவரும் அவரைப் பின்கட்டாகக் கட்டி ஒவ்வொருவரும் நூறு நூறு அடிகொடுத்தனர். அப்பொழுது அவர் ஹாரிதை நோக்கி (அபூஜஹ்லைச் சுட்டிக் காண்பித்து) "இவர் என் சகோதரர்; நீர் யார் என்னை அடிப்பதற்கு? நீர் தனிமையில் அகப்பட்டால் உம்மை நான் கொன்று விடுவேன்" என்று கூறி சத்தியம் செய்தார். பின்னர், அவரைக் கட்டியபடியே அவருடைய தாயிடம் அவ்விருவரும் கொண்டு வந்து விட்டார்கள்.என்றாலும், அவள் தமது புதல்வன் தமது மார்க்கத்தை விட்டு விலகாத வரையில் தமது சத்தியத்தை மாற்றிக் கொள்வதில்லை என்று கூறினாள். ஆகவே, அவர் தமது தாயின் மீது கொண்டுள்ள அபிமானத்தால் அந்தரங்கத்தில் இஸ்லாம் மார்க்கத்தில் உறுதியாக இருந்து கொண்டு காஃபிராகி விட்டதாக வெளிக்கு மட்டும் கூறினார். பின்னர், ஹிஜ்ரத்துச் செய்து மதீனாவிற்குச் சென்று விட்டார். அப்பால், ஹாரிதுப்னுஜைத் என்பவரும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி, மதீனாவிற்கு ஹிஜ்ரத்துச் செய்து வந்தார். இவரை இயாஷ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு

என்பவர் குபாவிற்குப் பக்கத்தில் தனிமையில் கண்டு தமது சபதத்தை நிறைவேற்றும் நோக்கத்தால் கொன்று விட்டார். இவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய விபரம் அவருக்குப் பின்னர் தெரியவந்தது. ஆகவே, அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "நான் ஹாரிதுப்னுஜைதை கொன்று விட்டேன். ஆனால், அவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியது எனக்குத் தெரியாது" என்று அறிவித்தார். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது.

"எக்காரணத்தைக் கொண்டும் ஒரு மூமினை இன்னொரு மூமின் கொலை செய்யக்கூடாது. ஆனால், தவறுதலாகக் கொலை செய்து விட்டால் குற்றமில்லை. என்றாலும், ஒரு மூமினைத் தவறுதலாக ஒருவர் கொலை செய்து விட்டால் அந்தத் தவறுதலுக்காக ஒரு மூமினான அடிமையை விடுதலை செய்ய வேண்டும். கொலை செய்யப்பட்டவரின் வாரிசுகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்; கொலை செய்யப்பட்டவரின் வாரிசுகள் கொலை செய்தவரது தவறை மன்னித்து விடலாம். அவ்வாறு மன்னித்தால் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், மூமினான அடிமையை விடுதலை செய்ய வேண்டிய பொறுப்பு நீங்கிவிடாது. கொலை செய்யப்பட்ட மூமினானவர் பகைவர்களது கூட்டத்தைச் சேர்ந்திருந்தால் மூமினான அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அவரது வாரிசுகாரர்கள் காஃபிர்களாக இருப்பதால் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை. கொலை செய்யப்பட்ட மூமினானவர் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்துள்ள காஃபிர்களைச் சேர்ந்திருந்தால் அப்பொழுது அவரது முஸ்லிம் அனந்தரக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதுடன் மூமினான ஒரு அடிமையை விடுதலை செய்யவும் வேண்டும். விடுதலை செய்து விடுவதற்கு அடிமை இல்லாமலும் அடிமையை வாங்குவதற்குப் பணம் இல்லாமலும் இருந்தால், தொடர்ந்து இரண்டு மாத காலம் நோன்பு நோற்க வேண்டும்" என்பது இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விதிகளாகும். இது சம்மந்தமான உபவிதிகள் இஸ்லாமியச் சட்ட நூற்களில் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

وَمَنْ يَّقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا فَجَزَآؤُهٗ جَهَنَّمُ

خٰلِدًا فِيْهَا وَغَضِبَ اللّٰهُ عَلَيْهِ وَلَعَنَهٗ وَاَعَدَّ لَهٗ

عَذَابًا عَظِيْمًا ۝

93. மேலும், விசுவாசியான ஒருவரை எவனேனும் வேண்டுமென்றே கொலை செய்தால், அவனுக்குத் தண்டனையானது நரகந்தான்; அதில் அவன் நிரந்தரமாக இருப்பான்; இன்னும் அல்லாஹ் அவனைக் கோபித்துக் கொள்கிறான்; இன்னும் அவனைச் சபிக்கின்றான்; இன்னும் அவனுக்குக் கொடிய வேதனையை தயார் செய்து வைத்திருக்கின்றான்.

ரிவாயத்து:- மக்ஸூப்னு ஸப்பானத்தல் கினானீயும், அவரது சகோதரர் ஹிஷாமும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி இருந்தனர். ஆனால், பனூநஜ்ஜார் கபீலா வசிக்குமிடத்தில் தனது சகோதரரான ஹிஷாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு வெட்டப்பட்டுக் கிடந்ததை மக்கீஸ் கண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தமது சகோதரர் கொல்லப்பட்டிருப்பதைக் குறித்து முறையிட்டார். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதரீன்களில் ஒருவரான ஜுபைருப்னு இயாளில் பஹ்ரீயையும் மக்கீஸையும் பனூ நஜ்ஜார் கோத்திரத்தார் வசிக்குமிடத்திற்கு அனுப்பி 'ஹிஷாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைக் கொலை செய்தவரை மக்கீஸிடம் ஒப்படைத்து விடவேண்டும். கொலை செய்தவர் இன்னார் என்று தெரியாவிட்டால் அவருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார்கள். கொலை செய்தவர் இன்னார் என்று அவர்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆதலின், அவர்கள் நஷ்ட ஈடாக நூறு ஒட்டகங்களை அவருக்குக் கொடுத்து அனுப்பினார்கள். ஆகவே மக்கீஸும் ஜுபைருப்னு இயாளில் பஹ்ரீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும் மதீனாவிற்கு வரும்போது வழியில் ஷைத்தான் மக்கீஸைக் கலைத்து விட்டான். ஆகவே, அவர் தம்முடன் வந்த பத்ரீ ஸஹாபியான ஜுபைருப்னு இயாளில் பஹ்ரீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைத் தமது சகோதரருக்குப்

பதிலாகக் கொலை செய்து விட்டு, அந்த நூறு ஒட்டகங்களையும் ஓட்டிக் கொண்டு நேராக மக்கமா நகருக்கு வந்து காஃபிராகி விட்டார். அப்பொழுது இந்த ஆயத்து அருளப்பட்டது. பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கமா நகரைக் கைப்பற்றியபோது ஜுபைருப்னு இயாளில் பஹ்ரீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைக் கொலை செய்த குற்றத்திற்காக மக்கீஸுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மூமினானவரைக் கொலை செய்வது ஆகும் என்று கூறி, வேண்டுமென்றே கொலை செய்தவருக்குத்தான் இந்த ஆயத்தில் கூறப்பட்ட தண்டனைகள் ஊர்ஜிதமாகும்.

فِي الْحَدِيْثِ لَزَوَالُ الدُّنْيَا اَهْوَنُ عَلَى اللهِ مِنْ قَتْلِ امْرِئٍ مُسْلِمٍ

ஹதீஸ்:- முஸ்லிமான ஒருவரைக் கொலை செய்வதைப் பார்க்கினும் உலகமே இல்லா தொழிந்து விடுவது அல்லாஹு தஆலாவிற்கு மிக இலேசாக இருக்கிறது.

لَوْ اَنَّ رَجُلاً قُتِلَ بِالْمَشْرِقِ وَاٰخَرُ رَضِيَ بِالْمَغْرِبِ لَاَشْتَرَكَ فِيْ

ஹதீஸ்:- கீழ் நாட்டில் ஒருவர் செய்ததை மேல் நாட்டிலுள்ள வேறொருவர் பொருந்திக் கொள்வாராயின் அந்தக் கொலையில் அவரும் பங்காளியாகி விடுகிறார்.

دَمِهِ مَنْ اَعَانَ عَلَى قَتْلِ مُسْلِمٍ بِشَطْرِ كَلِمَةٍ جَاءَ يَوْمَ الْقِيَامَةِ
مَكْتُوْبَةٌ بَيْنَ عَيْنَيْهِ اٰيِسٌ مِنْ رَحْمَةِ اللهِ تَعَالٰى

ஹதீஸ்:- ஒரு முஸ்லிமைக் கொலை செய்வதற்கு ஒரு பாதி வார்த்தையைக் கொண்டு ஒருவர் உதவி செய்தால் அல்லாஹ்வின் ரஹ்மத்தை விட்டு நீங்கியவர் என்று அவருடைய இரு கண்களுக்கு மிடையில் எழுதப்பட்டிருக்கிற நிலையில் அவர் கியாமத்து நாளில் வருவார்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا ضَرَبْتُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ

فَتَبَيَّنُوْا وَلَا تَقُوْلُوْا لِمَنْ اَلْقٰٓى اِلَيْكُمُ السَّلٰمَ لَسْتَ
مُؤْمِنًا ۚ تَبْتَغُوْنَ عَرَضَ الْحَيٰوةِ الدُّنْيَا ۖ فَعِنْدَ اللّٰهِ
مَغَانِمُ كَثِيْرَةٌ ۗ كَذٰلِكَ كُنْتُمْ مِّنْ قَبْلُ فَمَنَّ اللّٰهُ
عَلَيْكُمْ فَتَبَيَّنُوْا ۗ اِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ
خَبِيْرًا ۝

94. விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் (யுத்தத்தின் பொருட்டு) பிரயாணஞ் செய்தால், நீங்கள் (பகைவர்களை நன்கு) தெரிந்துகொள்ளுங்கள்; உங்களுக்கு ஸலாம் சொல்கின்றவரை இவ்வுலக வாழ்வின் அற்பமான பொருட்களை அடையும் பொருட்டு "நீர் விசுவாசியல்ல" என்று கூறாதீர்கள். எனவே, அல்லாஹ்விடத்தில் (நல்லடியார்களுக்கு) ஏராளமான கொள்ளைப் பொருள்களிருக்கின்றன; இம்மாதிரிதான் நீங்கள் முன்னே ஆகியிருந்தீர்கள்; அப்பால் அல்லாஹ் உங்களுக்குக் கிருபை செய்தான். ஆதலின், நீங்கள் (பகைவர்களை நன்கு) தெரிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை மிகத் தெரிந்து கொள்பவனாக இருக்கின்றான்.

இந்த ஆயத்து ஃபிதக்வாசியான மிர்தாஸுப்னு நுஹைக் என்பவர் சம்மந்தமாக அருளப்பட்டது. அதன் விபரம் வருமாறு.

மிர்தாஸுப்னு நுஹைக் என்பவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி இருந்தார். இவரைத் தவிர அவ்வூரில் வேறு யாரும் இஸ்லாத்தில் சேர்ந்திருக்கவில்லை. இவ்வித நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு படையை அவ்வூருக்கு அனுப்பினார்கள். அவ்வூர் வாசிகள் முஸ்லிம்களது படை வருவதைத் தெரிந்து ஊரை விட்டு ஓடி மறைந்து கொண்டனர். ஆனால், மிர்தாஸ என்பவர் மட்டும் தான் முஸ்லிமாக இருப்பதால் முஸ்லிம் வீரர்கள்

தனக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள் என்று நினைத்து ஊரை விட்டு ஓடிப் போகாமல் பக்கத்திலிருந்த மலையில் தமது ஆட்டு மந்தையுடனிருந்தார். முஸ்லிம் வீரர்கள் ஊருக்குள் வந்து, ஒருவரையும் காணாததைப் பார்த்து விட்டு "தக்பீர்" சொன்னார்கள். மிர்தாஸ் என்பவரும் தக்பீர் சொல்லிக் கொண்டு மலையை விட்டு கீழிறங்கி வந்து "லாயிலாஹ இல்லல்லாஹு அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறினார். அப்போது உஸாமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அவரைக் கொன்றுவிட்டு, அவரது ஆட்டு மந்தையை ஓட்டிக் கொண்டு வந்தார்கள். இவ்விபரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். அதற்கு உஸாமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "அவர் நாவினால் மட்டுந்தான் கூறினார். மனப்பூர்வமாக அவர் கூறவில்லை" என்று கூறினார். மற்றொரு ரிவாயத்தில், வாளாயுதத்திற்குப் பயந்து கொண்டு கூறினார் என்று கூறியதாக கூறப்பட்டிருக்கிறது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அவர் உண்மையாளரா அல்லது பொய்யரா என்பதை அவரது இருதயத்தைப் பிளந்து நீர் பார்த்தீரோ?" என்று கூறி இந்த ஆயத்தை ஓதிக் காண்பித்தார்கள். பிறகு, உஸாமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமக்குப் பாவமன்னிப்புக் கேட்குமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பலமுறை வேண்டினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "லாஇலாஹ இல்லல்லாஹு" என்று அவர் கூறியதற்கு எப்படி? என்று பதிற் கூறிக்கொண்டே இருந்தார்கள். இறுதியாக, அவரது ஆடுகளை எல்லாம் திரும்பக் கொடுத்து விடும்படியும், ஒரு மூமினான அடிமையை விடுதலை செய்து விடும்படியும் உஸாமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்குக் கட்டளை யிட்டார்கள்.

لَا يَسْتَوِي الْقٰعِدُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ غَيْرُ اُولِي
الضَّرَرِ وَالْمُجٰهِدُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِهِمْ
وَاَنْفُسِهِمْ فَضَّلَ اللّٰهُ الْمُجٰهِدِيْنَ بِاَمْوَالِهِمْ

وَاَنْفُسِهِمْ عَلَى الْقٰعِدِيْنَ دَرَجَةً وَكُلًّا
وَعَدَ اللّٰهُ الْحُسْنٰى وَفَضَّلَ اللّٰهُ الْمُجٰهِدِيْنَ عَلَى
الْقٰعِدِيْنَ اَجْرًا عَظِيْمًا ﴿٩٥﴾

95. மூமின்களில் நோயுள்ளவர்களைத் தவிர (யுத்தத்திற்குச் செல்லாமல்) உட்கார்ந்து கொண்டவர்களும், தங்களது பொருள்களையும், தங்களது உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்தவர்களும் சமமாக மாட்டார்கள்; (யுத்தத்திற்குச் செல்லாமல்) உட்கார்ந்து கொண்டவர்களைப் பார்க்கினும் தங்களது பொருள்களையும் தங்களது உயிர்களையும் கொண்டு யுத்தஞ் செய்தவர்களை ஒரு (பெரிய) அந்தஸ்துக்கு அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கிறான்; இன்னும் (இவ்விரு வகையினரில்) ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் நன்மையை வாக்களிக்கிறான். ஆனால், (யுத்தத்திற்குச் செல்லாமல்) உட்கார்ந்து கொண்டவர்களைப் பார்க்கினும் யுத்தம் செய்தவர்களுக்கு (மிகப்) பெரிய கூலியை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கிறான்.

தக்க காரணமில்லாமல் மார்க்க யுத்தத்திற்குச் செல்லாமல் வீட்டிலிருந்து கொண்டவர்களும், மார்க்க யுத்தத்திற்குச் சென்றவர்களும் சமமாக மாட்டார்கள் என்பதும், மார்க்க யுத்தத்திற்குச் சென்றவர்களுக்கு ஒரு பெரிய அந்தஸ்து அதிகமிருக்கிறது என்பதும் இந்த ஆயத்தின் கருத்தாகும். மேலும் இதில் சொல்லப் பட்டிருப்பதிலிருந்து மார்க்க யுத்தத்திற்குச் செல்வது ஃபர்லு கிஃபாயா என்று இமாம்கள் கூறி இருக்கிறார்கள்.

دَرَجٰتٍ مِّنْهُ وَمَغْفِرَةً وَّرَحْمَةً وَكَانَ اللّٰهُ
غَفُوْرًا رَّحِيْمًا ﴿٩٦﴾

96. (மேலும், நற்கூலியாகிய) அதிலிருந்து பல அந்தஸ்துகளிலும் பிழை பொறுத்தலிலும், நல்லருளிலும் (அவர்களை மேன்மையாக்கி வைத்திருக்கின்றான்) மேலும், அல்லாஹ் பிழை பொறுப்பவனாக, பேரன்புடையோனாக இருக்கின்றான்.

மார்க்க யுத்தம் புரியச் சென்றவர்களுக்கும், மார்க்க யுத்தத்திற்குச் செல்லாமலிருந்து விட்டவர்களுக்குமிடையில் எழுபது அந்தஸ்துகள் இருக்கின்றன வென்றும், மற்றொரு சொற்படி எழுநூறு அந்தஸ்துகள் இருக்கின்றனவென்றும், ஒவ்வொரு அந்தஸ்துக்கு மிடையில் வேகமாக ஓடக் கூடிய குதிரை எழுபது வருடம் ஓடக் கூடிய தூரம் இருக்கிறதென்றும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

فِيْ الْحَدِيْثِ اَنَّ فِي الْجَنَّةِ مِائَةَ دَرَجَةٍ اَعَدَّهَا اللهُ تَعَالَي لِلْمُجَاهِدِيْنَ
فِيْ سَبِيْلِهِ مَابَيْنَ الدَّرَجَتَيْنِ كَمَ بَيْنَ السَّمَاءِ وَالْاَرْضِ

ஹதீஸ்:- சுவர்க்கத்தில் நூறு அந்தஸ்துகளிருக்கின்றன. இவற்றை அல்லாஹு தஆலா சன்மார்க்க யுத்தம் புரிந்த முஜாஹிதுகளுக்கெனச் சித்தம் செய்து வைத்திருக்கிறான். இவற்றில் ஒரு அந்தஸ்திற்கும் மற்றொரு அந்தஸ்திற்கு மிடையில் வானத்திற்கும் பூமிக்கு மிடையிலுள்ள தூரமிருக்கிறது.

إِنَّ الَّذِينَ تَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ ظَالِمِي أَنفُسِهِمْ قَالُوا
فِيمَ كُنتُمْ ۖ قَالُوا كُنَّا مُسْتَضْعَفِينَ فِي الْأَرْضِ ۚ
قَالُوا أَلَمْ تَكُنْ أَرْضُ اللَّهِ وَاسِعَةً فَتُهَاجِرُوا فِيهَا ۚ
فَأُولَٰئِكَ مَأْوَاهُمْ جَهَنَّمُ ۖ وَسَاءَتْ مَصِيرًا ﴿٩٧﴾

97. நிச்சயமாக (ஹிஜ்ரத்துச் செய்யாமல் காஃபிர்களுடன் இருப்பதன் மூலமாகத்) தங்களுக்குத் தாங்களே அநியாயஞ் செய்தவர்களாயிருக்கின்ற நிலையில் அவர்க(ளது ஆன்மாக்க)ளை வானவர்கள் கைப்பற்றிக் கொண்டார்களே (அவர்களை நோக்கி) நீங்கள் எந்த நிலையில் இருந்தீர்கள் என்று (வானவர்கள்) கேட்டார்கள்; (அதற்கு) "நாங்கள் பூமியில் பலஹீனர் களாயிருந்தோம்" என்று (பதில்) சொல்வார்கள். (அதற்கு வானவர்கள்) 'அல்லாஹ்வின் பூமி விசாலமாக இல்லையா? நீங்கள் அதில் ஹிஜ்ரத்துச் செய்யலாமே?' என்று கேட்டார்கள். ஆகவே, (ஹிஜ்ரத்துச் செய்யாத) அவர்கள் ஒதுங்குமிடம் நரகமேயாகும்; மேலும், அ(ந்நரகமான)து (மனிதர்) சேருமிடத்தில் கெட்டது.

• மக்காவை ஹிஜ்ரத்துச் செய்யும்படி கட்டளை வந்த பிறகு மக்காவை ஹிஜ்ரத்துச் செய்யாமல் அங்கேயே முஷ்ரிக்குகளுடன் சேர்ந்து குடியிருந்த சில முஸ்லிம்களைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் பத்ருப் போரின் போது முஷ்ரிக்குகளுடைய படையில் சேர்ந்து யுத்தத்திற்கு வந்தார்கள். ஆனால், அங்கு அவர்கள் கொல்லப்பட்டார்கள். மலக்குகள் அவர்களை முன்னும் பின்னும் அடித்து இந்த ஆயத்தில் கண்டவாறு கேட்டார்கள்.

இவர்கள் ஹிஜ்ரத்துச் செய்யாமல் காஃபிர்களுடன் சேர்ந்திருந்ததால் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றாமல் இருந்தனர். ஆகவே, அவர்கள் தங்கள் மீது ஏற்பட்ட கடமையை நிறைவேற்றா திருந்ததால் தங்களுக்குத் தாங்களே அநீதி செய்து கொண்டனர். ஹிஜ்ரத்துச் செய்வது கடமையாக ஏற்பட்ட பிறகு அதனை நிறைவேற்றாமல் மக்காவிலேயே இருந்த சில முஸ்லிம்களது இஸ்லாமை அல்லாஹுதஆலா அங்கீகரிக்கவில்லை. பிறகு, திருமக்கமா நகரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு அந்த ஊரை ஹிஜ்ரத்துச் செய்யவேண்டு மென்றிருந்த கடமை لَا هِجْرَةَ بَعْدَ الْفَتْحِ "வெற்றிக்குப் பிறகு ஹிஜ்ரத்து இல்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீஸ்படி மாற்றப்பட்டது.

إِلَّا الْمُسْتَضْعَفِينَ مِنَ الرِّجَالِ وَالنِّسَاءِ

وَالْوِلْدَانِ لَا يَسْتَطِيعُونَ حِيلَةً وَلَا يَهْتَدُونَ
سَبِيلًا ۝

98. ஆனால், (ஹிஜ்ரத்துச் செய்வதற்கான பணத்தையோ அல்லது பலத்தையோ தேட) உபாயஞ் செய்வதற்குச் சக்தி பெறாமலும், வழியை அறியாமலுமிருக்கின்ற ஆண் பெண் குழந்தைகளிலிருந்தும் பலஹீனர்களைத் தவிர (சக்தியுள்ளவர்களே தண்டிக்கப்படுவர்).

ஹிஜ்ரத்துச் செய்யும்படி கட்டளை பிறந்த பிறகும் ஹிஜ்ரத்துச் செய்யாமலிருந்தவர்களைக் குறித்து இதற்கு முந்திய ஆயத்தில் கூறி அவர்கள் ஒதுங்குமிடம் நரகம்தான் என்ற விபரம் கூறப்பட்டிருக்கிறது. இவர்களில் வழி தெரியாத காரணத்தினாலும், வழிச் செலவிற்கு வகையில்லாத காரணத்தாலும், இதர நியாயமான காரணத்தினாலும் ஹிஜ்ரத்துச் செய்ய இயலாமலிருந்தவர்களுமுண்டு. ஹிஜ்ரத்துச் செய்யச் சக்தி இருந்து வேண்டுமென்றே அந்தக் கடமையை நிறைவேற்றாமல் இருந்தவர்களுமுண்டு. ஆதலின், மேற்கண்ட ஆயத்தில் சொல்லப்பட்ட விஷயம் யாவருக்கும் பொதுவானதல்ல வென்பதும், நியாயமான காரணத்தால் ஹிஜ்ரத்துச் செய்ய இயலாமல் மக்காவிலேயே இருந்து விட்டவர்களை இவ்விதி கட்டுப்படுத்தாது என்பதும், ஹிஜ்ரத்துச் செய்யச் சக்தி இருக்கும் போது வேண்டுமென்றே ஹிஜ்ரத்துச் செய்யாமலிருந்து விட்டவர்களை மட்டும்தான் இவ்விதி கட்டுப்படுத்துமென்பதும் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

فَأُولَٰئِكَ عَسَى اللَّهُ أَنْ يَعْفُوَ عَنْهُمْ ۚ وَكَانَ اللَّهُ
عَفُوًّا غَفُورًا ۝

99. ஆகவே, அவர்கள் தாம் (இயலாதவர்கள்;) அவர்களை மன்னிக்க அல்லாஹ் போதுமானவன். மேலும், அல்லாஹ் (பாவங்களை) அழிப்பவனாக (நல்லடியார்களை) மன்னிப்பவனாக இருக்கின்றான்.

ஹிஜ்ரத்துச் செய்ய இயலாமல் இருப்பவர்களைக் குறித்து இந்த ஆயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- ஹிஜ்ரத்துச் செய்ய இயலாமல் இருப்பவர்கள் மீது ஹிஜ்ரத்துச் செய்வது கடமையாக ஏற்படவுமில்லை. அவர்கள் குற்றவாளிகளாகவும் இல்லை. அவ்வாறு இருக்க அவர்களை அல்லாஹ் மன்னிக்கக்கூடும் என்று கூறி இருப்பதன் கருத்து யாதெனில், ஹிஜ்ரத்துச் செய்ய இயலாமல் இருந்தாலும் ஹிஜ்ரத்துச் செய்வதற்கு அனுகூலமான சமயமும் சந்தர்ப்பமும் கிடைத்தவுடன் ஹிஜ்ரத் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்பதையும், ஹிஜ்ரத்துச் செய்ய வேண்டிய கடமை மிகவும் முக்கியமான கடமை என்பதையும் அதனை விட்டு நிர்ப்பயமாக இருக்கக் கூடாதென்பதையும் அறிவிப்பதற்காகவே யாகும்.

وَمَنْ يُهَاجِرْ فِي سَبِيلِ اللَّهِ يَجِدْ فِي الْأَرْضِ
مُرَاغَمًا كَثِيرًا وَسَعَةً ۚ وَمَنْ يَخْرُجْ مِنْ بَيْتِهِ
مُهَاجِرًا إِلَى اللَّهِ وَرَسُولِهِ ثُمَّ يُدْرِكْهُ الْمَوْتُ
فَقَدْ وَقَعَ أَجْرُهُ عَلَى اللَّهِ ۗ وَكَانَ اللَّهُ غَفُورًا
رَحِيمًا ۝

100. மேலும், எவர் அல்லாஹ்வுடைய பாதையில் ஹிஜ்ரத்துச் செய்கின்றாரோ அவர் பூமியில் ஏராளமான ஹிஜ்ரத்து செய்யும் இடத்தையும் வசதியையும் பெற்றுக் கொள்வார்; இன்னும், தம் வீட்டை விட்டு அல்லாஹ்விடத்திலும் அவனுடைய தூதரிடத்திலும் ஹிஜ்ரத்துச் செய்தவராக வெளியேறிய பிறகு அவருக்கு மரணம் வந்து விடுமாயின், நிச்சயமாக அவருடைய கூலி அல்லாஹ்வின்

(பொறுப்பின்) மீது ஏற்பட்டிருக்கின்றது; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாக பேரன்புடையோனாக இருக்கின்றான்.

مُرٰغَمًا **முராகமன்** என்பதற்கு ஹிஜ்ரத்துப் போகுமிடம் என்று பொருள் செய்யப்பட்டது. என்றாலும், இந்தப் பதத்திற்கு மண்ணைப் போடும் இடங்கள் என்று பொருள் செய்ய வேண்டும். ஒருவர் கேவலமடைய வேண்டும் என்று விரும்பினால் அவரைக் குறித்து அரபியர் اَرْغَمَ اللّٰهُ اَنْفَهٗ அவரது மூக்கில் அல்லாஹ் மண்ணைப் போடுவானாக என்று கூறுவது வழக்கம். மனிதருக்கு அழகைத் தரும் முக்கிய அவயவங்களில் மூக்கும் ஒன்று. ஆகவே, அதில் மண் விழுவது அவரைக் கேவலப்படுத்துவதாகும்.

எனவே, முஸ்லிம்களைக் கேவலமாக மதித்துத் தொந்தரவு செய்து ஊரை விட்டுச் செல்லும்படி நிர்ப்பந்தப்படுத்தியவர்கள் முன்னிலையில் முஸ்லிம்கள் வெளியிடத்திற் சென்று கவுரவமாகவும், தரித்திரமில்லாமலும் வாழ்வது அவர்களைக் கேவலப்படுத்துவதாக இருப்பதால் ஹிஜ்ரத்துச் செய்து குடியேறும் இடங்களுக்கு **முராகமன்** என்று பெயர் வந்தது. ஆகவே, **"அல்லாஹ்வின் பாதையில் எவர் ஹிஜ்ரத்துச் செய்கின்றாரோ அவர் பூமியில் ஏராளமான ஹிஜ்ரத்துச் செய்யும் இடத்தையும் வசதியையும் அவர் காண்பார்"** என்ற வசனம் ஹிஜ்ரத்துச் செய்யும்படி முஸ்லிம்களைத் தூண்டுவதாகவும், ஹிஜ்ரத்துச் செய்பவர்களுக்கு ஆறுதலளிப்பதாகவுமிருக்கிறது.

ரிவாயத்து:- மக்காவை ஹிஜ்ரத்துச் செய்யாமலிருக்கிற முஸ்லிம்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்து அருளப்பட்ட ஆயத்துகளை அந்த மனிதர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுப்பிய போது பனூலைத் கூட்டத்தைச் சேர்ந்த ஜுன்தபுப்னு லம்ரத் ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் தமது மக்களை நோக்கி "நான் இயலாதவர்களைச் சேர்ந்தவனல்லன்; எனக்கு வழி தெரியும், நான் மதீனா போய்ச் சேருவதற்கும் அதனைப் பார்க்கினும் அதிகமான தூரத்திற்குச் செல்வதற்கும் என்னிடம் போதுமான பணமிருக்கிறது. இன்றிரவை நான் மக்காவில் கழிக்க மாட்டேன். என்னை வாகனத்தின் மீதேற்றி விடுங்கள்" என்று சத்தியம் செய்து கூறினார். ஆனால், அப்போது அவர் மிகவும் வயது தளர்ந்தவராகவும் வாகனத்தின் மீது ஏறுவதற்குங் கூட சக்தியில்லாதவராகவும் இருந்தார். என்றாலும், அவரது மக்கள் அவரை ஒரு கட்டிலின் மீது ஏற்றி மதீனமா நகரை நோக்கி தூக்கிக் கொண்டு வந்தனர். ஆனால், மக்கத்திற்கு சமீபமாகவுள்ள தன்யீம் என்ற இடத்திற்கு வந்தபோதே அவருக்கு மரணத்திற்குரிய அடையாளங்கள் தோன்றின. ஆகவே, அவர் தமது இடக்கரத்தின் மீது தமது வலக்கரத்தை அடித்துக் கொண்டு "இறைவா, இது உனக்கு, இன்னும் இது உனது ரஸூலுக்கு, உனது நபி உனக்கு பைஅத்துச் செய்ததன்படி நான் உனக்கு பைஅத்துச் செய்கிறேன்" என்று கூறி மரணமடைந்தார். இவரது மரணச் செய்தியை ஸஹாபிகள் கேள்விப்பட்டு "அவர் மதீனாவில் மரணித்திருப்பாராயின் பரிபூரணமான நற்கூலியை அடைந்திருப்பார்" என்று கூறினர். மக்கத்து முஷ்ரிக்குகளுக்கு இச்செய்தி எட்டியபோது "இவர் விரும்பியதை அடையவில்லை" என்று சிரித்துக் கொண்டு கூறினர். அப்போது **"எவர் அல்லாஹ்வின் பாலும் அவனது ரஸூலின் பாலும் ஹிஜ்ரத்துச் செய்தவராகத் தமது வீட்டை விட்டுப் புறப்பட்டுப் பின்னர் அவரை மரணம் அடைகிறதோ அவருடைய கூலி அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருக்கிறது"** என்ற ஆயத்து அருளப்பட்டது. "முமீனான ஒருவர் ஒரு நல்ல காரியத்தை நாடி, அதனைப் பூர்த்தி செய்ய விடாமல் ஒரு தடங்கல் அவரைத் தடுத்து விடுமாயின் அந்த நல்ல காரியத்தைப் பூர்த்தி செய்த நன்மையை அல்லாஹு தஆலா அவருக்குக் கொடுப்பான்" என்பது இதிலிருந்து வெளியாகிறது.

ஹளரத் ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "ஒருவர் திருக்குர்ஆனை கற்றுக் கொள்வதற்குமுன் அவருக்கு மரணம் வந்து விட்டால், அவ்வாறு இறந்தவருக்கு கியாமத்து நாளில் கப்ரை விட்டு எழுப்பும் வரையில் அல்லாஹு தஆலா மலக்குகளை அனுப்பி குர்ஆனை கற்றுக் கொடுக்கும்படி நியமிப்பான் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது" என்று கூறி இருக்கிறார்கள்.

وَاِذَا ضَرَبْتُمْ فِي الْاَرْضِ فَلَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ

أَنْ تَقْصُرُوا مِنَ الصَّلٰوةِ ۖ إِنْ خِفْتُمْ أَنْ يَفْتِنَكُمُ
الَّذِينَ كَفَرُوا ۚ إِنَّ الْكٰفِرِينَ كَانُوا لَكُمْ عَدُوًّا مُبِينًا ﴿١٠١﴾

101. மேலும், நீங்கள் பூமியில் பிரயாணஞ் செய்யும்போது - 'நிராகரிப்பவர்கள் உங்களைத் தொந்தரவு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சினால் - தொழுகையில் நீங்கள் குறைத்துத் தொழுது) கொள்வது உங்களின் மீது குற்றமல்ல; (ஏனெனில்) நிராகரிப்பவர்கள் நிச்சயமாக உங்களுக்குப் பகிரங்க விரோதிகளாவர்.

பிரயாணத்தின் போது பகைவர்களைச் சந்தித்தல், மழை, நோய் முதலியவைகள் ஏற்படுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் எவ்வாறு தொழ வேண்டும் என்ற விபரம் இந்த ஆயத்திலிருந்து கூறப்படுகிறது.

பிரயாண காலத்தில் காஃபிர்களது விஷமங்களைப் பயந்தால் தொழுகையைச் சுருக்கிக் கொள்ளலாம் என்பது இந்த ஆயத்தின் கருத்து. இதிலிருந்துதான் கஸர் தொழுகை ஏற்பட்டது. எனவே, பிரயாணம் செய்யும்போது பயமேற்படுஞ் சமயத்தில் கஸர் தொழலாம் என்பது இந்த ஆயத்தின் மூலமாகவும், பயமில்லாத சமயத்திலும் கஸர் தொழலாம் என்பது ஹதீஸின் படியும் விதியாக ஏற்பட்டது. இது சம்மந்தமான இதர உபவிதிகளை இஸ்லாமியச் சட்ட நூற்களில் காண்க.

وَإِذَا كُنْتَ فِيهِمْ فَأَقَمْتَ لَهُمُ الصَّلٰوةَ فَلْتَقُمْ طَائِفَةٌ
مِنْهُمْ مَعَكَ وَلْيَأْخُذُوا أَسْلِحَتَهُمْ ۚ فَإِذَا سَجَدُوا فَلْيَكُونُوا
مِنْ وَرَائِكُمْ ۚ وَلْتَأْتِ طَائِفَةٌ أُخْرٰى لَمْ يُصَلُّوا
فَلْيُصَلُّوا مَعَكَ وَلْيَأْخُذُوا حِذْرَهُمْ وَأَسْلِحَتَهُمْ ۚ
وَدَّ الَّذِينَ كَفَرُوا لَوْ تَغْفُلُونَ عَنْ أَسْلِحَتِكُمْ

وَأَمْتِعَتِكُمْ فَيَمِيلُونَ عَلَيْكُمْ مَيْلَةً وَاحِدَةً ۚ
وَلَا جُنَاحَ عَلَيْكُمْ إِنْ كَانَ بِكُمْ أَذًى مِنْ
مَطَرٍ أَوْ كُنْتُمْ مَرْضٰى أَنْ تَضَعُوا أَسْلِحَتَكُمْ ۖ وَخُذُوا
حِذْرَكُمْ ۗ إِنَّ اللّٰهَ أَعَدَّ لِلْكٰفِرِينَ عَذَابًا مُهِينًا ﴿١٠٢﴾

102. இன்னும், (நபியே) நீர் அவர்களுக்குள் (யுத்த காலத்தில்) இருந்து, அவர்களுக்காகத் தொழுகையை நீர் (முன்னின்று) நிலை நிறுத்துவீராயின் (தொழுக வைத்தீராயின்), அவர்களிலிருந்து ஒரு கூட்டத்தினர் உம்முடன் (தொழுகையில்) நிற்கட்டும்; இன்னும், இவர்கள் தங்களுடைய ஆயுதங்களைத் தாங்கியிருக்க வேண்டும். எனவே, இவர்கள் சுஜூது செய்து விட்டால், (வேறு கூட்டத்தினராகிய) அவர்கள் உங்களுக்குப் பின்னால் (பாது காவலாய்) நிற்கட்டும்; பின்பு, தொழாமலிருந்த (பாதுகாத்த) கூட்டத்தினர் வந்து உம்முடன் தொழட்டும்; ஆனால், அவர்கள் தங்களுடைய தற்காப்பையும் தங்களின் ஆயுதங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்; (இவ்விதம் ஒரே தொழுகையில் இரு பிரிவினராகவும், அத்துடன் ஆயுத பாணிகளாகவும் தொழும்படி கட்டளை வந்ததற்குக் காரணமென்ன வென்றால் நீங்கள் தொழும்போது) உங்களின் ஆயுதங்களையும், உங்களின் பொருட்களையும் விட்டு நீங்கள் மறந்து போவதையும், அப்பால் உங்களின் மீது ஒரே தாக்காகத் தாக்குவதையும் நிராகரிப்பவர்கள் விரும்புகின்றனர். மேலும், மழையினாலோ அல்லது நீங்கள் நோயாளிகளாக இருப்பதாலோ உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால், நீங்கள் உங்களுடைய ஆயுதங்களை(க் கீழே) வைத்துவிடுவது உங்களின் மீது குற்றமல்ல; ஆனால், நீங்கள் உங்களின் தற்காப்பை (இயன்றவரையில்) எடுத்துக் கொள்வீர்களாக! நிச்சயமாக, அல்லாஹ் நிராகரிப்பவர்களுக்கென்று இழிவைத் தரும் வேதனையைச் சித்தப்படுத்தியுள்ளான்.

ரிவாயத்து:- கஸ்வத் தாத்துர்ரிக்கா என்ற போரில் லுஹருடைய வேளையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் தோழர்களுக்கு இமாமாக நின்று தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருப்பதை முஷ்ரிக்குகள் பார்த்தனர். அப்பொழுது அவர்களை வெட்டச் செல்லாமலிருந்து விட்டதைக் குறித்து அவர்களிற் சிலர் வருந்தினர். அதற்கு வேறு சிலர் "இப்பொழுது அவர்களை விட்டு விடுங்கள். இதற்குப் பின் அவர்களுக்கு மற்றொரு தொழுகை இருக்கிறது. அவர்களது பெற்றோர்களையும், அவர்களில் உள்ள பிள்ளைகளையும், பொருள்களையும் பார்க்கினும் அந்தத் தொழுகையை அவர்கள் அதிகமாக நேசிக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அதனை நிறைவேற்றுவதை நீங்கள் பார்த்தால் அவர்கள் மீது பாய்ந்து விழுந்து அவர்களை வெட்டுங்கள்" என்று கூறினர். அப்போது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து ஸலாத்துல் கௌஃப் அதாவது பகைவர்களைப் பற்றிப் பயப்பட வேண்டிய நேரத்தில் தொழும் விபரத்தைப் பற்றிய இந்த ஆயத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்து, காஃபிர்கள் செய்திருக்கிற சதியாலோசனையையும் தெரியப் படுத்தினார்கள். முஸ்லிம்கள் தங்களது தந்தையரையும், மக்களையும், செல்வங்களையும் பார்க்கினும் அதிகமாக நேசிப்பதாகக் காஃபிர்கள் கூறிய தொழுகை அஸர்த் தொழுகை என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் ரிவாயத்துச் செய்திருக் கிறார்கள். இவ்விதமாகத் தொழுவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மட்டுந்தான் அனுமதிக்கப்படவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகுங் கூட பகைவர் பயமேற்படுங் காலத்தில் இந்த ஆயத்திற் கண்ட விதமாகத் தொழலாம் என்று ஜும்ஹுர்கள் அதாவது பெரும்பாலானவர்கள் கூறி இருக்கிறார்கள். இது சம்மந்தமான இதர உபவிதிகளை இஸ்லாமியச் சட்ட நூற்களில் **"ஸலாத்துல் கௌஃப்"** என்ற பாடத்தில் கண்டு தெளிக.

ரிவாயத்து:- பனுஅன்மார் கோத்திரத்தார் மீது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படையெடுத்துச் சென்றார்கள். இறைவன் அக்கோத்திரத்தாருக்குத் தோல்வியை

அளித்தான். அவர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். ஒருவரையும் காணவில்லை. பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் மற்ற தோழர்களும் தங்கள் ஆயுதங்களைக் கழற்றி வைத்து விட்டுத் தங்கள் காரியங்களில் கவனமாக இருந்தார்கள். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏதோ ஒரு காரியமாக தங்கள் ஸஹாபிகளை விட்டுப் பிரிந்து தனியே வந்து ஒரு மரத்தினடியில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது கவ்ர துப்னுல் ஹாரிதில் முஹாரபீ என்பவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனித்திருப்பதைக் கண்டு தமது மனிதர்களிடம் "நான் முஹம்மதைக் கொல்லவில்லையானால் என்னை அல்லாஹ் கொன்று விடட்டும்" என்று கூறி வாளாயுதத்துடன் மலையை விட்டுக் கீழே இறங்கி வந்தான். இவன் வருவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கவனிக்கவில்லை. ஆகவே, அவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தமது வாளாயுதத்தை உருவிக் கொண்டு "என்னை விட்டு உம்மைக் காப்பது யார்?" என்று கூறினான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அல்லாஹு அஸ்ஸவஜல்ல" என்று பதிற் கூறி "நாயனே நீ நாடியபடி கவ்ரதுப்னுல் ஹாரிதை விட்டு எனக்குப் போதுமாகிக் கொள்வாயாக" என்று கூறினார்கள். பிறகு அவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வெட்டுவதற்காகத் தமது வாளாயுதத்தை ஓங்கினான். அதற்குள் அவனது தோள் புஜங்களுக்கிடையில் ஒரு சுளுக்கேற்பட்டுக் கீழே விழுந்தான். அவனது கையிலிருந்த வாள் அவனை விட்டு அகன்றது. உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனை எடுத்துக் கொண்டு "இப்பொழுது என்னை விட்டு உம்மைக் காப்பது யார்" என்று வினவினார்கள். அதற்கு அவன் "ஒருவருமில்லை" என்று கூறினான். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. முஹம்மது அவனது அடிமையாகவும் தூதராகவும் இருக்கிறார் என்று நீர் சாட்சிகூறும்; உமது வாளாயுதத்தை உமக்குத் தந்து விடுகிறேன்" என்று கூறினார்கள். அதற்கவன் அவ்வாறு சொல்ல மாட்டேன். உம்மை எதிர்த்து ஒருபோதும் போரிட மாட்டேன். உமக்கு விரோதமாகப்

பகைவருக்கு உதவி செய்யவுமாட்டேன் என்று சாட்சி கூறுகிறேன்" என்று கூறினான். உடனே, அவனது வாளாயுதத்தை அவனிடம் கொடுத்து விட்டார்கள். அப்பொழுது அவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "என்னைப் பார்க்கினும் நீர்தான் சிறந்தவர் என்று இறைவன் மீது சத்தியமாகக் கூறுகிறேன்" என்றான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உம்மைப் பார்க்கினும் நான் அதிக தகுதியுடையவர்தான்" என்று கூறினார்கள். பிறகு அவன் தனது மனிதர்களிடம் சென்று நிகழ்ந்த விபரத்தைக் கூறியபோது அவர்களிற் சிலர் ஈமான் கொண்டு இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். இச்சம்பவம் நிகழ்ந்த பிறகு இறைவன் "உங்களது தற்காப்பை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்ற வசனத்தை அருளினான்.

فَإِذَا قَضَيْتُمُ الصَّلٰوةَ فَاذْكُرُوا اللّٰهَ قِيٰمًا وَّقُعُوْدًا
وَّعَلٰى جُنُوْبِكُمْ ۚ فَإِذَا اطْمَأْنَنْتُمْ فَأَقِيْمُوا الصَّلٰوةَ ۚ
إِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ كِتٰبًا مَّوْقُوْتًا ۝

103. எனவே, நீங்கள் தொழுகையை நிறைவேற்றிவிட்டால் நின்றவர்களாகவும் உட்கார்ந்தவர்களாகவும், உங்கள் விலாவின் மீது சாய்ந்தவர்களாகவும், அல்லாஹ்வை தியானிப்பீர்களாக! நீங்கள் (விரோதிகளின் எதிர்ப்பை விட்டு) அச்சந் தீர்ந்தால், நீங்கள் தொழுகையை (வழக்கப்படி) நிறைவேற்றுங்கள். (ஏனெனில்) நிச்சயமாகத் தொழுகையானது விசுவாசிகளின் மீது குறிப்பிட்ட காலங்களில் (தொழுவதற்கு) விதிக்கப் பெற்றிருக்கின்றது.

தொழுகையை இன்னின்ன நேரத்தில் இவ்விதமாகத் தொழ வேண்டும் என்று விதியேற்படுத்தி இருப்பதாகவும், தொழுகையை நிறைவேற்றிய பின் அல்லாஹு தஆலாவை திக்ரு செய்ய வேண்டும் என்பதும், நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும் திக்ரு செய்யலாம் என்பதும் இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட

விதிகளாகும். திக்ரு என்பதற்கு அல்லாஹு தஆலாவின் திருநாமத்தை நாவினால் ஜபித்தல், அவனிடம் பிரார்த்தனை செய்தல் முதலியவைகள் என்பது இங்கு கருத்து. சிலர் தொழுகையும் இதில் அடங்கி இருக்கிறது என்று விளக்கங் கூறி இருக்கின்றனர்.

فِي الْحَدِيْثِ مَنْ تَرَكَ صَلَاةً حَتّٰى مَضٰى وَقْتُهَا ثُمَّ قَضٰى
عُذِّبَ فِي النَّارِ حُقْبًا وَالْحُقْبُ ثَمَانُوْنَ سَنَةً

தவிரவும், தொழுகைக்கு நேரத்தைக் குறிப்பிட்டு விதியாக்கப் பட்டிருப்பதால் அந்தந்தக் காலத்தில் தொழுகையைத் தவற விடாமல் நிறைவேற்றி விடவேண்டும் என்பதும் இந்த ஆயத்தின் மூலம் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

وَلَا تَهِنُوْا فِي ابْتِغَاءِ الْقَوْمِ ۚ إِنْ تَكُوْنُوْا تَأْلَمُوْنَ
فَإِنَّهُمْ يَأْلَمُوْنَ كَمَا تَأْلَمُوْنَ ۚ وَتَرْجُوْنَ مِنَ اللّٰهِ
مَا لَا يَرْجُوْنَ ۗ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ۝

104. இன்னும், (உஹுத் யுத்தத்திற்கு வந்த பகைவர்களின்) கூட்டத்தினரைத் தேடும் விஷயத்தில் நீங்கள் (சோம்ப)வேண்டாம்; நீங்கள் (காயங்களால்) வேதனையடைந்தவர்களாக இருந்தால், நீங்கள் வேதனையடைவது போலவே நிச்சயமாக(ப் பகைவர்களான) அவர்களும் வேதனையடைகின்றார்கள். ஆனால், அவர்கள் (அல்லாஹ்விடமிருந்து) ஆதரவு வைக்காததை (அல்லாஹ்வின் உதவியை) நீங்கள் அல்லாஹ்விடமிருந்து ஆதரவு வைக்கின்றீர்கள்; மேலும், அல்லாஹ் (யாவும்) அறிபவனாகவும் மிக்க நிபுணனாகவும் இருக்கின்றான்.

இந்த ஆயத்து "பத்ரு ஸுக்ராவிற்கு" நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படை திரட்டிச் சென்றதைக் குறித்து அருளப்பட்டது. உஹதுப் போர் முடிந்த போது குறைஷியரின் தலைவரான அபூஸுஃப்யான் நபி ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்களிடம் "வருகிற வருடத்தில் பத்ருடைய காலத்தில் நாம் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட வேண்டும்" என்று கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சம்மதித்து இருந்தார்கள். என்றாலும், அபூசுஃப்யானுக்குப் பீதியுண்டாகி விட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யுத்தத்திற்கு வரும்படி அழைத்து விட்டு அப்புறம் யுத்தத்திற்குச் செல்லாவிடில் கேவலம் வரும் என நினைத்து வருந்தியதுடன் மூமின்களுக்குப் பயத்தை உண்டாக்கி விடும்படி நயீமுப்னு மஸ்ஊத் என்பவரை மதீனாவிற் கனுப்பினார். அவர் மதீனாவிற்கு வந்தபோது மூமின்கள் பத்ரு ஸுக்ராவில் போரிடுவதற்காக முஸ்திப்பு செய்து கொண்டிருப்பதைப் பார்த்து "உங்களை எதிர்ப்பதற்காக மனிதர்கள் கூடி இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்" என்று கூறினான். இது சில மூமின்களுள்ளத்தில் குழப்பத்தை உண்டாக்கியது. ஆகவே, அவர்கள் உஹதுப் போரில் காயமடைந்ததை காரணம் கூறினார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஒருவர்கூட என்னுடன் சேர்ந்து வெளியேறா விடினும் நான் மட்டுமேனும் வெளியேறுவேன்" என்று கூறினார்கள். அப்பொழுது இந்த ஆயத்து அருளப்பட்டது என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

إِنَّا أَنزَلْنَا إِلَيْكَ الْكِتَابَ بِالْحَقِّ لِتَحْكُمَ بَيْنَ النَّاسِ
بِمَا أَرَاكَ اللَّهُ ۚ وَلَا تَكُن لِّلْخَائِنِينَ خَصِيمًا ﴿١٠٥﴾

105. நிச்சயமாக நாம் வேதத்தை உண்மையைக் கொண்டு உம்மிடம் இறக்கியிருக்கின்றோம்; (ஏனெனில்) அல்லாஹ் உமக்கு (அவ்வேதத்தில்) காண்பித்திருப்பதைக் கொண்டு மனிதர்களுக்கிடையில் நீர் தீர்ப்புச் செய்வதற்காகவே; மேலும், நீர் மோசடிசெய்வோருக்கு (உதவியாய் வழக்கு) வாதாடுகிறவராக ஆகிவிட வேண்டாம்.

பனூலுபர் கூட்டத்தைச் சேர்ந்த துஃமத்துப்னு அபீரக் என்பவர் தனது அண்டை வீட்டுக்காரரான கத்தாதத் துப்னுன்னுஃமான்

ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் வீட்டில் திருடிவிட்டு, அந்தத் திருட்டை மிகச் சாமர்த்தியமாக மறைத்து ஜைதுப்னுஸ்ஸமீன் என்ற ஒரு யூதரின் மீது சுமத்தி விட்டார். அன்றியும் அவரைச் சேர்ந்த இதர முஸ்லிம்களும் அந்த யூதரைக் குற்றவாளி என்று கூறி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அந்த யூதரின் மீது திருட்டு வழக்குக் கொண்டுவந்து முறையிட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இதனை நம்பி விட்டார்கள். என்றாலும், இது சம்மந்தமாக முடிவு கூறாமற் தயங்கிக் கொண்டு வஹியை எதிர்பார்த்திருந்தார்கள். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. ஆகவே, யூதர் குற்றவாளியல்ல வென்பதும், துஃமத்துப்னு அபீரக் என்பவர்தான் குற்றவாளி என்பதும் வெளியாயிற்று.

وَاسْتَغْفِرِ اللَّهَ ۖ إِنَّ اللَّهَ كَانَ غَفُورًا رَّحِيمًا ﴿١٠٦﴾

106. இன்னும், (நீர்) அல்லாஹ்விடத்தில் மன்னிப்புத் தேடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் (நல்லடியார்களுக்கு) மன்னிப்புச் செய்பவனாக பேரன்புடையோனாக இருக்கின்றான்.

இந்த ஆயத்து இதற்கு மேலிலுள்ள ஆயத்திற் சொல்லப்பட்ட விஷயத்துடன் சம்பந்தப்பட்டது. மேலே சொல்லப்பட்ட திருட்டு விஷயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த யூதருக்குப் பாதகம் செய்து விடவில்லை யென்றாலும், அவர்கள் நாடியபடி தீர்ப்புச் செய்திருந்தால் பாதக மேற்பட்டிருக்குமல்லவா? ஆகவே, இதற்காக இறைவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தன்னிடம் பாவமன்னிப்புக் கேட்கும்படி கட்டளை யிட்டுள்ளான். மேலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்விதமாகத் தீர்ப்புச் செய்திருந்தாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சட்டப்படி குற்றவாளியாக முடியாது. ஆயினும் நல்லோர்களது நற்காரியங்கள் கூட அல்லாஹ்வின் சமூகத்தை நெருங்கியவர்களான முகர்ரபானவர்களுக்குப் பாவமான காரியமாக இருக்கிறது என்றபடி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாவமன்னிப்புக்

கேட்கும்படி இங்கு கட்டளையிடப்பட்டிருக்கிறார்களே தவிர, உண்மையாகவே பாவத்தைச் செய்து விட்டார்கள் என்பதற்காகவல்ல.

وَلَا تُجَادِلْ عَنِ الَّذِينَ يَخْتَانُونَ أَنفُسَهُمْ ۚ إِنَّ
اللَّهَ لَا يُحِبُّ مَن كَانَ خَوَّانًا أَثِيمًا ﴿١٠٧﴾

107. இன்னும், தங்களுக்குத் தாங்களே மோசடி செய்து கொள்கின்றவர்களுக்கு(ச் சாதகமாக) நீர் வாதாட வேண்டாம்; (ஏனெனில்,) நிச்சயமாக, பெரும் மோசக்காரனாக, பாவியாக ஆகிவிட்டவனை அல்லாஹ் நேசிக்க மாட்டான்.

இந்த ஆயத்தும் மேற்கண்ட ஆயத்துகளின் விஷயத்தைச் சேர்ந்ததேயாகும். மனிதர்கள் பிறருக்குத் துரோகம், சதி, வஞ்சனை, சூது செய்வதால் பாவியாகி விடுகிறார்கள். ஆதலின், பிறருக்குச் சதி செய்பவர்கள் தங்களுக்கே சதி செய்து கொள்ளுகிறார்கள். எனவே, இந்த இடத்தில் மேற்கண்ட துஃமா போன்றவர்கள் யூதருக்குச் செய்த சதியைத் தங்களுக்குத் தாங்களே சதி செய்கிறார்களென்று கூறப்பட்டது.

يَسْتَخْفُونَ مِنَ النَّاسِ وَلَا يَسْتَخْفُونَ مِنَ اللَّهِ وَهُوَ
مَعَهُمْ إِذْ يُبَيِّتُونَ مَا لَا يَرْضَىٰ مِنَ الْقَوْلِ ۚ وَكَانَ
اللَّهُ بِمَا يَعْمَلُونَ مُحِيطًا ﴿١٠٨﴾

108. (மோசடி செய்பவர்களாகிய) அவர்கள் மனிதர்களிடம் இருந்து மறைந்து கொள்ளத் தேடுகின்றார்கள்; மேலும், அவர்கள் அல்லாஹ்விடமிருந்து மறைந்து கொள்ளத் தேடுகின்றனரல்லர்; அவன் (அல்லாஹ்) பொருந்திக் கொள்ளாத பேச்சை அவர்கள் (இரவில் அந்தரங்கமாகக் கூடிப் பேசுவதை வெளி மனிதர்களுக்கு) மறைக்கும் வேளையில் அவன் (அல்லாஹ்) அவர்களுடனேயே இருக்கின்றான்; மேலும், அல்லாஹ் அவர்கள் செய்வதைச் சூழ்ந்தறிபவனாக இருக்கின்றான்.

ரிவாயத்து:- துஃமா செய்த திருட்டு வெளிப்பட்டதால் அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் கூடி இரவில் ஆலோசனை செய்தனர். அப்போது துஃமா தம்மைச் சேர்ந்தவர்களிடம் “நான் பொய்ச் சத்தியம் செய்கிறேன், நான் முஸ்லிமாக இருப்பதால் எனது சத்தியம் அங்கீகரிக்கப்படும்” என்று கூறினார். தங்களிலுள்ள ஒருவருக்குத் திருட்டு அவமானமும், தண்டனையும் வருவதைத் தடுப்பதற்காக நாங்களும் பொய்ச் சாட்சியம் கூறுகிறோம் என்று அவருடைய இனத்தார்களும் அங்கீகரித்தனர். இவ்விதமாக இவர்கள் செய்த சதியை இறைவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கூறி “மற்றவர்கள் தங்களைக் கேவலமாக நினைப்பார்கள் என்ற வெட்கத்தால் மனிதர்களுக்கு மறைகிறார்கள். ஆனால், எப்பொழுதும் அவர்களுடனிருந்து கொண்டிருக்கிறவனாகிய அல்லாஹ்விற்கு அவர்கள் வெட்கப்பட்டு மறைகிறார்களில்லை” என்பதை இங்கு சுட்டிக்காட்டியுள்ளான்.

هَا أَنتُمْ هَٰؤُلَاءِ جَادَلْتُمْ عَنْهُمْ فِي الْحَيَاةِ الدُّنْيَا
فَمَن يُجَادِلُ اللَّهَ عَنْهُمْ يَوْمَ الْقِيَامَةِ أَم مَّن يَكُونُ
عَلَيْهِمْ وَكِيلًا ﴿١٠٩﴾

109. மனிதர்களே! நீங்கள் இவ்வுலக (மாகிய அற்ப) வாழ்வில் (மோசடி செய்பவர்களாகிய) அவர்களுக்காக வாதாடுகின்றீர்கள்; (அப்படியானால்) இறுதிநாளில் அல்லாஹ்விடத்தில் அவர்களுக்காக வாதாடுபவன் யார்? அல்லது அவர்களுக்காகப் பொறுப்பேற்றுக் கொள்பவன் யார்?

துஃமாவும், அவரைச் சேர்ந்தவர்களும் வெளித் தோற்றத்தில் முஸ்லிம்களாக இருந்ததால் அவர்களுக்காகச் சில உண்மை மூமின்கள் பரிந்து பேசினர். இதனை இந்த ஆயத்தில் இறைவன் கண்டித்திருக்கிறான்.

ரிவாயத்து:- இதற்கப்புறம் துஃமா மதீனாவிலிருந்து ஒழித்தோடி மக்காவிற்கு வந்து முர்த்தத்தாகி (அதாவது இஸ்லாம் மார்க்கத்தை விட்டு மாறி) விட்டதாகவும், ஒரு வீட்டைக் கன்னம் வைக்கையில் அந்த வீட்டுச் சுவர் விழுந்து இறந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

وَمَن يَعْمَلْ سُوٓءًا أَوْ يَظْلِمْ نَفْسَهُۥ ثُمَّ يَسْتَغْفِرِ
ٱللَّهَ يَجِدِ ٱللَّهَ غَفُورًا رَّحِيمًا ﴿١١٠﴾

110. மேலும், எவரேனும் தீமையைச் செய்துவிட்டு - அல்லது, தனக்குத் தானே) அநியாயஞ் செய்து விட்டுப் பின்பு (மனம் வருந்தி அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கேட்டால், (அவர்) அல்லாஹ்வைப் பாவமன்னிப்புச் செய்பவனாக பேரன்பு உடையோனாகக் கண்டு கொள்வார்.

துஃமா முதலியவர்களைப் போல் பிறருக்குத் தீங்கு செய்தாலும் அல்லது அவரது கூட்டத்தினரைப் போல் பொய் சாட்சியங் கூறித் தங்களுக்கே தீங்கிழைத்துக் கொண்டாலும் அல்லாஹு தஆலாவிடம் தவ்பாச் செய்து பிழை பொறுக்கும்படியாகப் பிரார்த்தித்தால் அவன் அவர்களை மன்னித்து விடுவான் என்பது இந்த ஆயத்தின் கருத்து. பாவம் செய்பவர்கள் இறைவனது கிருபை தங்களுக்குக் கிடைக்காது என்று நம்பிக்கை இழக்காமலிருக்கவும், அவனிடம் தவ்பாச் செய்வதன் மூலம் அவனது கிருபையை அடையலாம். ஆதலின் பாவமன்னிப்புக் கேட்கும்படி பாவிகளுக்கு இந்த ஆயத்தில் உற்சாகமூட்டப் பட்டிருக்கிறது.

وَمَن يَكْسِبْ إِثْمًا فَإِنَّمَا يَكْسِبُهُۥ عَلَىٰ نَفْسِهِۦ ۚ
وَكَانَ ٱللَّهُ عَلِيمًا حَكِيمًا ﴿١١١﴾

111. இன்னும், எவன் குற்றத்தைச் சம்பாதிக்கின்றானோ (அவன்) அதை (யெல்லாம்) தனக்கு கேடாகத்தான் சம்பாதிப்பான்;

மேலும் அல்லாஹ் (யாவரையும்) அறிபவனாக மிக்க நிபுணனாக இருக்கின்றான்.

குற்றத்தைச் செய்வது இம்மையிலும், மறுமையிலும் குற்றம் செய்பவருக்கே தீங்காக இருப்பதால் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَمَن يَكْسِبْ خَطِيٓـَٔةً أَوْ إِثْمًا ثُمَّ يَرْمِ بِهِۦ بَرِيٓـًٔا فَقَدِ
ٱحْتَمَلَ بُهْتَٰنًا وَإِثْمًا مُّبِينًا ﴿١١٢﴾

112. மேலும், எவன் ஒரு (சிறிய) தவறையோ அல்லது ஒரு (பெரிய) குற்றத்தையோ செய்துவிட்டுப் பின்பு அதைக் குற்றமற்ற (வேறொரு)வன் மீது (அவன் செய்ததாக) எறிகின்றானோ, அ(வ்வாறு எறிந்த)வன் நிச்சயமாக அபாண்டப் பொய்யையும் பகிரங்கமான பாவத்தையும் சுமந்து கொண்டான்.

கத்தீஅத்துன், என்பதற்கு தவறு என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும், வேண்டுமென்று செய்யாமல் நடந்த குற்றம், சிறு பாவச் செயல்கள் என்பது இதன் கருத்து. **இத்முன்** என்பதற்கு குற்றம் என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், வேண்டுமென்று செய்த குற்றங்கள், பெரும்பாவச் செயல்கள் என்பது இதன் கருத்து.

وَلَوْلَا فَضْلُ ٱللَّهِ عَلَيْكَ وَرَحْمَتُهُۥ لَهَمَّت
طَّآئِفَةٌ مِّنْهُمْ أَن يُضِلُّوكَ وَمَا يُضِلُّونَ إِلَّآ
أَنفُسَهُمْ ۖ وَمَا يَضُرُّونَكَ مِن شَىْءٍ ۚ وَأَنزَلَ ٱللَّهُ
عَلَيْكَ ٱلْكِتَٰبَ وَٱلْحِكْمَةَ وَعَلَّمَكَ مَا لَمْ تَكُن
تَعْلَمُ ۚ وَكَانَ فَضْلُ ٱللَّهِ عَلَيْكَ عَظِيمًا ﴿١١٣﴾

113. ஆனால், அல்லாஹ்வின் அருளும் அவனது நல்லருளும் உம்மீது இல்லையானால், உம்மை வழிகெடுக்க அவர்களிலிருந்து ஒரு கூட்டத்தினர் நிச்சயமாய் முயற்சி செய்வர்; ஆனால் (அவர்கள்) தங்களைத் தவிர (வேறு யாரையும்) வழி கெடுக்க மாட்டார்கள்; இன்னும், அவர்கள் உமக்கு எவ்விதத் தீங்குஞ் செய்யமாட்டார்கள்; மேலும், அல்லாஹ் உம்மீது வேதத்தையும் ஞானத்தையும் அருளி நீர் அறியாமலிருந்ததை உமக்கு அறிவித்திருக்கின்றான்; ஆதலின், அல்லாஹ்வின் அருள் உம்மீது மகத்தானதாக இருக்கின்றது.

துஃமாவைச் சேர்ந்தவர் இரவில் கூடி ஆலோசனை செய்து யூதருக்கு விரோதமாகத் தீர்ப்பு வாங்கி விட வேண்டுமென்று முடிவு செய்ததைப் பற்றி இங்கு கூறப்பட்டிருப்பதுடன், அவர்களது இம்முயற்சி வெற்றி அடையாதென்பதும், அவ்வாறு வெற்றி அடையாதிருப்பதற்குக் காரணமென்ன வென்பதும் இங்கு கூறப்பட்டிருக்கின்றன.

“அல்லாஹு தஆலா திருக்குர்ஆனையும், அதிலுள்ள கட்டளைகளையும் உமக்கு அருளி, நீர் தெரிந்திருக்காத மறைவான செய்திகளையும் அறிவித்துக் கொண்டிருக்கும் போது, நீர் குற்றமற்ற யூதருக்கு எதிராகவும், குற்றவாளியான துஃமாவிற்கு சாதகமாகவும் தீர்ப்புச் செய்துவிட வேண்டும் என்று முயலுகின்றனர். அல்லாஹு தஆலாவுடைய அருளும், கிருபையும் உமக்கு இருந்து வருவதால் தங்களது இம்முயற்சியில் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள்” என்பது இந்த ஆயத்தின் கருத்து.

لَهَمَّت طَّائِفَةٌ مِّنْهُمْ أَن يُضِلُّوكَ **அவர்களிலிருந்து ஒரு கூட்டம் உம்மை (வழி) தவறச் செய்ய முயன்றிருக்கும்** என்பதிலிருந்து அவர்கள் முயற்சி செய்யவே இல்லை என்பது கருத்தல்ல. அவர்களது முயற்சி வெற்றியடையவில்லை என்பது கருத்து. “உம்மை வழி தவறச் செய்ய” என்பதற்கு குற்றமற்ற யூதருக்கு எதிராகவும் குற்றவாளியான துஃமாவுக்கு சாதகமாகவும் தீர்ப்புச் செய்ய என்பது கருத்து.

لَا خَيْرَ فِي كَثِيرٍ مِّن نَّجْوَاهُمْ إِلَّا مَنْ أَمَرَ بِصَدَقَةٍ

أَوْ مَعْرُوفٍ أَوْ إِصْلَاحٍ بَيْنَ النَّاسِ ۚ وَمَن يَفْعَلْ
ذَٰلِكَ ابْتِغَاءَ مَرْضَاتِ اللَّهِ فَسَوْفَ نُؤْتِيهِ أَجْرًا عَظِيمًا

114. தர்மம், அல்லது நன்மை, அல்லது மனிதர்களிடையே சமாதானமுண்டாக்குவது ஆகியவற்றை ஏவியதைத் தவிர (மற்றுள்ள) அவர்களின் வார்த்தைகளுள் அனேகத்தில் நன்மையே கிடையாது; மேலும், யாரேனும் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடி இதைச் செய்வானாயின், அவனுக்கு மகத்தான நற்கூலியை நாம் விரைவில் கொடுப்போம்.

இரகசியமாகக் கூடி ஆலோசனை செய்யுங் காரியங்களில் பல நன்மையானவைகளாக இல்லை. ஆனால், கடமையாகவுள்ள தர்மத்தைச் செய்யும்படி ஏவுவதற்காக, அல்லது மார்க்கத்தில் நல்ல காரியமென்று அங்கீகரிக்கப்பட்டவற்றைச் செய்யும்படி ஏவுவதற்காக, சச்சரவிட்டுப் பிளவு பட்டிருக்கும் மனிதர்களை இணக்கி ஒன்றுபடும்படி ஏவுவதற்காகக் கூடிப் பேசுகிற இரகசியத்தில் நன்மை இருக்கிறது. இக்காரியங்களை எவர் அல்லாஹ்விற்காகச் செய்கிறாரோ அவருக்கு மகத்தான நற்கூலியை இறைவன் அளிப்பான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ஹதீஸ்:- தொழுகை, தர்மம் ஆகிவற்றைப் பார்க்கினும் சிறந்த அந்தஸ்துள்ளதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு மனிதர்கள் “நல்லது யாரசூலல்லாஹ்” என்று கூறினர். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “பிளவுபட்டு இருப்பவரை இணக்குவது” என்று கூறினார்கள்.

وَمَن يُشَاقِقِ الرَّسُولَ مِن بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ
الْهُدَىٰ وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّىٰ

وَنُصْلِهٖ جَهَنَّمَ ؕ وَسَآءَتْ مَصِيْرًا ۟

115. இன்னும், எவன் தனக்குச் சன்மார்க்கம் வெளியான பின்பும் (நமது) தூதருக்கு மாறுசெய்து, விசுவாசிகளின் மார்க்கம் அல்லாததைப் பின்பற்றுகின்றானோ அவனை அவன் தேர்ந்தெடுத்த (துன்மார்க்கமான) தற்குக் காரியதரிசியாக ஆக்குவோம்; மேலும், அவனைப் பாவிகள்) சேருமிடத்தில் கெட்டதான நரகத்தில் புகுத வைப்போம்.

الْهُدٰى **அல்ஹுத** நேர்வழி என்றது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவின் தூதராக இருக்கிறார்கள் என்பதை அறிவிக்கும்படியான அற்புதங்களென்னும் முஃஜிஸாக்கள் என்பது கருத்து.

سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ **ஸபீலில் மூமினனீன்** அதாவது மூமின்களது பாதை என்பதற்கு சன்மார்க்க இஸ்லாம் என்பது கருத்து.

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَ يَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا ۟

116. நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை(யாக வேறு எதுவும்) வைக்கப்படுவதை மன்னிக்கமாட்டான். ஆனால், இது அல்லாத (வேறு பாவத்தை அவன் விரும்பியவர்களுக்கு மன்னித்து விடுவான்; எனவே எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ அவன் நிச்சயமாக வெகு தூரவழி கேட்டில் தவறி விட்டான்.

ஒரு வயோதிகர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிம் வந்து "அல்லாஹ்வின் தூதரே, நான் பாவத்தில் மூழ்கிய கிழவன். என்றாலும், அல்லாஹ்வை நான் அறிந்து அவனுக்கு ஈமான்

கொண்டதிலிருந்து அவனுக்கு இணைவைக்கவுமில்லை, அவனைத் தவிர வேறு எவரையும் எனக்குக் காரியஸ்தராக்கிக் கொள்ளவுமில்லை, மன தைரியத்துடன் பாவங்களில் நான் பிரவேசிக்கவுமில்லை, அல்லாஹ்வை விட்டு நான் ஓடிப் போய் விடலாம், அதன் மூலமாக அவனைத் தோற்கடித்து விடலாம் என்று ஒரு இமைப் பொழுது கூட நான் சந்தர்ப்பம் பார்க்கவுமில்லை, ஆனால், எனது பாவங்களுக்காக நான் பச்சாதாபப்பட்டு தவ்பாச் செய்பவனாகவுமிருக்கிறேன். ஆகவே, அல்லாஹ்விடத்தில் எனது நிலை எவ்வாறு என்பதைப் பற்றித் தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது.

اِنْ يَّدْعُوْنَ مِنْ دُوْنِهٖۤ اِلَّاۤ اِنٰثًا ۚ وَاِنْ يَّدْعُوْنَ اِلَّا شَيْطٰنًا مَّرِيْدًا ۟ۙ

117. (இணை வைப்பவர்களாகிய) இவர்கள் அவனை (அல்லாஹ்வை)த் தவிர்த்துப் பெண் (விக்கிரகங்)களைத் தவிர (இறைவனை) வணங்குகிறதில்லை; மேலும், மூர்க்கத்தனமுள்ள (ஷைத்தானை) பைசாசத்தைத் தவிர (அல்லாஹ்வை) வணங்குகிற தில்லை.

இணைவைப்போர்கள் பெரும்பாலும் தங்களது விக்கிரகங் களைப் பெண்ணுருவத்தில் செய்து விதவிதமான ஆபரணங்களை அணிவிப்பதும், அவற்றிற்கு பெண்களது பெயர்களை அளிப்பதும் வழக்கமாக இருக்கிறது. மேலும், உயிரில்லாத தாதுவர்க்கத்தைச் சேர்ந்தவற்றைப் பெண்பாலாக அழைப்பதும் வழக்கம். இம்முறையில் விக்கிரகங்களை இந்த ஆயத்தில் اِنٰثًا **இனாதன்** அதாவது பெண்களை என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும், ஷைத்தான்தான் விக்கிரக ஆராதனை செய்யும்படி முஷ்ரிக்குகளைத் தூண்டியதால் விக்கிரக ஆராதனை செய்வது ஷைத்தானை வணங்குவதாகவே இருக்கிறது. தவிரவும், அக்காலத்தில் ஒவ்வொரு விக்கிரகத்திலும் ஒரு ஷைத்தான் இருந்து கொண்டு குறிகாரர்களுடனும் கோடாங்கிக்

காரர்களுடனும் பேசிக் கொண்டிருந்தனவென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, இவ்விரு காரியங்களையும் கவனித்து "முஷ்ரிக்குகள் மூர்க்கத்தனமுள்ள பைசாசத்தைத் தவிர (அல்லாஹ்வை) வணங்குகிறதில்லை" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

لَعَنَهُ اللّٰهُ ۘ وَقَالَ لَاَتَّخِذَنَّ مِنْ عِبَادِكَ نَصِيْبًا مَّفْرُوْضًا ۙ

118. அல்லாஹ் (ஷைத்தானாகிய) அவனைச் சபித்து விட்டான்; மேலும், (அல்லாஹ்வை நோக்கி) 'நிச்சயமாக நான் உனது அடியார்களிலிருந்து நிர்ணயிக்கப் பெற்ற பாகத்தை எடுப்பேன்' என்று அவன் கூறினான்.

இதற்கு முந்திய ஆயத்திற் சொல்லப்பட்ட சண்டிப் பைசாசத்தின் நிலை இந்த ஆயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. தவிரவும், சண்டிப் பைசாசம் என்று கூறியது இப்லீஸைத்தான் என்றும் சில இமாம்கள் கூறி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆயிரம் பேரில் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேரை அவன் எடுத்துக் கொள்வான் என்று ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

وَّلَاُضِلَّنَّهُمْ وَلَاُمَنِّيَنَّهُمْ وَلَاٰمُرَنَّهُمْ فَلَيُبَتِّكُنَّ اٰذَانَ الْاَنْعَامِ وَلَاٰمُرَنَّهُمْ فَلَيُغَيِّرُنَّ خَلْقَ اللّٰهِ ؕ وَمَنْ يَّتَّخِذِ الشَّيْطٰنَ وَلِيًّا مِّنْ دُوْنِ اللّٰهِ فَقَدْ خَسِرَ خُسْرَانًا مُّبِيْنًا ؕ

119. இன்னும், 'அவர்களை நிச்சயமாய் வழிகெடுப்பேன்; இன்னும், நிச்சயமாக அவர்களுக்கு மேலெண்ணங்களை

ஏற்படுத்துவேன்; இன்னும், நிச்சயமாக நான் அவர்களை ஏவுவதால், அவர்கள் ஆடு மாடு ஒட்டகங்களின் காதுகளை நிச்சயமாகக் கிழிப்பார்கள்; இன்னும், நிச்சயமாக நான் அவர்களை ஏவுவதால், அவர்கள் நிச்சயமாய் அல்லாஹ்வின் சிருஷ்டியை மாற்றுவார்கள்; (என்றும் ஷைத்தான் கூறினான்). எனவே, எவன் அல்லாஹ்வைத் தவிர்த்து ஷைத்தானைக் காரியக் கர்த்தனாகக் கொண்டானோ அவன் நிச்சயமாகப் பகிரங்கமான நஷ்டமாக நஷ்டமடைந்து விட்டான்.

قَالَ عَلَيْهِ السَّلَامُ خُلِقَ اِبْلِيْسُ مُزَيِّنًا وَلَيْسَ اِلَيْهِ مِنَ الضَّلَالَةِ شَيْءٌ

"இப்லீஸ் (மனிதர்களுக்கு) அழகாகக் காண்பிப்பவனாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். வழிகேட்டிலிருந்து எதுவும் அவனிடத்தில் இல்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இப்லீஸ் வழி கெடுக்கிறான் என்பதற்கு "மனிதர்கள் உள்ளத்தில் பலவிதமான எண்ணங்களை உண்டாகச் செய்து சன்மார்க்கத்திற்கு மாறானவைகளின்பால் அவர்களை அழைக்கிறான்" என்பது கருத்து. மனிதர்களைத் தவறின்பால் அழைப்பதைத் தவிர்த்து வழிகேடு என்பது அவனிடம் இருக்குமாயின் சிருஷ்டிப் பொருள்கள் எல்லாவற்றையும் அவன் வழி தவறச் செய்து விடுவான்.

விக்கிரகங்களுக்கு ஆடு மாடு ஒட்டகங்களை நேர்ந்து விட்டு, அதன் அடையாளத்திற்காக அவைகளது காதுகளை விக்கிரகத் தொழும்பர்கள் துண்டித்து விடுவார்கள். தவிரவும், அல்லாஹு தஆலாவின் சிருஷ்டிப் பொருள்களிற் மாறுபாட்டையும் உண்டாக்கு வார்கள். அதாவது ஜீவப்பிராணிகளுக்குச் சூடுபோடல், விதை அடித்தல், பச்சை குத்தல் முதலியவற்றைச் செய்வர். இவ்விதமான காரியங்கள் ஷைத்தானால் ஏவப்படும் காரியங்களென்பதும், அவற்றைச் செய்யக்கூடா தென்பதும் இந்த ஆயத்திலிருந்து தெரிய வருகிறது. ஆனால், மனிதர்களுக்கு ஆண் குறியை எடுத்து விடல், மிருகங்களுக்கு விதை எடுத்தல், பச்சை குத்தல் அவயவங்களை ஊனமாக்குதல் முதலியவற்றைப் பற்றி மிகத் தெளிவாக இமாம்களால் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பற்றிய முழு விபரங்களையும் இஸ்லாமியச் சட்ட நூற்களில் கண்டு தெளிக.

يَعِدُهُمْ وَيُمَنِّيهِمْ ۖ وَمَا يَعِدُهُمُ الشَّيْطَٰنُ إِلَّا غُرُورًا ﴿١٢٠﴾

120. (ஷைத்தானாகிய) அவன் அவர்களுக்கு வாக்களித்துக் கொண்டிருக்கின்றான்; மேலும், அவன் அவர்களுக்கு ஆசையை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றான்; மேலும், அவர்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர (வேறு பலன் கொடுக்கக் கூடிய எதையும்) ஷைத்தான் வாக்களிப்பதில்லை.

மேலும், ஏமாற்றத்தைத் தவிர அவர்களுக்கு ஷைத்தான் வாக்களிப்பதில்லை என்பதற்கு 'தீங்காகவுள்ளதை நன்மையான வைகள் எனத் தோன்றும்படி ஷைத்தான் செய்வான்' என்பது கருத்து. இவ்வாறு தோன்றும்படி செய்வது மனிதர் உள்ளத்தில் தோன்றும்படி செய்வதையும், அவனுக்கு வழிப்பட்ட மற்றவர்கள் மூலமாகச் சொல்லும்படி செய்வதையும் குறிக்கும்.

أُولَٰٓئِكَ مَأْوَىٰهُمْ جَهَنَّمُ وَلَا يَجِدُونَ عَنْهَا مَحِيصًا ﴿١٢١﴾

121. இவர்கள்தாம்: இவர்களுடைய ஒதுங்குமிடம் நரகமேயாகும்; இன்னும், (இவர்கள்) இதைவிட்டு(த் தப்பி) ஓடும் இடத்தைப் பெற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

أُولَٰٓئِكَ **உலாயிக** அதாவது அவர்கள் என்பதற்கு இப்லீஸுக்கு கீழ்ப்படிந்தவர்கள், அவனது பாதுகாவலர்கள் என்பது கருத்து.

ரிவாயத்து:- "எனது ரஹ்மத்து எல்லா பொருட்களிலும் விஸ்தீரணமாகி விட்டது" என்ற ஆயத்து அருளப்பட்ட போது, இப்லீஸ் ஆனந்தங் கொண்டு "நானும் வஸ்து என்றதில் ஒருவனாக இருக்கிறேன்" என்று கூறினான். பிறகு, "(அல்லாஹ்வைப்) பயந்து, ஜக்காத்தைக் கொடுக்கிறார்களே அவர்களுக்கு அதனை நான் ஏற்படுத்துவேன்" என்ற ஆயத்து வந்தபோது இப்லீஸுக்கு ஆதரவு போய்விட்டது. ஆனால், யூதர்கள், கிறிஸ்தவர்கள் இதனைப் பார்த்துச்

சந்தோஷமடைந்தார்கள். "பின்னர், உம்மியாகிய நபியாகிய இந்த ரசூலைப் பின்பற்றுகிறார்களே அவர்களுக்கு" என்ற ஆயத்து அருளப்பட்டபோது கிறிஸ்தவர்களும் யூதர்களும் ஆதரவிழந்தனர். ஆகவே, அல்லாஹ்வின் ரஹ்மத் தென்னும் கிருபையானது மூமின் களுக்கு மட்டும்தான் என்பது இந்த ஆயத்துகளிலிருந்து நிதரிசன மாகின்றது என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

وَالَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّٰلِحَٰتِ سَنُدْخِلُهُمْ جَنَّٰتٍ تَجْرِي
مِن تَحْتِهَا الْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَا أَبَدًا ۖ وَعْدَ اللَّهِ
حَقًّا ۚ وَمَنْ أَصْدَقُ مِنَ اللَّهِ قِيلًا ﴿١٢٢﴾

122. மேலும், விசுவாசங் கொண்டு நற்செயல்களைச் செய்கின்றவர்களை நாம் (சுவர்க்கத்தின்) சோலைகளில் விரைவில் புகுத்துவோம்; அவற்றிற்குக் கீழ் அருவிகள் ஓடிக் கொண்டி ருக்கின்றன; அவற்றுள் அவர்கள் எந்நாளும் நிரந்தரமாக இருப்பார்கள்; அல்லாஹ்வின் (இந்த) வாக்குறுதி உண்மையாகும்; இன்னும் அல்லாஹ்வைப் பார்க்கினும் சொல்லால் அதிக உண்மையாளன் எவன் இருக்கின்றான்?

அல்லாஹு தஆலாவை மட்டும் நாடிச் செய்யப்படும் காரியங்களுக்கு **அமலுன் ஸாலிஹுன்** என்று பெயர். ஆகவே, ஸாலிஹான அமல்கள் அதாவது நற்காரியங்கள் என்பதில் ஃபர்லான தொழுகை, ஜக்காத்து முதலிய சகலவிதமான நற்காரியங்களும் அடங்கி இருக்கின்றன.

"சொல்லால் அல்லாஹ்வைப் பார்க்கினும் உண்மையாளர் எவர்?" என்றதற்கு "அல்லாஹு தஆலாவைப் பார்க்கினும் உண்மை யாளர் வேறு யாருமில்லை" என்பது கருத்து.

لَيْسَ بِأَمَانِيِّكُمْ وَلَآ أَمَانِيِّ أَهْلِ الْكِتَٰبِ ۗ مَن

يَعْمَلْ سُوْٓءًا يُّجْزَ بِهٖ ۙ وَلَا يَجِدْ لَهٗ مِنْ دُوْنِ اللّٰهِ وَلِيًّا وَّلَا نَصِيْرًا ۝

123. அவ்விதம் சுகம் பெறுவது உங்களுடைய எண்ணத்தின் படியும் வேதத்தையுடையவர்களின் எண்ணத்தின்படியுமல்ல; எவர் தீமையைச் செய்கிறாரோ, அதற்காக அவர் தண்டிக்கப் படுவார்; மேலும், அவர் தமக்கு அல்லாஹ்வையன்றி (வேறு) எந்தக் காரியக் கர்த்தனையும் உதவியாளனையும் பெற்றுக் கொள்ள மாட்டார்.

அல்லாஹு தஆலா தங்களது சிறிய பெரிய எல்லாப் பாவங்களையும் மன்னிக்க வேண்டும் என்றும், ஈமானுக்குப் பிறகு வேறு எதைக் கொண்டும் தங்களைக் குற்றம் பிடிக்கக் கூடாதென்றும் முஸ்லிம்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். தங்களை அல்லாஹு தஆலா வேதனை செய்ய மாட்டான் என்றும், குறிப்பிட்ட சில நாட்களுக்கு மேல் அதிகமாகத் தங்களை நரகில் இருக்கவிட மாட்டான் என்றும் வேதக்காரர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆகவே, இவ்விருசாராரின் எண்ணங்களையும் இறைவன் மறுத்து "உங்களது மேலெண்ணங்களின் மூலமாக அல்லாஹு தஆலா வாக்களித்துள்ள நன்மைப் பயன் கிடைத்து விடாது. அது ஈமான் கொண்டு நற்காரியங்களைச் செய்வதன் மூலமாகவே கிடைக்கும்" என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

مَنْ يَّعْمَلْ سُوْٓءًا يُّجْزَ بِهٖ "எவர் தீமையைச் செய்கிறாரோ அதற்காக அவர் தண்டனை அளிக்கப்படுவார்" என்ற ஆயத்து அருளப்பட்ட போது ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "இப்படி இருந்தால் எவர்தான் ஈடேற்றமடைய முடியும்" என்று கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீர் துக்கம் அடைவதில்லையா? நீர் நோயாளி ஆகுவதில்லையா? நீ வருந்துவதில்லையா?" என்று வினவினார்கள், அதற்கு ஹளரத்

அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "ஆம்" என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அதுதான் இது" என்றார்கள்.

وَمَنْ يَّعْمَلْ مِنَ الصّٰلِحٰتِ مِنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَاُولٰٓئِكَ يَدْخُلُوْنَ الْجَنَّةَ وَلَا يُظْلَمُوْنَ نَقِيْرًا ۝

124. மேலும், ஆணிலிருந்து, அல்லது பெண்ணிலிருந்து, எவர் விசுவாசியாக இருந்து நல்ல காரியங்களைச் செய்தால், அவர்கள் (சுவர்க்கத்தின்) சோலையில் புகுதுவர்; இன்னும், அவர்கள் அணுப்பிரமாணமும் (குறைப்பது கொண்டு) அநீதி செய்யப்பட மாட்டார்கள்.

ஈமான் கொண்டு இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்திருப்பவர்களிற் பலர் மீது ஹஜ்ஜு, ஜக்காத்து போன்ற கடமைகள் விதியாகாமல் இருக்கின்றன. ஆகவே, முகல்லஃபாக இருக்கிற அதாவது மார்க்கக் கடமைகளைச் செய்யக் கடமைப்பட்ட ஒவ்வொருவரும் சகலவிதமான நற்காரியங்களையும் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை என்ற இவ்விஷயம் இந்த ஆயத்தின் மூலமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

وَمَنْ اَحْسَنُ دِيْنًا مِّمَّنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ وَّاتَّبَعَ مِلَّةَ اِبْرٰهِيْمَ حَنِيْفًا ۗ وَاتَّخَذَ اللّٰهُ اِبْرٰهِيْمَ خَلِيْلًا ۝

125. இன்னும், எவர் நல்ல காரியஞ் செய்பவராக இருந்து கொண்டு, தனது முகத்தை (தன்னை) அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படுத்தி, இப்ராஹீமுடைய நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகின்றாரோ அவரைப் பார்க்கினும் மார்க்கத்தில் மிக அழகானவர் யார்? மேலும், அல்லாஹ் இப்ராஹீமைத் (தனது) தோழராக ஆக்கிக் கொண்டான்.

முஹ்ஸின் என்ற பதம் **இஹ்ஸான்** என்ற பதத்திலிருந்து பிறந்தது. "அல்லாஹ்வை நீ பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்க்கிறான். ஆதலின், அவனை நீ பார்த்துக் கொண்டிருப்பது போல அவனை நீ வணங்க வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இஹ்ஸான்" என்பதற்கு விரிவுரை செய்திருப்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது ஆகவே, இஹ்ஸான் என்பதற்கு ஈமானின் ஹக்கீக்கத்து என்பது கருத்து.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மார்க்கம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உபதேசித்த தீனுல் இஸ்லாத்திற்கு மிகவும் சரியான ஒற்றுமையான மார்க்கமாகும். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் முதலிய நபிமார்களது மார்க்கங்கள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மார்க்கத்தைப் போல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மார்க்கத்திற்கு அவ்வளவு ஒற்றுமையானதாக இல்லை.

ரிவாயத்து:- ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மிக ஏராளமான சொத்துகளும், செல்வங்களுமிருந்தன. பணியாளர், அடிமைகள் முதலியவர்களும் இருந்தனர். ஆட்டுக் கிடைகள் மட்டும் 5000 இருந்தன. அவற்றில் காவலுக்காக இருக்கும் நாய்களுக்குத் தங்கச் சவடிகள் (பொன் சரடுகளில் கொத்தாக அமைந்த அணிவகைகளில் ஒன்று) போடப்பட்டிருந்தன. இச் செல்வப் பெருக்கைப் பற்றி மலக்குகள் ஆச்சரிய மடைந்தனர். ஒருநாள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காட்டில் ஆட்டுக் கிடையில் இருக்கும் போது ஒரு மலக்கு மனித வடிவத்தில் அவர்கள் முன் தோன்றி **ஸுப்பூஹுன் குத்தூஸுன் றப்புனா வறப்புல் மலாஇகத்தி வர்ரூஹி** (ஸ்தோத்தரிக்கப்படுபவன், பரிசுத்தன் எங்களது றப்பு இன்னும் மலக்குகளுக்கும் ஆன்மாவிற்கும் றப்பாக இருப்பவன் என்பது இதன் பொருள்) என்று ஜபித்தார். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்த அழகான ஜபத்தைக் கேட்டவுடன், அம்மனிதரைத் தமது அருகில் அழைத்து "எனது நாயனைக் குறித்து நீர் சொன்ன ஜபத்தை மற்றொரு முறை கூறும், இதோ என்னிடமிருக்கிற பொருள்களில் சரிபாதியை உமக்கு நான் தருகிறேன்" என்று மனப்பூர்வமாகக் கூறினார்கள். அம்மனிதர் **ஸுப்பூஹுன் குத்தூஸுன் றப்புனா வறப்புல் மலாஇகத்தி வர்ரூஹி** என்று திரும்பவும் கூறினார். உடனே, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவரைப் பார்த்து இன்னொரு முறை அதனைத் திரும்பச் சொல்லும், என்னுடைய பொருள்கள் அனைத்தையும் தருகிறேன் என்று கூறினார்கள். அப்பொழுது, அம்மலக்கு மிக ஆச்சரிய மடைந்து, "உம்மை அல்லாஹு தஆலா தனக்குத் தோழராக்கிக் கொள்ள நீர் மிகவும் அருகதையுள்ளவர்தான்" என்று கூறினார். அப்போது அல்லாஹு தஆலா அவரை **"கலீல்"** என்று பெயரிட்டு, அவரைத் தனக்கு கலீலாக ஏற்படுத்திக் கொண்டான்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கலீல் என்ற பெயர் கிடைத்ததற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. அதன் விபரம் வருமாறு.

ஒருமுறை நாட்டில் பஞ்சம் வந்தது. ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எகிப்திலுள்ள தமது நண்பர் ஒருவரிடம் தானியம் கேட்டு ஆளனுப்பினார்கள். அதற்கு அத்தோழர் "இப்ராஹீம் தமக்கு மட்டும் கேட்டால் கொடுக்கலாம். ஊருக்கெல்லாம் விருந்து அளிக்கக் கேட்பார். அவரைப் போல்தான் நமக்கும் பஞ்சம் கூறப்பட்டிருக்கிறது" என்று கூறிவிட்டார். தானியம் வாங்கச் சென்றவர்கள் மற்றவர்களுக்கு வெட்கித்து, ஒரு மணல் மேட்டிற்குச் சென்று, அங்கிருந்த மணலை அள்ளிப் பொதிகளில் நிறப்பிக் கொண்டு வந்து ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் உண்மை விஷயத்தை ஒழிக்காமல் இரகசியமாகக் கூறினர். இதனைக் கேள்வியுற்றபின் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மிகவும் வருத்தமுற்று, அவ்வருத்தத்திலேயே தூங்கி விட்டார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வாழ்க்கைத் துணைவி ஸாரா அம்மா அவர்கள் எழுந்து அந்தப் பொதிகளை அவிழ்த்துப் பார்த்தபோது அவைகள் நிறம்ப நல்ல சோளங்களாக இருந்தன. ஆகவே, அவற்றில் கொஞ்சத்தை எடுத்துப் பக்குவப்படுத்தி

ரொட்டி தயார் செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் தூக்கம் தெளிந்து எழுந்தார்கள். நல்ல மணம் வருவதைத் தெரிந்து தமது வாழ்க்கைத் துணைவியை நோக்கி "இது நமக்கு எங்கிருந்து வந்தது?" என்று வினவினார்கள். அதற்கவர் "தங்களது எகிப்திய நண்பரிடமிருந்து வந்தது" என்றார்கள். அதற்கு, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அவ்வாறு இல்லை, எனது கலீல் அல்லாஹு தஆலாவிடமிருந்து வந்தது" என்று கூறினார்கள். அப்பொழுது அல்லாஹு தஆலா அவருக்கு "கலீல்" என்று பட்டப் பெயரிட்டான்.

وَلِلَّهِ مَا فِي السَّمَٰوَٰتِ وَمَا فِي الْأَرْضِ ۚ وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطًا ۝

126. மேலும், வானங்களில் உள்ளதும் பூமியில் உள்ளதும் அல்லாஹ்வுக்கே (உரியன); இன்னும், அல்லாஹ் யாவற்றையும் சூழ்ந்தறிபவனாக இருக்கின்றான்.

கண்ணியமும் சிறப்பும் பொருந்திய அடியார்கள் அல்லாஹு தஆலாவிற்கு எத்தனையோ பேர் இருக்கும்போது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மட்டும் ஏன் தனது கலீலாகத் தெரிந்தெடுக்க வேண்டும்? என்ற வினா உண்டாகக் கூடும். இவ்வித வினா உண்டாகுவதற்கு இடமில்லாதவாறு இந்த ஆயத்தில் வானங்களில் உள்ளதும் பூமியில் உள்ளதும் சிருஷ்டி, சொந்தம், பாத்தியம் என்ற முறையில் எல்லாம் அல்லாஹு தஆலாவிற்கே உரியன. அவற்றில் தனக்கு விரும்பியதை அல்லது இஷ்டமானவரை அவன் தெரிந்தெடுத்துக் கொள்வான். இதனை ஆட்சேபிக்க மற்றவருக்கு உரிமை இல்லை என்று இக்கேள்வி உண்டாகுவதற்கு இடமில்லாதவாறு கூறி இருக்கிறான்.

وَيَسْتَفْتُونَكَ فِي النِّسَاءِ ۖ قُلِ اللَّهُ يُفْتِيكُمْ فِيهِنَّ

وَمَا يُتْلَىٰ عَلَيْكُمْ فِي الْكِتَٰبِ فِي يَتَٰمَى النِّسَاءِ الَّتِي لَا تُؤْتُونَهُنَّ مَا كُتِبَ لَهُنَّ وَتَرْغَبُونَ أَن تَنكِحُوهُنَّ وَالْمُسْتَضْعَفِينَ مِنَ الْوِلْدَانِ وَأَن تَقُومُوا لِلْيَتَٰمَىٰ بِالْقِسْطِ ۚ وَمَا تَفْعَلُوا مِنْ خَيْرٍ فَإِنَّ اللَّهَ كَانَ بِهِ عَلِيمًا ۝

127. இன்னும், அவர்கள் பெண்களுடைய விஷயத்தில் உம்மிடம் தீர்ப்புக் கேட்கின்றனர்; அவர்கள் விஷயத்தில் அல்லாஹ் உங்களுக்குத் தீர்ப்புக் கூறுகிறான். இன்னும் நீங்கள் அவர்களுக்கு விதிக்கப்பட்டதை அவர்களுக்குக் கொடுக்காமல் அவர்களை நீங்கள் திருமணஞ் செய்வதில் விருப்பங் கொள்கின்றீர்களே அப்படிப்பட்ட அநாதைப் பெண்கள் விஷயத்திலும், பையன்களினின்றும் பலஹீனர்கள் விஷயத்திலும், அநாதைகளுக்கு நீங்கள் நீதி செலுத்தும் விஷயத்திலும் உங்களுக்கு வேதத்தில் ஓதிக்காட்டப் பட்டிருக்கின்றதே (தீர்ப்பாகும்) என்று கூறுவீராக. மேலும், நன்மையிலிருந்து நீங்கள் எதைச் செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை அறிபவனாக இருக்கின்றான்.

உபைனத்துப்னுஹுஸைன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, நீங்கள் மகளுக்குப் பாதி கொடுக்கிறீர்களா? சகோதரிக்குப் பாதி கொடுக்கிறீர்களா? யுத்தத்திற்குச் சென்று, கொள்ளை முதல் கொண்டு வருபவருக்குத்தான் அனந்தரம் கொடுத்துக் கொண்டிருந்தோம் என்று வினவினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அப்படித்தான் நான் கட்டளை யிடப்பட்டிருக்கிறேன்" என்று கூறினார்கள். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் குறித்து இந்த சூரத்தின் ஆரம்பத்திலும் விபரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

وَإِنِ امْرَأَةٌ خَافَتْ مِنْ بَعْلِهَا نُشُوزًا أَوْ إِعْرَاضًا
فَلَا جُنَاحَ عَلَيْهِمَا أَنْ يُصْلِحَا بَيْنَهُمَا صُلْحًا ۚ وَالصُّلْحُ
خَيْرٌ ۗ وَأُحْضِرَتِ الْأَنْفُسُ الشُّحَّ ۚ وَإِنْ تُحْسِنُوا وَتَتَّقُوا
فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا ۝

128. மேலும் ஒரு பெண் தன் கணவனிடமிருந்து ஒரு வெறுப்பையோ அல்லது (அவ்வெறுப்பினால் ஏற்பட்ட) புறக்கணிப்பையோ அஞ்சினால், அவ்விருவரும் தங்களுக்குள் ஒரு சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வது அவ்விருவர் மீதும் குற்றமல்ல; ஆனால், சமாதானந்தான் மேலானது; எனினும், மனிதர்கள் உலோபத் தனத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்; ஆதலின், நீங்கள் (ஒருவருக்கொருவர்) நலத்தைச் செய்து (தீங்கு செய்வதைத்) தவிர்த்துமிருந்தால், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை அறிபவனாக இருக்கின்றான்.

முஹம்மதுப்னு முஸல்லமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது புதல்வியான குவைலா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் விஷயத்தில் இந்த ஆயத்து அருளப்பட்டதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இவர் குமரிப் பெண்ணாக இருந்த போது ஸஅதுப்னுர் ரபீஃ ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் இவரை திருமணம் செய்திருந்தார். பின்னர், இவர் அதிக வயதையடைந்து கிழவியான போது, இவரது கணவரான ஸஅது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் வேறொரு குமரியை திருமணம் செய்து கொண்டு இவரைக் கவனியாமலிருந்து வந்தார். ஆகவே, குவைலா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தனது கணவர் தன்மீது அலட்சியமாக இருப்பதைக் குறித்துப் புகார் செய்தனர். எனவே இந்த ஆயத்து அருளப்பட்டது.

ஒரு பெண் தனது கணவன் தன்னைக் கவனிக்காமலும் தனக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றாமலும், தன்மீது

அதிருப்தி யாகவும், தன்னுடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டும், வேறு பெண்ணின் மீது மையலாகவும் இருப்பதைக் கண்டால் தனக்கு அவர் கொடுக்க வேண்டிய மகர்த் தொகையை மன்னித்து விடுவதன் மூலமாகவோ அல்லது குறைத்துக் கொள்வதன் மூலமாகவோ தனது கணவனை சமாதானம் செய்து கொள்ளலாம், அல்லது தனது கணவன் தன்னை விலக்கிவிடும்படி சமாதானம் செய்து கொள்ளலாம். இவ்விதமாக அத்தம்பதிகளிருவரும் சமாதானம் செய்து கொள்வது குற்றமில்லை.

ஆனால், தம்பதிகளிருவரும் பிரிந்து விடுவதை, அல்லது மனக்கசப்புடனிருப்பதை, அல்லது சச்சரவு செய்து கொள்வதைப் பார்க்கினும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்வது நல்லது. ஆனால், உலோபத்தனத்தை மனிதருக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதால் பெண் தனது உரிமையை விட்டுக் கொடுத்துக் கணவனை சமாதானம் செய்து கொள்ளத் துணிய மாட்டாள். இதுபோல கணவன் அவளை நல்ல விதமாக நடத்த மனந்துணிய மாட்டான். கணவன் தனது மனைவியிடம் நல்ல விதமாக இல்வாழ்க்கை வாழ்ந்து அவளுக்கு துன்பம் இழைப்பதைத் தவிர்த்துக் கொள்வதுதான் நல்லது. இதனை அல்லாஹ் நன்கு அறிந்தவன். அவ்வாறு நடந்து கொள்வோருக்குத் தக்க நற்கூலியை அவன் அளிப்பான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

நுஷூஜன் என்ற வார்த்தை கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் அடங்காமல் இருப்பதற்குச் சொல்லப்படும் (மௌலானாவின் புதல்வர்)

ரிவாயத்து:- ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களை இப்லீஸ் சந்தித்து, அவர்களிடம் "நீங்கள் பொறாமை கொள்வதையும், பேராசை கொள்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது பொறாமை கொண்டு சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டேன். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு மரத்தின் மீது பேராசை கொண்டு அதனை விட்டு விலக விருப்பமில்லாமல் உலோபத்தனஞ் செய்ததால் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்" என்று கூறியதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருக்கிறதென்று லைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்

கூறியதாக அப்துல்லா ஹிப்னு வஹ்பு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள் என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இப்லீஸை அவனது அசல் வடிவத்தில் பார்த்து, "உனக்கு அதிகப் பிரியமானவர் யார்? உனக்கு அதிகக் கோபமானவர் யார்? என்பதை எனக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்ட போது, அவன் "எனக்கு அதிகப் பிரியமுள்ளவர் உலோபத்தனஞ் செய்யும் மூமின்தான். எனக்கு அதிகக் கோபமுள்ளவர் தர்மஞ் செய்பவனான ஃபாஸிக்குதான்" என்று கூறினான். அதற்கு ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "இதற்குக் காரணமென்ன?" வென்று வினவியதற்கு "உலோபியை அவனது உலுத்தத் தன்மையினால் நான் வென்று விடுவேன். தர்மஞ் செய்பவனை அவனது தர்ம குணத்திற்காக அல்லாஹ் அங்கீகரித்துக் கொள்ளக்கூடும் என்று அஞ்சுகிறேன்" என்று கூறி விட்டுச் சென்றான். அவ்வாறு செல்லும் போது "நீர் யஹ்யாவாக இல்லாதிருந்தால் இதனை நான் உமக்குக் கூறி இருக்க மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டு போனான் என்று **ஆக்காமுல் மர்ஜான்** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

وَلَنْ تَسْتَطِيعُوٓا اَنْ تَعْدِلُوا بَيْنَ النِّسَآءِ وَلَوْ حَرَصْتُمْ
فَلَا تَمِيلُوا كُلَّ الْمَيْلِ فَتَذَرُوهَا كَالْمُعَلَّقَةِ ؕ وَاِنْ
تُصْلِحُوا وَتَتَّقُوا فَاِنَّ اللّٰهَ كَانَ غَفُورًا رَّحِيمًا ۝

129. மேலும், நீங்கள் மனைவிகளுக்குள் (ஒரே நிதானமாய்) நீதி செலுத்துவதற்குப் பேரவாக் கொண்டாலுஞ் சரியே, நீங்கள் (அதைச் செய்யச்) சக்திபெற மாட்டீர்கள்; ஆதலின், நீங்கள் ஒரு மனைவியின் பக்கமே முழுவதும் சார்ந்து, அடுத்தவளை அந்தரத்தில் இருப்பவளைப் போல் விட்டு விடாதீர்கள்; மேலும், நீங்கள் (ஒருதலைப் பட்சமாயிருப்பதைத்) திருத்தி (அநீதஞ் செய்வதைத்) தவிர்த்திருப் பீர்களாயின், நிச்சயமாக அல்லாஹ் (உங்களுக்கு) மன்னிப்பவனாக பேரன்புடையோனாக இருக்கின்றான்.

"ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை ஏக காலத்தில் மணந்திருப்பவர்கள் அவர்கள் எல்லோரிடத்திலும் சமமாக அன்பு செலுத்தவே முடியாது. ஆனால், அவ்வாறு அன்பு செலுத்த வேண்டும் என்ற விருப்பமுள்ளவர்கள் ஒருவளின் மீதுள்ள அன்பினால் மற்றொருவளை அடியுடன் கவனிக்காமல் அவளை அந்தரத்தில் விட்டு விடலாகாது. அவ்வாறு செய்திருந்தாலும் அதனைத் திருத்திக் கொண்டு எஞ்சியுள்ள காலத்திலேனும் ஒருவளுக்கு அநீதி செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வோருக்கு அவர்களது முந்திய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான். இனிமேல் அவ்வாறான காரியம் நிகழாதவாறு கிருபை செய்வான்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது வாழ்க்கைத் துணை நல்லார்களிடம் முறை வைத்து இல்வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். அவர்களை நடத்தும் விஷயத்தில் நீதி செய்தார்கள். என்றாலும், இறைவனிடம் "நாயனே, இது நான் செய்யக்கூடிய காரியத்தில் நான் பங்கு வைத்துக் கொண்டு அவர்களிடம் நீதியாக நடந்து கொண்டேன். அனால், நீ சொந்தப்படுத்தி இருப்பதில் என்னைக் குற்றம் பிடிக்க வேண்டாம்" என்று பிரார்த்திப் பார்கள். அதாவது தமது வாழ்க்கைத் துணை நல்லார்களுக்கு அன்னவஸ்திர மளித்தல் முதலிய காரியங்களில் எவ்வித வித்தியாசமும் பாராட்டுவதில்லை. ஆனால் அவர்கள் மீது அன்பு செலுத்தும் விஷயத்திலும் சமமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது விருப்பம். என்றாலும், அன்பு உண்டாகும்படி செய்வது இறைவனைப் பொறுத்த விஷயம். உம்முல் மூமினீன் ஹளரத் ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் மீது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அதிகப் பிரிய மிருந்தது. இதற்காகவே இம்மாதிரி இறைவனிடம் பிரார்த்தித்தார்கள்.

ஹதீஸ்:- "ஒருவருக்கு இரண்டு மனைவிகள் இருந்து ஒருவளின் மீது அதிகமாக அவர் சார்ந்து விடுவாராயின் கியாமத்து நாளில் ஒரு தோள் சரிந்தவராக வருவார்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

ஹளரத் மஆது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவர்களில் ஒருவரிடம் அவர் இருக்கும்போது மற்றொருவரது வீட்டில் ஒலுச் செய்ய மாட்டார்கள். அவ்விருவரும் தாஊன் என்னும் தொத்து நோயால் மரணித்தனர். அவ்விருவரையும் ஒரே இடத்தில் அடக்கஞ் செய்யப்பட்டது.

وَإِن يَتَفَرَّقَا يُغْنِ اللّٰهُ كُلًّا مِّن سَعَتِهِ ۚ وَكَانَ اللّٰهُ وَاسِعًا حَكِيمًا ۝

130. மேலும், (தம்பதிகள்) இருவரும் (திருமண பந்தத்தை விட்டுப்) பிரிந்துவிடுவார்களாயின், அல்லாஹ் தன் கிருபையினால் ஒவ்வொருவரையும் (ஒருவருக்கொருவர்) தேவையற்றவராக ஆக்குவான். அல்லாஹ் (சன்மானஞ் செய்வதில் மிக்க) விஸ்தீரணமானவனாக (யாவும் உணர்வதில்) மிக்க நிபுணனாக இருக்கின்றான்.

தம்பதிகளிருவருக்கு மிடையில் எவ்வகையிலும் சமாதானம் உண்டாகுவதற்கிடமில்லாமலாகி, அவ்விருவரும் தங்கள் திருமண பந்தத்தை விட்டு விலகிக் கொள்வார்களாயின், அவ்விருவரையும் ஒருவருக்கொருவர் தேவையில்லாதவாறு இறைவன் செய்து விடுவான். அதாவது பெண்ணுக்கு வேறு கணவனும், கணவனுக்கு வேறு மனைவியும் கிடைக்கும்படி செய்து விடுவான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ ۗ وَلَقَدْ وَصَّيْنَا الَّذِينَ أُوتُوا الْكِتٰبَ مِن قَبْلِكُمْ وَإِيَّاكُمْ أَنِ اتَّقُوا اللّٰهَ ۚ وَإِن تَكْفُرُوا فَإِنَّ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ ۚ وَكَانَ اللّٰهُ غَنِيًّا حَمِيدًا ۝

131. மேலும், 'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன; இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள்' என்று நிச்சயமாக நாம் உங்களுக்கு முன் வேதத்தைக் கொடுக்கப் பெற்றவர்களுக்கும் உங்களுக்கும் உபதேசித்திருக் கின்றோம்; மேலும், நீங்கள் மாறு செய்தால், பின்னும் வானங்களில் உள்ளதும் பூமியிலுள்ளதும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியனவாக இருக்கின்றன (வென்பதை ஞாபகத்தில் வைப்பீர்களாக) மேலும், அல்லாஹ் தேவையற்றவனாக (யாவராலும்) புகழப் பெற்றவனாக இருக்கின்றான்.

مَا فِي السَّمٰوٰتِ அதாவது **வானங்களில் உள்ளது** என்பதில் மேலான படித்தரங்கள், சுவர்க்கங்கள் முதலிய யாவும் சேர்ந்து இருக்கின்றன. وَمَا فِي الْأَرْضِ **மாஃபில் அர்லி** அதாவது **பூமியில் உள்ளது** என்பதில் இவ்வுலகிலுள்ள சகல சம்பத்துகளும் பாக்கியங்களும் சேர்ந்திருக் கின்றன. இவைகள் அல்லாஹு தஆலாவிற்குத் தேவை இல்லை. தன்னுடைய நல்லடியார்களுக்காகவே இவற்றை அவன் சிருஷ்டித் திருக்கிறான். இதனைக் குறித்து **"வானங்களில் உள்ளதையும் பூமியில் உள்ளதையும் உங்களுக்குக் வசப்படுத்திக் கொடுத்திருக் கிறான்"** என்ற ஆயத்தில் கூறப்பட்டி ருக்கிறது. ஆனால், அடியார் களைத் தனக்காகச் சிருஷ்டித்திருக்கிறான் என்று ஷெய்கு நஜ்முத்தீன் குத்திஸ ஸிர்ருஹு கூறி இருக்கிறார்கள்.

وَكَانَ اللّٰهُ غَنِيًّا حَمِيْدًا **அல்லாஹு தஆலா தேவையற்றவனாகவும் புகழப்பட்ட வனாகவும் இருக்கின்றான்** என்ற வசனத்திலிருந்து தனக்கு பயபக்தி செய்யுமாறு அவன் நமக்குக் கட்டளையிடுவது தனது நன்மைக்காக இல்லையென்பதும், அவனுக்கு நாம் மாறு செய்வதால் அவனுக்கு எவ்வித நஷ்டமும் கஷ்டமும் வந்து விடாதென்பதும், அவனை அஞ்ச வேண்டும் என்று அவன் கட்டளையிட்டதெல்லாம் அடியார்கள்பால் அவனுக்குள்ள கிருபையினாற்றான் என்பதும் தெரியவருகின்றன.

وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ ۚ وَكَفٰى بِاللّٰهِ

وَكِيلًا

132. இன்னும், வானங்களில் உள்ளதும் பூமியில் உள்ளதும் அல்லாஹ்வுக்கே உரியனவாயிருக்கின்றன; மேலும், அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்பவனாக இருப்பது போதுமானது.

அல்லாஹு தஆலா தேவையற்றவன் என்பதை அறிவிப்பதற்காகவே "**வானங்களிலுள்ளதும் பூமியிலுள்ளதும் அல்லாஹ்விற்கே உரியன**" என்ற வசனம் மூன்றாவது முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. எல்லா சிருஷ்டிப் பொருள்களும் அவன்பால் தேவையுள்ளனவாக இருப்பதே, அவன் மற்றவைகளிடம் தேவையற்றவன் என்பதை அறிவிக்கிறது. மேலும், சிருஷ்டிப் பொருள்களுக்கு அவன் உஜூது என்னும் உண்மையையும், அவைகள் ஒவ்வொன்றிற்கும் சொந்தமான தன்மைகளையும், திறமைகளையும் அளித்து இருப்பதானது அவன் புகழப்பட்டவன் என்பதை அறிவிக்கிறது. ஆகவே, எல்லாக் காரியங்களையும் நிர்வகிப்பதற்கு அவன் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் அவனைத் தவிர வேறு யாரிடமும் பொறுப்புக் கொடுக்கலாகாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

إِن يَشَأْ يُذْهِبْكُمْ أَيُّهَا النَّاسُ وَيَأْتِ بِآخَرِينَ ۚ وَكَانَ اللَّهُ عَلَىٰ ذَٰلِكَ قَدِيرًا

133. மனிதர்களே! அவன் நாடினால் உங்களை அழித்து விட்டு(ப் பின்னும்) வேறொரு வர்க்கத்தினரைக் கொண்டு வந்து விடுவான்; மேலும், இ(வ்வாறு செய்வ)தன் மீது அல்லாஹ் மிக்க ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான்.

அல்லாஹு தஆலாவிற்கு மாறு செய்து பாவங்களைச் செய்வோருக்கு இந்த ஆயத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மனிதராகிய நம்மவர் அவனை வணங்கிப் பணிவது அவனுக்குத் தேவையாக இல்லை என்பதும், மனிதர் செய்யும் பாவங்களுக்காக அவர்களை உடனே தண்டிக்காமல் விட்டிருப்பதற்குக் காரணம் தண்டிக்க இயலாததனாலல்ல வென்பதும், அவன் மிகப் பொறுமை யுள்ளவன் என்பதும் இந்த ஆயத்தின் மூலம் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றன.

"அல்லாஹ்வைப் பார்க்கினும் பொறுமையுள்ளவர் ஒருவருமில்லை. அவனுக்கு இணை வைக்கப்படுகிறது, இன்னும் அவனுக்குப் பிள்ளை இருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு இருந்தும் அவற்றை அவன் சகித்துக் கொண்டு அவர்களுக்கு உணவளிக்கிறான்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

مَّن كَانَ يُرِيدُ ثَوَابَ الدُّنْيَا فَعِندَ اللَّهِ ثَوَابُ الدُّنْيَا وَالْآخِرَةِ ۚ وَكَانَ اللَّهُ سَمِيعًا بَصِيرًا

134. யார் இவ்வுலகப் பலனை (மட்டும்) விரும்புவார்? அல்லாஹ்விடத்தில் இம்மைப் பலனும் மறுமைப் பலனும் இருக்கின்றன. மேலும், அல்லாஹ் (அடியார்களின் பிரார்த்தனையைக்) கேட்பவனாக (அந்தரங்கத்தைப்) பார்ப்பவனாக இருக்கின்றான்.

இந்த ஆயத்தில் பிறரை மெய்ப்பிப்பதற்காக முயலுபவர்களான முனாஃபிக்குகளுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது என்று ஹத்தாதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

யுத்தத்தில் பகைவர்கள் விட்டுச் செல்கிற பொருள்கள் கிடைக்கும் என்று ஆசைப்பட்டு மார்க்க யுத்தம் புரியச் செல்பவர்களை நோக்கி இந்த ஆயத்தில் "அல்லாஹ்விடத்தில் இம்மை மறுமை ஆகிய இரண்டின் பயனுமிருக்கும் போது அவ்விரண்டில் தாழ்ந்ததாகிய இம்மைப் பயனை ஏன் நாட வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ بِالْقِسْطِ شُهَدَاءَ

لِلّٰهِ وَلَوْ عَلٰٓى اَنْفُسِكُمْ اَوِ الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ ۚ اِنْ يَّكُنْ
غَنِيًّا اَوْ فَقِيْرًا فَاللّٰهُ اَوْلٰى بِهِمَا ۗ فَلَا تَتَّبِعُوا الْهَوٰٓى اَنْ
تَعْدِلُوْا ۚ وَاِنْ تَلْوٗٓا اَوْ تُعْرِضُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ بِمَا
تَعْمَلُوْنَ خَبِيْرًا ۝

135. விசுவாசங் கொண்டவர்களே! நீதியில் ஸ்திரமானவர்களாக (இன்னும்) அல்லாஹ்வுக்காக (அதாவது அவனது சந்தோஷத்தை அடைவதற்காக நீதியைக் கூறும்) சாட்சிகளாக இருங்கள்; (உண்மையான சாட்சியமானது) உங்களுக்கோ, (உங்கள்) பெற்றோர்களுக்கோ, இன்னும் (உங்கள்) உறவினர்களுக்கோ விரோதமாக இருந்தாலுஞ் சரியே. (சாட்சிசொல்லப்படுகிற) அவன் செல்வந்தராகவோ அல்லது ஏழையாகவோ இருந்தால் (உண்மையையே கூறுங்கள். ஏனெனில்) அல்லாஹ் இவ்விருவரைக் காட்டிலும் மிக்க மேலானவனே; ஆதலின், நீங்கள் இச்சையைப் பின்பற்றி (உண்மையை) மாற்றாதீர்கள்; மேலும், நீங்கள் மாற்றிச் சொன்னாலோ, அல்லது (சாட்சி கூறப்) புறக்கணித்தாலோ நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு தெரிந்தவனாக இருக்கின்றான்.

“தனக்கோ, தன் பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ தீங்கு உண்டாவதாக இருந்தாலும் கூட அதனை லட்சியம் செய்யாமல் நீதியாக சாட்சியங் கூற வேண்டும். சாட்சியங் கூறுவதால் பாதகம் அடைபவர் செல்வந்தராக இருந்தாலும், அல்லது ஏழையாக இருந்தாலும் அதனைக் கவனிக்கக் கூடாது. ஏனெனில், இவ்விருவரைப் பார்க்கினும் அல்லாஹு தஆலாதான் அதிகம் உரிமையுள்ளவன். மன இச்சையைப் பின்பற்றி சாட்சியத்தை மாற்றிக் கூறலாகாது. சாட்சியத்தை மாற்றிக் கூறினாலும், அல்லது சொல்லாமல் புறக்கணித்தாலும் அதற்காக அல்லாஹ் தண்டிப்பான்” என்பது இந்த ஆயத்தின் கருத்து.

شُهَدَآءَ لِلّٰهِ **ஷுஹதாஅ லில்லாஹி,** அதாவது அல்லாஹ்விற்காக சாட்சியங் கூறுபவர்களாக என்ற வார்த்தைகளில் பொது மக்கள் தவ்ஹீதைக் கொண்டும் வஹ்தானியத்தைக் கொண்டும் அல்லாஹு தஆலாவிற்கு சாட்சிகளாக இருக்க வேண்டும் என்பதும், விசேஷமானவர்கள் அதாவது காஸ்ஸான அடியார்கள் அல்லாஹு தஆலாவுடன் பர்தானிய்யத்தில் பிரசன்னமானவர்களாக இருக்க வேண்டும் என்பதும், விசேஷமானவர்களிலும் விசேஷமாகவுள்ள கவாஸ்ஸுல் கவாஸ்ஸான அடியார்கள் அல்லாஹு தஆலாவை வஹ்தத்தைக் கொண்டு ஷுஹூது செய்வதில் தங்களுடைய உஜ்தை விட்டு அல்லாஹ்வில் மறைந்துவிட வேண்டும் என்பதும் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கின்றன என்று **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ
الَّذِيْ نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِيْٓ اَنْزَلَ مِنْ قَبْلُ ۗ
وَمَنْ يَّكْفُرْ بِاللّٰهِ وَمَلٰۤىِٕكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ
فَقَدْ ضَلَّ ضَلٰلًا ۢ بَعِيْدًا ۝

136. விசுவாசிகளே! அல்லாஹ்வையும், அவனது தூதரையும், அவனது தூதருக்கு அருளி இருக்கிற வேதத்தையும், (அவருக்கு) முன்னர் அருளிய வேதத்தையும் விசுவாசிப்பதன் பேரில் ஸ்திரமாயிருங்கள்; ஆனால், யார் அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், கடைசி (த் தீர்ப்பு) நாளையும் (விசுவாசிக்காமல்) நிராகரிக்கின்றாரோ அவர் நிச்சயமாக வழி கேட்டில் வெகு தூரம் தவறி விட்டார்.

இந்த ஆயத்து எல்லா முஸ்லிம்களையும் முன்னோக்கிக்

கூறப்பட்டது. ஆதலின் **ஆமினூ** அதாவது ஈமான் கொள்ளுங்கள் என்ற பதத்திற்கு ஈமானின் மீது உறுதியாக இருங்கள் என்பது கருத்து.

திருக்குர்ஆன் கொஞ்சங் கொஞ்சமாக சமய சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அருளப்பட்டது, அதற்கு முன்னுள்ள வேதங்கள் ஒரே முறையில் அருளப்பட்டன என்பதற்காகவே وَالْكِتٰبِ الَّذِيْ نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ **அவனது ரசூலுக்கும் அவன் இறக்கிவைத்த (வேத) கிரந்தத்திற்கும்** என்ற வசனத்தில் **நஸ்ஸல** என்றும், وَالْكِتٰبِ الَّذِيْٓ اَنْزَلَ مِنْ قَبْلُ **(அவருக்கு) முன்னர் இறக்கி வைத்த (வேத) கிரந்தத்தையும்** என்ற வசனத்தில் **அன்ஸல** என்றும் இறைவன் கூறி இருக்கிறான். இந்த ஆயத்தில் முதலாவதாகச் சொல்லப்பட்ட **அல்கித்தாப்** அதாவது (வேத) கிரந்தம் என்பது திருக்குர்ஆனையும், இரண்டாவது சொல்லப்பட்டது இறைவனால் அருளப்பட்ட இதர எல்லா வேத கிரந்தங்களையும் குறிப்பிடுகின்றன.

وَمَنْ يَّكْفُرْ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا

"மேலும், எவர் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது (வேத) கிரந்தங்களையும், அவனது நபிமார்களையும், கடைசி நாளையும் நிராகரிக்கிறாரோ மிகவும் தூரமான வழிகேடாக அவர் நிச்சயமாக வழி கெட்டு விட்டார்" என்ற வாக்கியத்தில் மூமினாக இருக்க விரும்புபவர் அல்லாஹ்வையும் மலக்குகளையும், வேதங் களையும், நபிமார்களையும், கியாமத்து நாளையும் ஈமான் கொள்ள வேண்டியது அவசிய மென்பதும் இவற்றில் எதையேனும் ஒன்றை நிராகரித்தாலும் அவர் மூமினாக இருக்க முடியாது என்பதும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

தவிர, இந்த ஆயத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் முனாஃபிக்குகளை முன்னோக்கிச் சொல்லப்பட்டதென்றும் சிலர் கூறி இருக்கிறார்கள். இந்தச் சொற்படி "ஈமான் கொண்டவர்களே! ஈமான் கொள்ளுங்கள்" என்பதற்கு "ஈமான் கொண்டதாக நாவினால் மட்டும் சொல்லிக் கொள்பவர்களே, இதய சுத்தியுடன் மனப்பூர்வமாக ஈமான் கொள்ளுங்கள்" என்பது கருத்தாகும். மேலும், இந்த ஆயத்து வேதக்காரர்களிலுள்ள மூமின்களை முன்னோக்கிச் சொல்லப்

பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர். இதற்கு ஒரு ரிவாயத்தையும் ஆதாரமாகச் சுட்டிக் காண்பிக்கின்றனர். அந்த ரிவாயத்து வருமாறு.

இப்னு ஸலாமும் அவரது தோழர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் ரசூலே, தங்களையும், தங்கள் வேதத்தையும், மூஸாவையும், தவ்ராத்தையும் உஜைரையும், நாங்கள் உறுதி கொண்டிருக்கிறோம். இதனைத் தவிரவுள்ளதை நாங்கள் நிராகரிக்கிறோம்" என்று கூறினார்கள். அப்போது இந்த ஆயத்து இறங்கிற்று.

இந்த ரிவாயத்தின்படி "எல்லா நபிமார்களையும் வேதங் களையும் ஈமான் கொள்ளுங்கள் என்பது கருத்தாகும். ஏனெனில் சிலரை மட்டும் ஈமான் கொள்வதானது ஈமானாக இல்லை" என்பதனாலேயாகும்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ ازْدَادُوْا كُفْرًا لَّمْ يَكُنِ اللّٰهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ سَبِيْلًا

137. நிச்சயமாக யாரேனும் விசுவாசங் கொண்டு, பின்னர் நிராகரித்து, பின்பும் விசுவாசங் கொண்டு, அதன் பிறகும் நிராகரித்து, அப்பாலும் நிராகரிப்பை அதிகரித்துக் கொண்டே யிருந்தால் அல்லாஹ் அவர்களுக்குப் பாவ மன்னிப்புச் செய்பவனாக இல்லை. அன்றியும், அவர்களை (நேரான) பாதையில் வழி காட்டுபவனாகவும் இல்லை.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருப்பவர்கள் யூதர்கள் ஆவார்கள். ஏனெனில், இவர்கள் முதலாவதாக ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஈமான் கொண்டார்கள். அப்புறம் காளைக் கன்றை வணங்கிக் காஃபிரானார்கள். பிறகு தவ்பாச் செய்து மூமினானார்கள். அப்புறம் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம்

அவர்களை நிராகரித்துக் காஃபிரானார்கள். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நிராகரிப்பதன் மூலம் தங்கள் குஃப்ரை அதிகப்படுத்திக் கொண்டார்கள். ஆகவே, இவ்விதமாகக் குஃப்ரிலேயே அவர்கள் இருந்து கொண்டிருக்கும் போது அவர் களுக்குப் பாவமன்னிப்புச் செய்யவும், அவர்களை நேரான வழியிற் சேர்க்கவும் அல்லாஹ் விரும்பவில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

மேலும், ஒரு முறை நிராகரித்தாலும் அதனை தவ்பா இல்லாமல் அல்லாஹு தஆலா மன்னிக்க மாட்டான் என்றிருக்கும் போது இத்தனை முறை நிராகரிப்பதை இங்கு கூறவேண்டிய காரணமென்னவெனில், அல்லாஹுதஆலாவை நிராகரித்துவிட்டு பின்னர் ஈமான் கொண்டால் அந்தக் குஃப்ரை அவன் மன்னித்து விடுவான். ஆனால், இரண்டாவது முறையும் நிராகரித்தால், முதலாவதாகச் செய்த குஃப்ரை(நிராகரிப்பை)யும் கூட மன்னிக்க மாட்டான் என்பதை உணர்த்துவதற்காகவேயாகும்.

بَشِّرِ الْمُنٰفِقِيْنَ بِاَنَّ لَهُمْ عَذَابًا اَلِيْمًا ۙ

138. (நபியே) நயவஞ்சகர்களுக்கு "நிச்சயமாய் நோவினை செய்யும் வேதனை இருக்கிறது" என்று அவர்களுக்கு அறிவிப்பீராக.

முனாஃபிக்குகள் பகிரங்கமாக ஈமான் கொள்கின்றனர். ஆனால், அந்தரங்கத்தில் நிராகரிக்கிறார்கள். நிராகரித்ததுமில்லாமல் முனாஃபிக் தன்மையை விடாமல் கொண்டிருப்பதன் மூலமாகவும், மூமின்களது காரியத்தில் குழப்பஞ் செய்தவன் மூலமாகவும் அந்தக் குஃப்ரை அதிகப்படுத்திக் கொள்கின்றனர். ஆகவே, இவர்களும் இதற்கு முன்னர் கூறப்பட்டுள்ள ஆயத்திற் கண்ட விதிக்குட்பட்டவர்களே யாவார்கள்.

الَّذِيْنَ يَتَّخِذُوْنَ الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ۚ
اَيَبْتَغُوْنَ عِنْدَهُمُ الْعِزَّةَ فَاِنَّ الْعِزَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ

139. இவர்கள் விசுவாசிகளைத் தவிர்த்து, நிராகரிப் பவர்களைத் (தங்களுக்கு) நண்பர்களாக ஏற்படுத்திக் கொள்கின்றனர்; இவர்கள் அவர்களிடத்தில் மரியாதையைத் தேடுகின்றனரோ? நிச்சயமாக மரியாதை யாவும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும்.

الَّذِيْنَ **அல்லதீன**, அதாவது "அவர்கள்" என்பது இதற்கு முந்திய ஆயத்திற் சொல்லப்பட்ட முனாஃபிக்குகளைக் குறிக்கிறது.

الْكٰفِرِيْنَ **அல்காஃபிரீன**, அதாவது காஃபிர்களை என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொள்ளாமலிருக்கிற யூதர்களைக்குறிக்கிறது.

الْعِزَّةَ **அல்இஸ்ஸத்த**, அதாவது "கண்ணியம்" என்பது வெற்றியையும், பலத்தையும் குறிக்கிறது.

முனாஃபிக்குகள் யூதர்களுடன் சேர்ந்து அவர்களுடன் உறவாடி வந்தனர். அவர்களுடன் சேர்ந்தால் தங்களுக்கு பலம் கிடைக்குமென்றும், இந்த பலத்தின் உதவியால் மூமின்களை மிகைத்து விடலாம் என்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்களா? இவ்வாறு எண்ணுவது தவறு என்பதும், காஃபிர்களைத் தங்களுக்கு நண்பர்களாக ஏற்படுத்திக் கொள்வது கூடாது என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِى الْكِتٰبِ اَنْ اِذَا سَمِعْتُمْ اٰيٰتِ
اللّٰهِ يُكْفَرُ بِهَا وَيُسْتَهْزَاُ بِهَا فَلَا تَقْعُدُوْا مَعَهُمْ
حَتّٰى يَخُوْضُوْا فِىْ حَدِيْثٍ غَيْرِهٖٓ ۖ اِنَّكُمْ اِذًا مِّثْلُهُمْ ۗ
اِنَّ اللّٰهَ جَامِعُ الْمُنٰفِقِيْنَ وَالْكٰفِرِيْنَ فِىْ جَهَنَّمَ جَمِيْعًا ۙ

140. இன்னும், 'அல்லாஹ்வின் திருவசனங்கள் (நிராகரிப்பவர்களால்) மறுக்கப்படுகின்றன நிலையில் அல்லது, பரிகசிக்கப்படும் நிலையில், நீங்கள் அவற்றைச் செவியேற்றால்,

அவர்கள் வேறு பேச்சில் ஈடுபடும் வரை நீங்கள் அவர்களுடன் உட்கார வேண்டாம்; (உட்கார்ந்தால்) அப்பொழுது நிச்சயமாக நீங்களும் அவர்களைப் போலவே இருக்கின்றீர்கள்' என்று (அல்லாஹ்) உங்களுக்கு வேதத்தில் நிச்சயமாக அருளியுள்ளான். நிச்சயமாக அல்லாஹ் நயவஞ்சகர்கள், நிராகரிப்பவர்கள் அனைவரையும் நரகத்தில் ஒன்று சேர்ப்பவனாக இருக்கின்றான்.

மக்கத்து முஷ்ரிக்குகள் ஒன்று கூடும் போது தங்கள் கூட்டத்தில் திருக்குர்ஆனைப் பற்றிக்கூறி அதிலுள்ள செய்திகளைப் பற்றிப் பரிகசிப்பது வழக்கம். ஆதலின், அவ்வாறான பேச்சுக்களை அவர்கள் பேசிக் கொண்டிருப்பதை முஸ்லிம்கள் கண்டால், அவர்கள் அதனை விட்டு விட்டு வேறு பேச்சுகளைப் பேசும் வரை அந்தக் கூட்டத்தில் இருக்கக் கூடாது என்று அல்லாஹு தஆலா ஒரு கட்டளையைப் பிறப்பித்தான். இந்தக் கட்டளை 'சூரத்துல் அன்ஆமி'ல் கூறப்பட்டிருக்கிறது. பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், முஸ்லிம்களும் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனாவிற் குடியேறிய போது மதீனாவிலுள்ள யூதர்களின் பாதிரிமார்களும் மக்கத்து முஷ்ரிக்குகளைப் போலவே திருக்குர்ஆனைப் பரிகசிக்கத் தொடங்கினர். மதீனாவிலுள்ள முனாஃபிக்குகள் அந்த யூதர்களுடன் சேர்ந்திருந்து, இந்தப் பரிகாசப் பேச்சிலும் கலந்து கொள்வர். ஆகவே, முனாஃபிக்குகளது இச்செய்கை இந்த ஆயத்தில் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

الَّذِينَ يَتَرَبَّصُونَ بِكُمْ فَإِن كَانَ لَكُمْ فَتْحٌ مِّنَ اللَّهِ
قَالُوا أَلَمْ نَكُن مَّعَكُمْ وَإِن كَانَ لِلْكَافِرِينَ نَصِيبٌ
قَالُوا أَلَمْ نَسْتَحْوِذْ عَلَيْكُمْ وَنَمْنَعْكُم مِّنَ الْمُؤْمِنِينَ
فَاللَّهُ يَحْكُمُ بَيْنَكُمْ يَوْمَ الْقِيَامَةِ وَلَن يَجْعَلَ اللَّهُ
لِلْكَافِرِينَ عَلَى الْمُؤْمِنِينَ سَبِيلًا

141. (நயவஞ்சகர்களாகிய) இவர்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்; எனவே, உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஒரு வெற்றி ஏற்பட்டு விடுமாயின், "நாங்கள் உங்களுடன் இருக்க வில்லையா?" என்கின்றனர். ஆனால், நிராகரிப்பவர்களுக்கு (வெற்றியிலிருந்து) ஒரு பாகம் கிடைக்குமாயின், "(முஸ்லிம்களுடன் யுத்தஞ் செய்யுங்கள் என்று) உங்களை நாங்கள் வற்புறுத்த வில்லையா? (அவர்களால் உங்களுக்குத் தீங்கு ஏற்படாமல்) விசுவாசிகளை விட்டு உங்களை நாங்கள் விலக்கவில்லையா?" என்று கூறுகின்றார்கள்; ஆகவே, அல்லாஹ் உங்களுக்கிடையில் இறுதி நாளில் தீர்ப்புச் செய்வான்; இன்னும், அல்லாஹ் விசுவாசிகளுக்கு விரோதமாக நிராகரிப்பவர்களுக்கு வழியை ஏற்படுத்தவே மாட்டான்.

முனாஃபிக்குகள் வெளித்தோற்றத்தில் முஸ்லிம்களாக நடித்துக் கொண்டு, அந்தரங்கத்தில் காஃபிர்களுடன் சேர்ந்திருந் தார்கள். ஆதலின், முஸ்லிம்களுக்கு வெற்றி, செல்வம், பொருள் ஆகியவைகள் கிடைக்கும் போது நாங்களும் உங்களைச் சேர்ந்தவர் களல்லவா? என்று கூறி அதில் தங்களுக்கும் பங்கு வாங்கிக் கொள்ள முயல்வர். சிற்சில சமயங்களில் காஃபிர்களுக்கு ஏதேனும் வெற்றி ஏற்பட்டால் அவர்களிடம் சென்று நாங்கள் அவர்களுடன் சேர்ந்திருந்து அவர்கள் உங்களை வென்று விடா வண்ணம் அவர்களைத் தடுத்துக் கொண்டோம், உங்களை வெல்ல எங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்த போது நாங்கள் உங்களை விட்டு விட்டோம். ஆதலால், உங்களுக்குக் கிடைத்த லாபத்தில் எங்களுக்கும் பங்கு தரவேண்டும் என்று கூறி இரண்டு கட்சியினரிடமும் லாபம் அடைவதில் கருத்துக் கொண்டி ருந்தனர். அவர்களது இரண்டுபட்ட இத்தன்மையை இறைவன் வெளிப்படுத்தி கியாமத்து நாளில் அவர்களைத் தண்டிப்பதாகக் கூறியுள்ளான்.

மேலும், முஸ்லிம்களுக்கு விரோதமாக காஃபிர்களுக்கு எவ்வழியையும் அல்லாஹ் ஏற்படுத்தவே மாட்டான் என்பது கியாமத்து நாளில்தான் பரிபூரணமாக நிகழும். தவிர இவ்வுலகில் சிற்சில சமயம்

காஃபிர்களுக்குச் சாதகமும் முஸ்லிம்களுக்குப் பாதகமும் ஏற்படுவது உண்டு. இதற்குக் காரணம் காஃபிர்களைச் சோதித்து அவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தண்டிப்பதற்காகவே இறைவன் இப்படிச் செய்வான். ஆதலால், காஃபிர்கள் சில சமயம் இவ்வுலகில் வெற்றி அடைவதானது வெளித் தோற்றத்தில் அவர்களுக்குச் சாதகமாக இருப்பதாகக் காணப்பட்டாலும் உண்மையில் அது அவர்களுக்குச் சாதகமாக இல்லை.

إِنَّ الْمُنٰفِقِيْنَ يُخٰدِعُوْنَ اللّٰهَ وَهُوَ خَادِعُهُمْ ۚ وَإِذَا
قَامُوْٓا إِلَى الصَّلٰوةِ قَامُوْا كُسَالٰى ۙ يُرَآءُوْنَ النَّاسَ
وَلَا يَذْكُرُوْنَ اللّٰهَ إِلَّا قَلِيْلًا

142. நிச்சயமாக நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்றுகின்றனர்; ஆனால், அவனோ அவர்களை ஏமாற்றுபவனாக இருக்கிறான்; மேலும், அவர்கள் தொழுகையில் நின்றால் சோம்பேறிகளாய் நிற்கின்றனர்; (உள்ளச்சக்காரர்களைப் போல்) மனிதர்களுக்குக் காட்டுகின்றனர்; ஆனால், அவர்கள் சிறிதே யொழிய அல்லாஹ்வைத் தியானிப்பதில்லை.

முனாஃபிக்குகள் வெளிக்குத் தங்களை மூமின்கள் என்று சொல்லிக் கொண்டு குஃப்ரைத் தங்களுள் மறைத்து வைத்திருப்பதைக் குறித்துத்தான் إِنَّ الْمُنٰفِقِيْنَ يُخٰدِعُوْنَ اللّٰهَ **நிச்சயமாக முனாபிக்குகள் அல்லாஹ்வை ஏமாற்றுகின்றனர்** என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனெனில், வெளிக்கு மூமின்களாக அவர்கள் நடிப்பதால் அவர்களது பொருள்களுக்கும் உதிரங்களுக்கும் முஸ்லிம்களாற் சேதம் வராமல் அவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர். ஆனால், மறுமையில் அவர்கள் இறைவனால் தண்டிக்கப்படுவார்கள். ஆதலால் "அவர்களை அல்லாஹ் ஏமாற்றுகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், இவ்வுலகில் அவர்களுக்குக் கஷ்டம் வராமலிருப்பதைக் கண்டு, அதிலேயே அவர்கள் உறுதியாக இருந்தால் மறுமையில் அவர்கள்

வேதனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் தங்களது ஏமாற்றத்தைக் குறித்து வருந்துவார்கள்.

ரிவாயத்து:- கியாமத்து நாளில் மூமின்களுக்குக் கொடுக்கப் படுவது போல முனாஃபிக்குகளுக்கும் (நூர் என்னும்) வெளிச்சம் கொடுக்கப்படும். மூமின்கள் தங்களுக்குக் கிடைத்த வெளிச்சத்தின் உதவியால் ஸிராத்துல் முஸ்தகீம் என்னும் பாலத்திற் செல்வர். முனாஃபிக்குகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெளிச்சம் அணைந்து விடும். அப்பொழுது முனாஃபிக்குகள் "எங்களுக்காகக் கொஞ்சம் பொறுங்கள்; உங்களது வெளிச்சத்திலிருந்து நாங்களும் கொளுத்தி எடுத்துக் கொள்கிறோம்" என்று கூறி மூமின்களை அழைப்பர். அப்பொழுது ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்திலிருக்கிற மலக்குகள் அவர்களை நோக்கி "நீங்கள் திரும்பச் சென்று வெளிச்சத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவார்கள். ஆனால், அவர்கள் திரும்பச் செல்ல இயலாது என்பது அவர்களுக்குத் தெரியும். அப்போது தங்களது வெளிச்சம் அணைந்து விடுமோ என்று மூமின்கள் பயந்து "எங்கள் றப்பே, எங்கள் வெளிச்சத்தை எங்களுக்கு நிறப்பமாக்குவாயாக, இன்னும் எங்களுக்குப் பிழை பொறுப்பாயாக, நிச்சயமாக நீ எல்லா பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன்" என்று பிரார்த்திப்பார்கள் என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

مُذَبْذَبِيْنَ بَيْنَ ذٰلِكَ ۖ لَآ إِلٰى هٰٓؤُلَآءِ وَلَآ إِلٰى هٰٓؤُلَآءِ ۚ
وَمَنْ يُّضْلِلِ اللّٰهُ فَلَنْ تَجِدَ لَهٗ سَبِيْلًا

143. (அவர்கள்) இக்கூட்டத்திலுமில்லை; அக்கூட்டத்திலும் இல்லை; இவற்றிற்கு மத்தியில் தத்தளிக்கின்றனர்; மேலும், எவனை அல்லாஹ் வழிகெடுக்கின்றானோ அவனுக்கு (விடுதலைக்குரிய) வழியை நீர் பெற்றுக் கொள்ளவே மாட்டீர்.

இந்த ஆயத்தில் முனாஃபிக்குகளது இரண்டுங் கெட்ட நிலை விளக்கப்பட்டிருக்கிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَّخِذُوا الْكَافِرِينَ أَوْلِيَاءَ مِنْ دُونِ الْمُؤْمِنِينَ ۚ أَتُرِيدُونَ أَنْ تَجْعَلُوا لِلَّهِ عَلَيْكُمْ سُلْطَانًا مُبِينًا

144. விசுவாசிகளே! நீங்கள் விசுவாசிகளைத் தவிர்த்து, நிராகரிப்பவர்களைக் காரியக் கர்த்தர்களாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம்; (அவ்வாறு செய்து) உங்களுக்குக் கேடாக அல்லாஹ்வுக்கு தெளிவான ஆதாரத்தை ஏற்படுத்திக் கொள்வதை நீங்கள் விரும்புகின்றீர்களா?

மூமின்கள் இஸ்லாமிய விரோதிகளைத் தங்களது, நேசர்களாகவும், உதவியாளர்களாகவும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதும், அவ்வாறு அவர்களை ஏற்படுத்திக் கொள்பவர் முனாஃபிக்காக இருக்கிறார் என்பதற்கு அடையாளம் என்பதும் இந்த ஆயத்திற் சொல்லப்பட்ட விதிகளாகும்.

إِنَّ الْمُنَافِقِينَ فِي الدَّرْكِ الْأَسْفَلِ مِنَ النَّارِ وَلَنْ تَجِدَ لَهُمْ نَصِيرًا

145. நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தின் அடித்தளத்தில் கிடக்கின்றனர்; மேலும், நீர் அவர்களுக்கு உதவியாளரைக் காணவே மாட்டீர்.

“முனாஃபிக்குகளை நரகில் இரும்புப் பெட்டகத்தில் போட்டுப் பூட்டப்படும்” என்று ஹளரத் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

“ஒருவரில் மூன்று காரியங்களிருந்தால் அவர் முனாஃபிக் காவார்’ ஒரு செய்தியைப் பேசினால் பொய்யைப் பேசுவார், வாக்குறுதி அளித்தால் அதற்கு மாறு செய்வார், நம்பியவருக்குத் துரோகம் செய்வார்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

சகல உம்மத்துகளும் தங்கள் தங்களிலுள்ள முனாஃபிக் குகளை அழைத்து வந்தாலும் நாம் ஹஜ்ஜாஜுப்னு யூஸுபை மட்டும் கொண்டு வந்தால் நாம்தான் அவர்களை மிகைத்து விடுவோம் என்று உமருப்னு அப்தில் அஜீஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஹஜ்ஜாஜுப்னு யூஸுப் ஸெய்யிதுமார்களிலும், உலமாக்களிலும் ஐம்பதாயிரம் பேரை அநியாயமாகக் கொன்றிருப் பதாகவும், இவரது அநியாயத்தைச் சகிக்க முடியாமல் குறைஷியில் நுளறுப்னு கினானாவின் மக்களில் பலர் அறப் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவின் கடற்கரைப் பிரதேசத்திற் குடியேறியதாகவும் சரித்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

إِلَّا الَّذِينَ تَابُوا وَأَصْلَحُوا وَاعْتَصَمُوا بِاللَّهِ وَأَخْلَصُوا دِينَهُمْ لِلَّهِ فَأُولَٰئِكَ مَعَ الْمُؤْمِنِينَ ۖ وَسَوْفَ يُؤْتِ اللَّهُ الْمُؤْمِنِينَ أَجْرًا عَظِيمًا

146. (ஆனால், மனம் வருந்திப் பாவங்களை விட்டு மீண்டு, நல்ல காரியங்களைச் செய்து, இன்னும், தாங்கள் அல்லாஹ்வை (மன) உறுதியாய்ப் பற்றிக் கொண்டு, தங்களுடைய மார்க்கத்தை அல்லாஹ்வுக்கே இதய சுத்தியாக்கியவர்களைத் தவிர மற்ற பாவிகள் நரகில் கிடப்பார்கள்). ஆகவே, (பாவத்தைவிட்டு மீண்ட) அவர்கள் உண்மை விசுவாசிகளுடன் இருக்கின்றனர்; மேலும், அல்லாஹ் விசுவாசிகளுக்கு மகத்தான கூலியை சமீப காலத்தில் கொடுப்பான்.

முனாஃபிக்குகளாக இருப்பவர்கள் தங்களது முனாஃபிக் தன்மையை விட்டொழித்துத் தங்களைச் சீர்திருத்திச் சன்மார்க்கத்தைப் பலமாகப் பின்பற்றி நடந்தால் அவர்களை அல்லாஹு தஆலா மன்னித்து, மூமின்களது கூட்டத்தில் அவர்களைச் சேர்ப்பான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

مَا يَفْعَلُ اللَّهُ بِعَذَابِكُمْ إِنْ شَكَرْتُمْ وَآمَنْتُمْ ۚ وَكَانَ اللَّهُ شَاكِرًا عَلِيمًا

147. நீங்கள் நன்றி செலுத்தி (அல்லாஹ்வை) விசுவாசித்தால், அல்லாஹ் உங்களை வேதனை செய்யமாட்டான்; மேலும், அல்லாஹ் நன்றி செய்கிறவனாக (யாவையும்) அறிபவனாக இருக்கின்றான்.

அல்லாஹு தஆலா அளித்துள்ள அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்தி, அவன் மீது ஈமான் கொண்டிருப்பவர்களை வேதனை செய்வதால் அல்லாஹு தஆலாவிற்கு ஒரு லாபமுமில்லை. ஆகவே, இவ்விரு தன்மைகளையும் உள்ளவர்களை அவன் வேதனை செய்ய மாட்டான். தவிரவும், தனது அடியார்கள் செய்யும் சொற்ப வணக்கத்தையும் கூட அவன் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டு அந்த நன்றியறிதலுக்குரிய கூலியை அளிப்பதில் மிகவும் அறிந்தவன் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

شَاكِرًا **அஷ்ஷாக்கிர்,** என்பதற்கு நன்றி செலுத்துபவர், நன்றி மறவாதவர் என்பது பொருள். ஆயினும், அல்லாஹு தஆலாவிற்கு நன்றி செய்ய ஒருவராலும் முடியாது. ஆதலால், இந்தப் பெயர் அல்லாஹு தஆலாவிற்கு உபயோகிக்கும் போது அடியார்கள் நன்றி செலுத்துவதை உணர்பவன், அடியார்கள் செய்யும் அற்ப வணக்கங்களையும் ஏற்றுக் கொள்பவன் என்பது கருத்து.

لَا يُحِبُّ اللَّهُ الْجَهْرَ بِالسُّوءِ مِنَ الْقَوْلِ إِلَّا مَنْ ظُلِمَ ۚ وَكَانَ اللَّهُ سَمِيعًا عَلِيمًا

148. தீய வார்த்தையை (கோள் புறம் போன்றவற்றை) பகிரங்கமாகப் பேசுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆனால்

அநியாயஞ் செய்யப்பட்ட (தால் தனக்கு நியாயங்கிடைக்கப் பிறரிடங் கூறுப) வனைத் தவிர; மேலும், அல்லாஹ் (நல்லடியார்களின் குறைகளைக்) கேட்பவனாக (அவர்களின் நிலையை) அறிபவனாக இருக்கிறான்.

அல்லாஹ் விரும்புவதில்லை என்பதற்கு "அல்லாஹ் கோபமடைகிறான்" என்பது கருத்து. பிறர் மீது பொல்லாங்கு சொல்லிக் கொண்டு திரிவதை அல்லாஹ் விரும்புவதில்லை. குற்றம் குறை சொல்பவர் மீது அல்லாஹ்விற்குக் கோபமேற்படுகிறது என்பது கருத்து. ஆனால், அநீதி செய்யப்பட்டவர் தனக்கு நேர்ந்த அநீதியைக் குறித்துச் சப்தமிட்டுச் சொல்லல், அல்லது அநியாயஞ் செய்தவரைத் தண்டிக்கும்படி இறைவனிடம் துஆச் செய்தல் ஆகியவற்றிற்காக அவன் கோபமடைய மாட்டான்.

ஒரு கூட்டத்தாரிடம் ஒருவர் விருந்தினராக வந்தார். ஆனால், அந்தக் கூட்டத்தினர் அவருக்கு உணவளிக்கவில்லை. இதனைக் குறித்து அவர்களிடம் அவர் முறை யிட்டார். அதற்காக அவர்கள் அவரைக் கண்டித்தனர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

إِنْ تُبْدُوا خَيْرًا أَوْ تُخْفُوهُ أَوْ تَعْفُوا عَنْ سُوءٍ فَإِنَّ اللَّهَ كَانَ عَفُوًّا قَدِيرًا

149. நீங்கள் ஒரு நன்மையைப் பகிரங்கமாகச் செய்தாலும், அல்லது அதை மறைத்தாலும், அல்லது (பிறர் செய்த) தீங்கை மன்னித்தாலும் நிச்சயமாக அல்லாஹ் (உங்களுக்கு) மிக மன்னிப்பவனாக (உதவி செய்வதில்) பேராற்றலுள்ளவனாக இருக்கின்றான்.

நன்மை என்ற பதம் நாவினால் சொல்வதன் மூலம் ஏற்படும் நன்மைக்கும் நல்ல செய்கைக்கும் பொதுவானது.

தீமையை மன்னித்தல் என்பதற்கு தீமை செய்தவரைக் குற்றம் பிடிக்க உங்களுக்குச் சக்தி இருந்தும் அதனை மன்னிக்க வேண்டும் என்பதுதான் மிகவும் விசேஷமான கருத்து.

إِنَّ الَّذِينَ يَكْفُرُونَ بِاللَّهِ وَرُسُلِهِ وَيُرِيدُونَ أَن
يُفَرِّقُوا بَيْنَ اللَّهِ وَرُسُلِهِ وَيَقُولُونَ نُؤْمِنُ بِبَعْضٍ
وَنَكْفُرُ بِبَعْضٍ وَيُرِيدُونَ أَن يَتَّخِذُوا بَيْنَ
ذَٰلِكَ سَبِيلًا

150. நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் நிராகரித்து, இன்னும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதர்களுக்கும் இடையில் வித்தியாசப்படுத்தக் கருதி, "நாங்கள் (தீர்க்கதரிசிகளுள்) சிலரை விசுவாசித்துச் சிலரை நிராகரிக்கின்றோம்" என்று கூறி, (விசுவாசமும் நிராகரிப்புமாகிய) இதற்கிடையில் ஒரு (புது) வழியை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகின்றார்கள்.

யூதர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், தவ்ராத் வேதத்தையும், உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஈமான் கொள்வதாகவும், இவர்களைத் தவிரவுள்ளவர்களை நிராகரிப்பதாகவும் கூறினர். இது அல்லாஹு தஆலாவையும், அவனது நபிமார்களையும் நிராகரிப்பதைத் தவிர வேறில்லை. இன்னும் ஈமான் கொள்ளும் விஷயத்தில் அல்லாஹ்விற்கும் அவனது நபிமார்களுக்குமிடையில் பிரிப்பதாகவுமிருக்கிறது. இவ்விதமாகச் செய்வதால் ஈமானுக்கும் குஃப்ருக்குமிடையில் வேறு ஒரு வழியை உண்டாக்குவதாக இருக்கிறது. ஆகவே, இவ்விதமாகச் செய்பவர்கள் திட்டமாகக் காஃபிர்கள் என்பதும், அவர்கள் காஃபிர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை என்பதும் இந்த ஆயத்திற் கூறப்பட்ட விதிகளாகும்.

أُولَٰئِكَ هُمُ الْكَافِرُونَ حَقًّا ۚ وَأَعْتَدْنَا لِلْكَافِرِينَ
عَذَابًا مُّهِينًا

151. நிச்சயமாக அவர்கள்தாம் நிராகரிப்பவர்கள்; இன்னும், (நாம்) நிராகரிப்பவர்களுக்கு இழிவைத் தரும் வேதனையைச் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்.

இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்டபடி அல்லாஹு தஆலாவிற்கும் அவனது நபிமார்களுக்குமிடையில் பாகுபாடு செய்து சிலரை மட்டும் உறுதி கொண்டு சிலரை நிராகரித்தவர்களாகிய காஃபிர்களுக்கு மறுமையில் கிடைக்கும் வேதனையைப் பற்றிய விபரம் இந்த ஆயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

وَالَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرُسُلِهِ وَلَمْ يُفَرِّقُوا بَيْنَ أَحَدٍ مِّنْهُمْ
أُولَٰئِكَ سَوْفَ يُؤْتِيهِمْ أُجُورَهُمْ ۗ وَكَانَ اللَّهُ
غَفُورًا رَّحِيمًا

152. மேலும், எவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் விசுவாசித்து, அவர்களிலிருந்து எவருக்கிடையிலும் பாகுபாடு செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்களுக்கு (அல்லாஹ்) அவர்களின் நற்கூலிகளை விரைவில் கொடுப்பான்; மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவனாக பேரன்புடையோனாக இருக்கின்றான்.

காஃபிர்களுக்கு மறுமையில் கிடைக்கக்கூடிய வேதனையைப் பற்றிக் கூறிய பின் இங்கிருந்து மூமின்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைப் பயனைப் பற்றி விபரிக்கப்படுகிறது.

மேலும், ஒருவன் தன்னை மூமின் என்று நினைத்துக் கொள்வதால் மட்டும் ஈமான் உண்டாகி விடப்போவதில்லை என்பதும், அதற்கு உரிய நிபந்தனைகளும், அதன் பயன்களும் இருந்தால்தான் அது உண்டாகும் என்பதும் இந்த ஆயத்துகளிலிருந்து தெரிய வருகிறது.

يَسْـَٔلُكَ اَهْلُ الْكِتٰبِ اَنْ تُنَزِّلَ عَلَيْهِمْ كِتٰبًا مِّنَ السَّمَاۤءِ
فَقَدْ سَاَلُوْا مُوْسٰۤى اَكْبَرَ مِنْ ذٰلِكَ فَقَالُوْۤا اَرِنَا اللّٰهَ
جَهْرَةً فَاَخَذَتْهُمُ الصّٰعِقَةُ بِظُلْمِهِمْ ۚ ثُمَّ اتَّخَذُوا
الْعِجْلَ مِنْۢ بَعْدِ مَا جَاۤءَتْهُمُ الْبَيِّنٰتُ فَعَفَوْنَا عَنْ
ذٰلِكَ ۚ وَاٰتَيْنَا مُوْسٰى سُلْطٰنًا مُّبِيْنًا ۝

153. (நபியே) நீர் வானத்திலிருந்து ஒரு வேதத்தை அவர்களின் மீது இறக்கித் தர வேண்டுமென்று வேதத்தை உடையவர்கள் உம்மைக் கேட்கின்றனர்; நிச்சயமாக அவர்(களின் முன்னோர்)கள் மூஸா (நபி) இடம் இதைப் பார்க்கினும் மிகப்பெரியதாகக் கேட்டு, “எங்களுக்கு அல்லாஹ்வையே பகிரங்கமாகக் காண்பியும்” என்று கூறினார்கள். ஆதலின், அவர்களின் அநீதத்தினால் (அவர்கள் தூர் மலையில் அல்லாஹ்வைக் காணச்சென்ற பொழுது) அவர்களை இடி முழக்கம் பிடித்துக் கொண்டது. அதன்பின், அவர்களுக்கு அத்தாட்சிகள் வந்த பிறகும் அவர்கள் காளைக்கன்றை (தெய்வமாய் வணங்க) எடுத்துக் கொண்டனர். அப்பால் இதையும் மன்னித்து நபி மூஸாவுக்குப் தெளிவான ஆதாரத்தைக் கொடுத்தோம்.

யூதர்களிலுள்ள பாதிரிமார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் “தாங்கள் உண்மையான நபியாக இருந்தால் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கொண்டு

வந்ததுபோல் வானத்திலிருந்து மொத்தமாக ஒரு வேத புத்தகத்தை எங்களுக்குக் கொண்டுவர வேண்டும்” என்று கேட்டார்கள். அவர்களது இக்கேள்விக்கு இறைவன் இந்த ஆயத்தில் பதிற் கூறுகிறான். மேலும், தவ்ராத் வேதம் அருளப்பட்டதுபோல் பலகைகளில் வானத்தின் எழுத்துக்களால் எழுதப்பட்ட வேத கிரந்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டதாகவும் மற்றொரு ரிவாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் இல்லை. அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இதனைப் பார்க்கினும் பெரிய வினாவை கேட்கவுமில்லை. எனினும் “இதனைப் பார்க்கினும் மிகப் பெரியதை மூஸாவிடம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்” என்று இறைவன் கூறி இருப்பதற்குக் காரணம், ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்தவர்கள் பின்பற்றி வந்தார்கள். என்பதனாலேயே. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இறைவனைப் பிரத்தியட்சமாகக் காண்பிக்க வேண்டும் என்று யூதர்கள் கேட்ட விபரம் ஸூரத்துல் பகரா 55வது ஆயத்தில் விபரமாக கூறப்பட்டிருக்கிறது.

مِنْۢ بَعْدِ مَا جَاۤءَتْهُمُ الْبَيِّنٰتُ **“அவர்களுக்கு (அநேக) அத்தாட்சிகள் வந்த பின்னர்”** என்ற வசனத்திற் சொல்லப்பட்டுள்ள அத்தாட்சிகள் என்ற பதம் ஃபிர்அவ்னிடம் ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காண்பித்த அற்புதங்கள் கடலைப் பிளந்தது முதலிய வற்றைக் குறிக்கிறது. ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறதாகச் சொல்லப் பட்டுள்ள தெளிவான அதிகாரம் என்றது யூதர்கள் காளைக்கன்றை வணங்கிய குற்றத்திற்காக அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டவுடன் அவர்கள் அதற்கிசைந்து வெட்டிக் கொண்டதைக் குறிக்கிறது.

وَرَفَعْنَا فَوْقَهُمُ الطُّوْرَ بِمِيْثَاقِهِمْ وَقُلْنَا لَهُمُ ادْخُلُوا

الْبَابَ سُجَّدًا وَّقُلْنَا لَهُمْ لَا تَعْدُوْا فِي السَّبْتِ وَاَخَذْنَا مِنْهُمْ مِّيْثَاقًا غَلِيْظًا ﴿١٥٤﴾

154. இன்னும், நாம் அவர்களுடைய உறுதி மொழி(யை வாங்குதலு)க்காக அவர்களுக்கு மேல் தூர் மலையை உயர்த்தினோம்; இன்னும் (நீங்கள் நகரத்தின்) 'தலைவாயிலில் பணிந்தவர்களாகப் பிரவேசியுங்கள்' என்று அவர்களுக்குச் சொல்லியிருந்தோம்; இன்னும். 'சனிக்கிழமையில் (வேலை செய்து என் கட்டளையை) மீறாதீர்கள்' என்றும் அவர்களுக்குச் சொன்னோம்; அன்றியும், அவர்களிடத்திலிருந்து பலமான உறுதி மொழியையும் வாங்கினோம். (அவ்வாறிருந்தும் மீறிவிட்டார்கள்).

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர்ஸீனா மலைக்குச் சென்று இறைவனால் அருளப்பட்ட தவ்ராத் வேதத்தைப் பெற்றுக் கொண்டு வந்தார்கள். அதிலுள்ள கட்டளைகள் மிகக்கடுமையாக இருக்கின்றன வென்று யூதர்கள் நினைத்து அவ்வேதத்தின் கட்டளைப்படி நடக்கச் சம்மதிக்கவில்லை. அப்பொழுது மலையை அடியுடன் பிடுங்கும்படி ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஏவப்பட்டார்கள். அவ்வாறே பிடுங்கி அதனை அவர்களது தலைக்கு மேலில் உயர்த்தினார்கள். அதன் பின்னர், அவர்கள் அதனை அங்கீகரித்தனர் என்று ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

الْبَابَ **அல்பாப** அதாவது அந்தத் தலைவாசல் என்பது பைத்துல் முகத்தஸிலுள்ள தலைவாசலைக் குறிக்காது. ஏனெனில், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் யூதர்கள் பைத்துல் முகத்தஸில் பிரவேசிக்கவே இல்லை. ஆகவே, இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட தலைவாசல் **அரீஹா** என்ற ஊரின் **பாபுல் குர்பத்** என்னும் தலைவாசலாகும். இதில் நுழைவதற்கு முன் மரணமடைவார்கள் என்று மூஸா நபியிடம் இறைவன் அறிவித்தான். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரதிநிதியான

யூஷஉப்னு நூன் காலத்தில் யூதர்கள் **அரீஹா** என்னும் ஊருக்குள் நுழைந்தனர்.

لَهُمْ لَا تَعْدُوْا فِي السَّبْتِ **சனிக்கிழமையில் (வேலை செய்து என் கட்டளையை) மீறாதீர்கள்** என்ற கட்டளை ஹளரத் தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்தில் இறைவனால் பிறப்பிக்கப்பட்டதாகும். இவற்றைப் பற்றிய முழு விபரங்கள் சூரத்துல் பக்ரா 65வது ஆயத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

فَبِمَا نَقْضِهِمْ مِّيْثَاقَهُمْ وَكُفْرِهِمْ بِاٰيٰتِ اللّٰهِ وَقَتْلِهِمُ الْاَنْۢبِيَآءَ بِغَيْرِ حَقٍّ وَّقَوْلِهِمْ قُلُوْبُنَا غُلْفٌ ۭ بَلْ طَبَعَ اللّٰهُ عَلَيْهَا بِكُفْرِهِمْ فَلَا يُؤْمِنُوْنَ اِلَّا قَلِيْلًا ﴿١٥٥﴾

155. எனவே (அவர்கள்) தங்களின் உடன்படிக்கையை முறித்ததாலும், அல்லாஹ்வின் வசனங்களை அவர்கள் நிராகரித்ததாலும், தீர்க்கதரிசி (நபிமார்)களை நியாயமின்றிக் கொலை செய்ததாலும், எங்களுடைய இருதயங்கள் திரையிடப்பட்டிருக்கின்றன என்று சொல்லுவதாலும், (அல்லாஹ் அவர்களை சபித்து விட்டான்) என்றாலும், அவர்கள் மாறு செய்து கொண்டேயிருந்ததால் (அவர்களின் இருதயங்களாகிய) அவற்றின் மீது அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். ஆதலின், (அவர்களுள்) சிலரைத் தவிர (பெரும்பாலோர்) விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

யூதர்களை அல்லாஹு தஆலா சபித்து தனது ரஹ்மத் தென்னும் கிருபையை விட்டுத் தூரமாக்கி விட்டான். அவர்களில் ஒரு கூட்டத்தினரைக் குரங்குகளாக மாற்றினான். இவைகளல்லாத வேறு பல வேதனைகளிலும் அவர்களை உட்படுத்தினான். அவர்களை இப்படிச் செய்ததற்குரிய காரணங்கள் இந்த ஆயத்திற் சொல்லப் பட்டிருக்கின்றன. அவர்கள் தங்களது உடன்படிக்கையை முறித்தது, அல்லாஹ்வின் ஆயத்துகளை நிராகரித்தது, நபிமார்களைக் கொலை

செய்தது முதலியவற்றைப் பற்றிய விபரம் சூரத்துல் பகராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

فَلَا يُؤْمِنُوْنَ اِلَّا قَلِيْلًا **சிலரைத் தவிர (பெரும்பாலோர்) விசுவாசங் கொள்ள மாட்டார்கள்** என்பதற்கு விபரம் என்னவெனில், யூதர்களில் அப்துல்லா ஹிப்னு ஸலாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும், அவரைச் சேர்ந்த வேறு சிலரும்தான் ஈமான் கொண்டு இஸ்லாம் மார்க்கத்திற் சேர்ந்தனர். பெரும்பாலானவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையூறு விளைவிப்பதிலும், பகைவர்களுக்கு இடங் கொடுப்பதிலுமே இருந்தனர். இதனைப் பற்றிய விபரத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சரித்திரத்தில் காணலாம். தவிர, இந்த ஆயத்திற்கு فَلَا يُؤْمِنُوْنَ اِلَّا قَلِيْلًا **“சிலரைத் தவிர (பெரும்பாலோர்) விசுவாசங் கொள்ள மாட்டார்கள்”** என்றும் பொருள் செய்யலாம். இதன்படி யூதர்கள் சில நபிமார்களை மட்டும் அங்கீகரித்து மற்றவர்களை நிராகரிப்பதும், தவ்ராத் வேதத்தை மட்டும் அங்கீகரித்து மற்றைய வேதங்களை அங்கீகரிக்காமல் இருப்பதும், தவ்ராத் வேதத்திலுள்ள கட்டளைகளிற் சிலவற்றிற்குக் கீழ்ப்படிந்து மற்றவற்றிற்குக் கீழ்ப்படியாமல் இருப்பதும் கருத்தாகும்.

وَّبِكُفْرِهِمْ وَقَوْلِهِمْ عَلٰى مَرْيَمَ بُهْتَانًا عَظِيْمًا ۙ

156. இன்னும், (அவர்கள்) தங்களுடைய நிராகரிப்பினாலும், ‘மர்யம்’ மீது மிகப் பெரிய அவதூறைப் பேசியதாலும், (சபிக்கப்பட்டனர்)

யூதர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலாவின் தூதர்தான் என்று அங்கீகரிக்காமல், அவர்களது தாயாராகிய மர்யம் ஸித்தீக்கா அவர்கள் விபச்சாரம் செய்ததாகவும் கூறினர். ஹளரத் மர்யம் ஸித்தீக்கா மிகத்தூய்மை யானவர்கள். அவ்வாறு இருக்க அவர்கள் மீது இவ்விதமான விஷயத்தை அவர்கள் பொய்யாகக் கூறியதால் அதனை “மிகப் பெரிய அவதூறு” என்று இறைவன் கூறியுள்ளான். ஆகவே, யூதர்கள் மீது

இறைவனது வேதனை வந்ததற்கு ஏற்பட்ட பல காரணங்களில் இந்த ஆயத்திற் சொல்லப்பட்ட இரண்டு காரணங்களும் சேர்ந்தவை.

وَّقَوْلِهِمْ اِنَّا قَتَلْنَا الْمَسِيْحَ عِيْسَى ابْنَ مَرْيَمَ رَسُوْلَ اللّٰهِ ۚ وَمَا قَتَلُوْهُ وَمَا صَلَبُوْهُ وَلٰكِنْ شُبِّهَ لَهُمْ ؕ وَاِنَّ الَّذِيْنَ اخْتَلَفُوْا فِيْهِ لَفِيْ شَكٍّ مِّنْهُ ؕ مَا لَهُمْ بِهٖ مِنْ عِلْمٍ اِلَّا اتِّبَاعَ الظَّنِّ ۚ وَمَا قَتَلُوْهُ يَقِيْنًا ۙ

157. மேலும், ‘நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய மர்யமுடைய குமாரர் ஈஸா மஸீஹை நிச்சயமாகக் கொன்று விட்டோ’மென்று அவர்கள் கூறுவதாலும் (அவர்களை நாம் சபித்துவிட்டோம்) ஆனால், அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, சிலுவையிலடிக்கவுமில்லை; என்றாலும் அவர்களுக்கு அ(வரல்லாத)வன் ஒப்பாக்கப்பட்டான்; மேலும், அவர் விஷயத்தில் (சிலுவையிலடிக்கப்பட்டவர் அவரா? அல்லது அவரல்லாதவனா? என்று) யார் அபிப்பிராய பேதத்தில் இருக்கின்றனரோ (அவர்கள்) நிச்சயமாக அவரைப் பற்றிச் சந்தேகத்திலேயே இருக்கின்றனர்; அவர்கள் தங்களின் (மனதில் தோன்றிய) எண்ணத்தைப் பின்பற்றுகின்றனரேயன்றி, அவரைப் பற்றி அவர்களுக்கு (உண்மையான) அறிவே கிடையாது; ஏனெனில், அவர்கள் நிச்சயமாக அவரைக் கொல்லவேயில்லை.

ரிவாயத்து:- யூதர்களில் ஒரு கூட்டத்தினர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து ‘சூனியக்காரியின் மகன் சூனியக்காரன், செய்பவனின் மகன் செய்பவன்’ என்று திட்டி அவர்கள் மீதும் அவர்களது அன்னையின் மீதும் விபச்சாரக் குற்றங் கூறினர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதனைச் செவியேற்ற போது அவர்களைக் குறித்து இறைவனிடம் “நாயனே, நீ எனது றப்பு.

நான் உனது ரூஹிலிருந்து வெளிப்பட்டவன். உனது ‘குன்’ என்னும் கலிமாவினால் என்னை நீ சிருஷ்டித்தாய். என் விருப்பத்திற்கு அவர்களிடம் நான் வரவில்லை. நாயனே, என்னைத் திட்டியவர் களையும், என் தாயைத் திட்டியவர்களையும் நீ லஃனத்து செய்வ (சபிப்ப)ராயாக” என்று பிரார்த்தித்தார்கள். இந்த துஆவை அல்லாஹுத் தஆலா அங்கீகரித்து அவர்களைத் திட்டியவர்களையும், அவர்களது தாயைத் திட்டியவர்களையும் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றி விட்டான். இதனை யூதர்களது தலைவன் பார்த்து பயந்து நடுங்கினான். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் தன்னைப் பற்றியும் பிரார்த்தனை செய்து விடுவார்களோ என்று அஞ்சினான். யூதர்களை ஒன்று கூட்டி இதனைப்பற்றி ஆலோசனை செய்தான். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொலை செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. உடனே, இறைவன் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இவ்விபரத்தை ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமாக அறிவித்து, அவரை வானில் உயர்த்திக் கொள்வதாகவும் தெரிவித்தான். பின்னர், ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது தோழர்களிடம் “தம்மைப்போல் உருவம் மாற்றப்பட்டு, தூக்கி லிடப்பட்டுக் கொல்லப்படவும், சுவர்க்கத்தில் பிரவேசிக்கவும் இஷ்டப்படுகிறவர் உங்களில் எவர்?” என்று வினவினார்கள். அவர்களில் ஒருவர் “நான் உடன்படுகிறேன்” என்றார். அல்லாஹு தஆலா அவரது உருவத்தை ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது உருவத்தைப் போல் மாற்றினான். உருவம் மாற்றப்பட்ட இவரை அவர்கள் ஈஸா வென்று கழுவிலேற்றிக் கொன்றார்கள்.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் முனாஃபிக் தன்மையுள்ள ஒருவர் இருந்ததாகவும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொலை செய்து விட வேண்டுமென்று யூதர்கள் நாடியபோது அவரைக் காண்பித்துக் கொடுப்பதாக அந்த முனாஃபிக்கு பேசி முடித்துக் கொண்டு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருந்த வீட்டிற்குள் அந்த முனாஃபிக்கு சென்றபோது, ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

உயர்த்தப்பட்டதாகவும், அவர்களது உருவத்தைப்போல் அந்த முனாஃபிக்கு மாற்றப்பட்டதாகவும், உருவம் மாற்றப்பட்ட அந்த முனாஃபிக்கை யூதர்கள் பிடித்து, அவர்தான் ஈஸா அலைஹிஸ்ஸலாம் என்று நினைத்துக் கொன்றார்கள் என்றும் ஒரு ரிவாயத்து இருந்து வருகிறது.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிருந்த வீட்டிற்குள் கத்யானூஸ் என்ற யூதர் வந்து, அவர்களைக் காணாமல் திரும்பவந்தபோது, ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்போல் யூதரின் உருவத்தை இறைவன் மாற்றி விட்டதாகவும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் என்று யூதர்கள் நினைத்து அந்த யூதரைப் பிடித்துக் கொன்று கழுவிலேற்றினார்கள் என்றும் மற்றொரு ரிவாயத்து இருந்து வருகிறது. இவ்விதமான அற்புதங்கள் ஒரு நபி இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அவருக்காக நிகழ்வது முடியாத காரியமில்லை.

“யூதர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொல்வதற்காக அவர்களிருந்த இடத்திற்கு வந்தபோது அல்லாஹு தஆலா அவரை வானத்திற்கு உயர்த்தினான். ஆகவே, யூதர்களிலுள்ள பாமரர்களிடம் இச்செய்தி தெரிய வந்தால் குழப்பம் உண்டாகிவிடும் என்று யூதத் தலைவர்கள் பயந்து ஒரு மனிதனைப் பிடித்துக் கொன்று கழுவிலேற்றி விட்டு, இவர்தான் ஈஸா அலைஹிஸ்ஸலாம் என்று பொது மக்களிடம் கூறினர். தவிரவும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொது மக்களிடம் மிகக் குறைவாகவே பழகிவந்ததால் அதிகமானவர்களுக்கு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது பெயர்தான் தெரியுமேயன்றி ஆள் அடையாளம் தெரியாது. ஆதலால், அவர்கள் கழுவிலேற்றப்பட்டவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான்” என்று எண்ணிக் கொண்டனர் என்றும் அறிஞர்கள் பலர் கூறியிருக்கின்றனர். “ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கொல்லப்பட்டிருந்ததைப் பிரத்தியட்சமாக பார்த்தவர்கள் இருக்கிறார்கள் என்று கிறிஸ்துவர்கள் கூறுவதை ஆராய்ந்து பார்க்கும் போது அவர்களது எல்லா வாக்கு

மூலங்களும் மிகச் சிலருடைய வாக்கு மூலமாகவே இருப்பதாக வெளியாகின்றன. இச்சிலர் ஒன்று கூடிப் பொய்யை இட்டுக்கட்டி, கட்டுப்பட்டான முறையில் அதனை நாட்டில் பரப்புவது முடியாத காரியமல்லவென்று விளங்குகிறது'' என்று இமாம் ராஜீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களது தஃப்ஸீரில் எழுதப் பட்டிருக்கிறது.

இச்சம்பவம் நிகழ்ந்த பிறகு யூதர்களுக்கிடையில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சம்மந்தமாக அபிப்பிராய பேதங்கள் தோன்றின. அதாவது "கொல்லப்பட்டிருப்பவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களாக இருந்தால் நமது மனிதர் எங்கே? இவர் நமது மனிதராக இருந்தால் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எங்கே?'' என்று சிலர் கூறினர்.

"இந்த முகம் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது முகத்தைப் போல் இருக்கிறது. ஆனால், இந்த உடல் நமது மனிதரின் உடலைப் போலிருக்கிறது'' என்று சிலர் கூறினர். "அல்லாஹு தஆலா ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போன்ற உருவத்தைக் கொல்லப்பட்டவர் மீது ஏற்படுத்திய போது முகத்தை மட்டும்தான் மாற்றினான், உடலை மாற்றவில்லை'' என்றுஞ் சிலர் கூறி இருக்கிறார்கள்.

"அல்லாஹு தஆலா என்னை வானுலகிற்கு உயர்த்திக் கொள்வான்'' என்று ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதைச் செவியேற்றிருந்தவர்கள், "ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் உயர்த்திக் கொள்ளப்பட்டார்கள்'' என்று கூறினார்கள்.

தவிர, وَاِنَّ الَّذِيْنَ اخْتَلَفُوْا فِيْهِ **மேலும் நிச்சயமாக அவரைக் குறித்து அபிப்பிராய பேதத்தில் இருக்கிறார்களே அவர்கள்** என்ற வசனம் கிறிஸ்துவர்களைக் குறிக்கிறது என்றுஞ் சொல்லப்படுகிறது. ஏனெனில், "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கொல்லப் படவுமில்லை, கழுவிலேற்றப்படவுமில்லை, அவரை அல்லாஹு

தஆலா வானத்திற்கு உயர்த்திக் கொண்டான்'' என்று அவர்களில் ஒரு கூட்டத்தினர் கூறுகின்றனர். "யூதர்கள் அவரைக் கொலை செய்து விட்டனர்'' என்று அவர்களிலேயே இன்னொரு கூட்டத்தினர்கள் கூறுகின்றனர். மேலும், அவர்களிலுள்ள நஸ்தூரியர்கள் "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புற ஸ்தூலப்படி கழுவிலேற்றப் பட்டார்கள், ஆனால், ஆன்மாவின்படி கழுவிலேற்றப்பட வில்லை'' என்று கருதுகின்றனர்.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து இவ்விதமாகப் பலவாறு கூறிக் கொண்டிருப்பவர்கள் உறுதியாக ஒன்றையுங் கூறவில்லை. தங்களுக்குள்ளாகவே சந்தேகத்திலும் குழப்பத்திலுமே இருக்கின்றனர் என்பதும் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை யூதர்கள் கொல்லவில்லை என்பதே உறுதி என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

بَلْ رَّفَعَهُ اللّٰهُ اِلَيْهِ ۭ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا ۝

158. ஆனால், அல்லாஹ் அவரைத் தன்னிடம் உயர்த்திக் கொண்டான்; மேலும், அல்லாஹ் (சர்வ சக்தியிலும்) மிகைத்தவனாக (தகுந்ததைச் செய்யும்) நிபுணனாக (ஞானமுடையோனாக) இருக்கின்றான்.

அஜீஸ், என்ற பதம் **இஸ்ஸத்** என்ற பதத்திலிருந்து பிறந்தது. இப்பதம் அல்லாஹு தஆலாவின் ஆற்றலின் பரிபூரண நிலையை அறிவிக்கிறது. ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானுலகிற்கு உயர்த்தப்பட்டது மனித சக்தியைக் கவனிக்கும் போது அசாத்தியமான காரியம். ஆயினும் அல்லாஹு தஆலாவின் சக்தியைக் கவனிக்கும் போது அது மிகவும் சுலபமானதாகும். தவிரவும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாங்களாக வானுலகம் சென்றதாக இங்கு சொல்லப்படவில்லை, அல்லாஹு தஆலாவே அவர்களை உயர்த்திக் கொண்டதாகக் கூறி இருப்பதால் இவ்விஷயத்திற் சந்தேகங் கொள்ள இடமில்லை.

மேலும், அல்லாஹு தஆலா ஹக்கீமாக அதாவது விவேக முள்ளவனாக இருக்கிறான் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பதால் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விஷயத்தில் அவனது ஹிக்மத்தென்னும் விவேகத்திற்கும் சம்மந்த மிருந்து வருகிறது.

ரிவாயத்து:- "அல்லாஹு தஆலா ஹளரத் ஈஸா அவர்களை உயர்த்தியபோது அவருக்கு இறக்கைகளை அளித்து, நூர் என்னும் பிரகாசத்தை அவருக்கு உடுத்தி, உணவு, குடிப்பு முதலிய மிருக இச்சைகளை விட்டு அவரை விலக்கினான். அவர் மலக்குகளுடன் சேர்ந்து பறந்து விட்டார். அவர்களுடன் அர்ஷின் அண்டையில் இருக்கிறார்".

ரிவாயத்து:- ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முப்பதாவது வயதில் நபியாகி 33 வது வயதில் உயர்த்தப்பட்டார்கள். அவர்களது நுபுவ்வத்துடைய காலம் மூன்று வருடங்கள்தான் கழிந்திருக்கிறது என்று வஹபுப்னு முனப்பஹ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள்.

"நபிமார்களில் நான்கு பேர் உயிருடன் இருந்து கொண்டிருக் கின்றனர். அவர்களில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இத்ரீஸ் அலைஹிஸ் ஸலாம் ஆகிய இருவர் வானிலும் கிலுரு, இல்யாஸ் அலைஹிஸ் ஸலாம் ஆகிய இருவர் பூமியிலும் இருக்கின்றனர். இவர்களில் கிலுரு அலைஹிஸ்ஸலாம் கடலிலும், இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம் கரையிலும் இருக்கிறார்கள் என்பது இப்னு ஷாஹீன் ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் ரிவாயத்துச் செய்திருப்பதாக இமாம் ஸுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது **துர்ரே மன்தூர்** என்னும் "தஃப்ஸீரில் சூரத்துல் கஹ்ஃபின்" விரிவுரையில் எழுதி இருக்கிறார்கள்.

وَإِن مِّنْ أَهْلِ الْكِتَٰبِ إِلَّا لَيُؤْمِنَنَّ بِهِۦ قَبْلَ مَوْتِهِۦ ۖ
وَيَوْمَ الْقِيَٰمَةِ يَكُونُ عَلَيْهِمْ شَهِيدًا ۝

159. இன்னும், வேதத்தையுடைய (யூத கிறிஸ்த)வர் களிலிருந்து எவரும் அவர் மரணமடையும் முன்பு நிச்சயமாக அவரை (ஈஸா நபியை) விசுவாசம் கொள்ளாமல் இருப்பதில்லை; சுவாசிக்காமலிரார். அன்றியும் அவர் எழுப்பப்படும் (இறுதி) நாளில் அவர்களின் (அக்கிரம நடத்தையின்) பேரில் சாட்சியாக இருப்பார்.

ரிவாயத்து:- யூதருக்கு மரண வேளை வந்து, மறுமையின் காரியத்தை அவன் பார்க்கும் போது மலக்குகள் அவனது முகத்திலும் பின் புறத்திலும் அடித்து "ஈஸா உம்மிடம் நபியாக வந்தார். அவரை நீ பொய்யர் என்று மறுத்தாய்" என்று கூறுவார்கள். அப்போது அவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு ஈமான் கொள்வார்கள். என்றாலும், அச்சமயத்தில் ஈமான் கொள்வது அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஆதலின், அவர்களது ஈமான் அங்கீகரிக்கப்பட மாட்டாது. இன்னும் கிறிஸ்துவரது மரண வேளையில் மலக்குகள் வந்து அவரது முகத்திலடித்து "உன்னிடம் ஈஸா அல்லாஹ்வின் அடிமையாகவும், ரசூலாகவும் வந்திருக்க, அவர்தான் அல்லாஹ் வென்றும், அல்லாஹ்வின் புதல்வரென்றும் நீ எண்ணிக் கொண்டிருந்தாயல்லவா?" என்று கூறுவார்கள். ஈமான் பிரயோஜனமளிக்காத அந்தச் சமயத்தில் அவரும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து "அவர் அல்லாஹ்வின் அடிமைதான்" என்று ஈமான் கொள்வார்.

இந்த ஆயத்திற்கு **வேதத்தையுடையவர்களிலிருந்து எவரும் அவர் மரணமடையும் முன்பு அவரை (ஈஸா நபியை) விசுவாசங் கொள்ளாமல் இருப்பது இல்லை** என்றும் அர்த்தம் செய்யலாம். இந்த அர்த்தத்தின்படி கியாமத்து நாள் சமீபத்திலிருக்கும் போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானிலிருந்து இறங்குவார்கள். அது சமயமுள்ள யூதர், கிறிஸ்துவ முதலிய வேதக்காரர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணிப்பதற்கு முன் அவரைக் கொண்டு ஈமான் கொள்வார்கள் என்பது கருத்தாகும்.

ஹதீஸ்:- "ஈஸா நீதியுள்ள மத்திசராக இறங்குவார். அவர் நெட்டையருமல்லர், குட்டையருமல்லர், நிதானமானவர், வெளுத் தவருமல்லர், சிவந்தவருமல்லர், அவருக்குத் தலை வியர்த்துக்

கொண்டே இருக்கும், பன்றியைக் கொல்வார், மதுவை உடைத்துக் கொட்டி விடுவார், சிலுவையை உடைப்பார், இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர்த்து ஏனைய மதங்களெல்லாம் அழிய வேண்டும் என்று மனிதரிடம் யுத்தம் செய்வார். அவருடைய காலத்தில் தஜ்ஜாலை அல்லாஹ் அழிப்பான். அவரது காலத்தில் ஒட்டகை புலியுடனும், மாடு வரிப்புலியுடனும், ஆடு ஓநாயுடனும் மேயும். குழந்தைகள் பாம்புடன் விளையாடுவர். இதற்கு ஏற்ற விதமாக அவ்வளவு நீதி செலுத்துவார். இவ்வுலகில் நாற்பது வருட காலம் உயிருடனிருந்து மரணிப்பார். முஸ்லிம்கள் அவருக்காக ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றி அவரை அடக்குவார்கள். அவரைக் கண்டவர் என் ஸலாமை அவருக்குச் சொல்ல வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- "அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மார்க்கத்தில் வருவார். அவரைக் கொண்டு யூதர்கள் கிறிஸ்துவர்கள் ஈமான் கொள்வார்கள். இமாம் மஹ்தீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் அஸ்ஹாபுல் கஹ்ஃபுகளும் அவருக்கு ஊழியம் செய்வார்கள். அவர் திருமணம் செய்து மக்களைப் பெறுவார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மார்க்கத்தில் உள்ள ஒலிமார்களுக்கு முத்திரையாகவுமிருப்பார்" என்று இமாம்கள் கூறி இருக்கிறார்கள்.

فَبِظُلْمٍ مِّنَ الَّذِيْنَ هَادُوْا حَرَّمْنَا عَلَيْهِمْ طَيِّبٰتٍ اُحِلَّتْ
لَهُمْ وَبِصَدِّهِمْ عَنْ سَبِيْلِ اللّٰهِ كَثِيْرًا ۙ﴿۱۶۰﴾

160. ஆகவே, யூதர்களாக இருந்த அவர்களுடைய அநியாயத்தினால் அவர்களுக்கு அனுமதிக்கப் பெற்றிருந்த வைகளுள் நல்லவற்றை அவர்களுக்கு விலக்கலாக்கி இருக்கிறோம்; இன்னும், அவர்கள் அநேகரை அல்லாஹ்வின் பாதையை விட்டுத் தடுத்து அழைப்பதனாலும், (இவ்வாறு செய்தோம்).

யூதர்களுக்கும் அவர்களுக்கு முன்னுள்ளோருக்கும் புசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொருட்களிற் பலவற்றை அவர்கள் அக்கிரமஞ் செய்யுந்தோறெல்லாம் ஒவ்வொன்றாக இறைவன் ஹராமாக்கி விட்டான். இதனைப் பற்றிய விபரம் ஸூரத்துல் அன்ஆம் 147வது ஆயத்தில் கூறப்பட்டுள்ளது.

وَّاَخْذِهِمُ الرِّبٰوا وَقَدْ نُهُوْا عَنْهُ وَاَكْلِهِمْ اَمْوَالَ
النَّاسِ بِالْبَاطِلِ ۗ وَاَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ مِنْهُمْ عَذَابًا اَلِيْمًا ﴿۱۶۱﴾

161. இன்னும், அவர்கள் வட்டி(த் தொகை) வாங்குவதாலும் - ஆனால் அவர்கள் இ(ப்படி வாங்குவ) தை விட்டு விலக்கப் பெற்றிருக்கிறார்கள். - இன்னும் அவர்கள் மனிதர்களுடைய பொருள்களை நியாயமின்றி புசிப்பதாலும் (மேற்கண்டவாறு விலக்கலாக்கினோம்). அவர்களில் நிராகரித்தவர்களுக்கு நோவினை செய்யும்படியான வேதனையை (நாம்) சித்தப்படுத்தியுள்ளோம்.

வட்டித் தொழில் புரிவது நமது மார்க்கத்தில் ஹராமாக ஏற்படுத்தப்பட்டிருப்பது போல அவர்களுக்கும் அது ஹராமாக ஏற்படுத்தப் பட்டிருந்தது. மனிதர்களிலும் லஞ்சம் வாங்குதல் முதலிய ஆகாத காரியங்களைச் செய்யலாகாது என்று விலக்கப் பட்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் இவற்றை மீறிச் செய்ததால் அவர்களுக்கு உண்ண ஹலாலாக இருந்த இப்பொருட்கள் ஹராமாக்கப்பட்டன.

لٰكِنِ الرّٰسِخُوْنَ فِى الْعِلْمِ مِنْهُمْ وَالْمُؤْمِنُوْنَ يُؤْمِنُوْنَ
بِمَاۤ اُنْزِلَ اِلَيْكَ وَمَاۤ اُنْزِلَ مِنْ قَبْلِكَ وَالْمُقِيْمِيْنَ
الصَّلٰوةَ وَالْمُؤْتُوْنَ الزَّكٰوةَ وَالْمُؤْمِنُوْنَ بِاللّٰهِ
وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ اُولٰٓئِكَ سَنُؤْتِيْهِمْ اَجْرًا عَظِيْمًا ﴿۱۶۲﴾

162. ஆயினும், (நபியே) அவர்களிலிருந்து கல்வியில் தேர்ந்தவர்களும், விசுவாசிகளும் உம்மிடம் அருளப்பெற்ற (வேதத்)தையும், உமக்கு முன்பே அருளப்பெற்ற (இதர வேதத்)தையும், விசுவாசங் கொள்வர்; இன்னும், தொழுகையை நிலைநிறுத்தி, ஜக்காத்தையும் கொடுத்து, இன்னும், அல்லாஹ்வையும் இறுதி (த்தீர்ப்பு) நாளையும் விசுவாசிக்கின்றவர்கள். இவர்கள் – இவர்களுக்கு மகத்தான கூலியை (நாம்) விரைவில் கொடுப்போம்.

“உங்களில் எவர் ஐந்து நேரத்துத் தொழுகைகளை அவர் எங்கே இருந்தாலும் சரி எவ்வாறிருந்தாலும் சரி பேணி நிறைவேற்றுகிறாரோ அவர் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை மின்னொளியைப் போல் (அவ்வளவு சீக்கிரமாக) ஸாபிக்கீன்களது கூட்டத்தில் சேர்ந்து கடந்து விடுவார். அவரது முகம் பூரணச் சந்திரனைப் போல் இலங்கும் நிலையில் கியாமத்து நாளில் அவர் வருவார். இன்னும் தொழுகையில் பேணுதலாக இருந்த ஒவ்வொரு இரவிலும் பகலிலும் ஒவ்வொரு ஷஹீதுடைய நற்கூலி இருக்கிறது” என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

إِنَّا أَوْحَيْنَا إِلَيْكَ كَمَا أَوْحَيْنَا إِلَىٰ نُوحٍ وَالنَّبِيِّينَ مِن بَعْدِهِ ۚ وَأَوْحَيْنَا إِلَىٰ إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ وَالْأَسْبَاطِ وَعِيسَىٰ وَأَيُّوبَ وَيُونُسَ وَهَارُونَ وَسُلَيْمَانَ ۚ وَآتَيْنَا دَاوُودَ زَبُورًا ﴿١٦٣﴾

163. நூஹு (நபி)க்கும் அவருக்குப் பின்னுண்டான தீர்க்க தரிசி (நபிமார்)களுக்கும் நாம் வஹீ அறிவித்ததே போல நிச்சயமாக நாம் உமக்கும் வஹீ அறிவித்திருக்கின்றோம்; இன்னும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் (இவர்களின்) சந்ததிகள், ஈஸா, அய்யூப், யூனுஸ், ஹாரூன், சுலைமான் ஆகியவர்கள் அளவிலும் வஹீ அறிவித்திருக்கின்றோம்; இன்னும், தாவூதுக்கு ஸபூரைக் கொடுத்திருக்கின்றோம்.

வானத்திலிருந்து தங்களுக்கு ஒரு வேதப் புத்தகத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் யூதர்கள் கேட்டதற்கு இந்த ஆயத்து பதிலாக இருப்பதுடன் அல்லாஹு தஆலாவிடமிருந்து வஹி வருவதும், நபிமார்கள் தோன்றுவதும், புதுமையான காரியமாக இல்லை என்பதும் இந்த ஆயத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது.

ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மனிதர்களால் துன்புறுத்தப்பட்ட நபிமார்களில் முதலாவதாக இருப்பதாலும், இரண்டாவது ஆதமாக இருப்பதாலும் இந்த ஆயத்தில் முதலாவதாக அவர்கள் கூறப் பட்டிருக்கிறார்கள். இவர்களது துஆவினால் இறைவன் அகிலத்தாரை அழித்தான். அவர்கள் நரைக்காமலும், ஒரு பற்கூட விழாமலும், பலம் குன்றாமலும் ஆயிரம் வயது வரை வாழ்ந்தார்கள்.

وَرُسُلًا قَدْ قَصَصْنَاهُمْ عَلَيْكَ مِن قَبْلُ وَرُسُلًا لَّمْ نَقْصُصْهُمْ عَلَيْكَ ۚ وَكَلَّمَ اللَّهُ مُوسَىٰ تَكْلِيمًا ﴿١٦٤﴾

164. மேலும், நாம் இதற்கு முன் உம்மிடம் விபரித்துக் கூறியிருக்கின்ற தூதர்களையும், உம்மிடம் (இதுவரை) விபரிக்காமலிருக்கின்ற தூதர்களையும் (உலகோருக்கு நேர்வழிகாட்டுவதற்காக அனுப்பியுள்ளோம்). தவிர, அல்லாஹ் மூஸாவுடன் வசனிக்கிறதாகவே வசனித்தான்.

ஒரு ரிவாயத்தில் ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் இவ்வுலகில் வந்திருக்கிறார்கள். அவர்களில் முன்னூற்றுப் பதின் மூவர் முர்ஸல்களென்றும், மற்றொரு ரிவாயத்தில் இரண்டு லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களென்றும், மற்றொரு ரிவாயத்தில் எட்டாயிரம் நபிமார்களென்றும் இவர்களில் பனு இஸ்ராயீல்களில் மட்டும் நான்காயிரம் பேர் என்றும்

கூறப்பட்டிருக்கிறது. ஆனால், நபிமார்கள் எத்தனை பேர் என்ற எண்ணிக்கையை வரையறுக்காமல் இருப்பதுதான் நல்லது. இந்த ரிவாயத்துகளெல்லாம் "கபரே ஆஹாத்" என்னும் ஹதீஸ்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவைகள். மார்க்கக் கொள்கை சம்மந்தமான வைகளில் இத்தகைய கபரே ஆஹாத்தான ரிவாயத்துகளுக்குப் பேராதரவு கிடையாது.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர் ஸீனா மலைக்கு வந்தபோது அல்லாஹு தஆலா அந்த மலையில் ஏழு காத தூரத்திற்கு (சுமார் எழுபது மைல் தூரம்) இருளை இறக்கினான். அதனை விட்டு ஷைத்தானையும், ஜீவராசிகளையும் விரட்டினான். அவரது தோள் புஜங்களில் நியமிக்கப் பட்டிருந்த இரு மலக்குகளையும் அகற்றினான். அப்புறம் அவருக்கு வானம் திறக்கப்பட்டது. அந்தரத்திலுள்ள மலக்குகளையும், அர்ஷையும் பார்த்தார். அல்லாஹு தஆலா அவருடன் பேசினான்.

رُسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى اللَّهِ حُجَّةٌ بَعْدَ الرُّسُلِ ۚ وَكَانَ اللَّهُ عَزِيزًا حَكِيمًا ﴿١٦٥﴾

165. தூதர்களுக்குப் பின் மனிதர்களுக்கு அல்லாஹ் விடத்தில் (விவாத) வழக்கு ஏற்படாமலிருப்பதற்காக (நல்லோருக்கு) நற்செய்தி கூறுபவர்களாகவும், (தீயோருக்கு) எச்சரிக்கை செய்பவர்களாகவும் தூதர்களை (அனுப்பி வைத்தோம்). மேலும், அல்லாஹ் மிகைத்தவனாக விவேகமுள்ளவனாக இருக்கிறான்.

"நாயனே, எங்களுக்கு நீ உனது தூதர்களை அனுப்பி யிருந்தால் அவர்களை நாங்கள் பின்பற்றி ஈமான் கொண்டு மூமின்களாகி இருப்போமல்லவா?" என்று கியாமத்து நாளில் எவரும் சொல்லாம லிருப்பதற்காக நற்செய்தி சொல்பவர்களாவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவுமுள்ள நபிமார்களை அல்லாஹு தஆலா இவ்வுலகிற்கனுப்பி இருக்கிறான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

لَّٰكِنِ اللَّهُ يَشْهَدُ بِمَا أَنزَلَ إِلَيْكَ ۖ أَنزَلَهُ بِعِلْمِهِ ۖ وَالْمَلَائِكَةُ يَشْهَدُونَ ۚ وَكَفَىٰ بِاللَّهِ شَهِيدًا ﴿١٦٦﴾

166. ஆனாலும், உமக்கு இறக்கிய அதைத் தன்னுடைய பேரருள் ஞானத்தைக் கொண்டு இறக்கினான் என்பதற்கு அல்லாஹ்வும் சாட்சியங் கூறுகின்றான். அமரர்களும் சாட்சியங் கூறுகின்றனர். இன்னும், அல்லாஹ் சாட்சியாயிருப்பது போதுமானது.

"தாம் ரசூலாக இருப்பதற்கு அடையாளமாக தவ்ராத் வேதத்தைப் போல் ஒரே முறையில் வானத்திலிருந்து ஒரு வேத கிரந்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டதற்கு, இதற்கு முன்னுள்ள ஆயத்துகளிற் கூறப்பட்டதை அங்கீகரித்து யூதர்கள் உம்மை நபியென்று ஒப்புக் கொள்ளவில்லையானால் அதனால் எவ்விதக் குறைவுமில்லை; அவர்கள் சாட்சியங் கூறமாட்டார்கள். ஆனால், அல்லாஹு தஆலா இவ்வேதத்தை உமக்கு இறக்கி இருப்பதாக சாட்சியங் கூறுகிறான். மலக்குகளும் சாட்சியங் கூறுகிறார்கள். இதுவே போதுமானது" என்று இந்த ஆயத்தில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

إِنَّ الَّذِينَ كَفَرُوا وَصَدُّوا عَن سَبِيلِ اللَّهِ قَدْ ضَلُّوا ضَلَالًا بَعِيدًا ﴿١٦٧﴾

167. நிச்சயமாக யார் நிராகரித்து, அல்லாஹ்வின் பாதையை விட்டு (மனிதர்களை)த் தடுக்கின்றனரோ அவர்கள் நிச்சயமாக வழிகேட்டில் வெகு தூரம் தவறிவிட்டார்கள்.

யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஈமான் கொள்ளாமல் இருப்பதுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து விசாரிப்பவர்களிடம்

"எங்களிடமுள்ள தவ்ராத்தில் முஹம்மதைக் குறித்து வர்ணிக்கப்பட்டிருப்பதை நாங்களறியோம்" என்று கூறி அவர்களை இஸ்லாம் மார்க்கத்திற் சேரவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தனர். ஆகவே, அவர்கள் தாங்களும் வழி தவறியதுடன் மற்றவர்களையும் வழி கெடுத்ததால் மிகவும் தூரமான வழி கேட்டில் வீழ்ந்து விட்டனர்.

إِنَّ الَّذِينَ كَفَرُوا وَظَلَمُوا لَمْ يَكُنِ اللَّهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ طَرِيقًا ۝

168. நிச்சயமாக யார் நிராகரித்து அநியாயஞ் செய்தார்களோ அவர்களுக்கு (அவர்கள் பாவ மன்னிப்புக் கேட்காதவரை) அல்லாஹ் அவர்களுக்கு (அவர்கள் பாவ மன்னிப்புக் கேட்காதவரை) அல்லாஹ் பிழை பொறுப்பதாகவும், அவர்களை (நேர்) வழியில் சேர்ப்பதாகவும் இல்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நுபுவ்வத்தைத் தெரிந்து கொண்டே அதனை அங்கீகரிக்காமல் இருப்பதும், தங்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ள நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிய வர்ணனைகளை மறைப்பதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அநியாயஞ் செய்வதாகும். தவிரவும் மனிதர்களை அவர்களுக்கு நன்மையான வழியை விட்டு வேறு வழியில் திருப்பியதும் அநியாயமேயாகும்.

إِلَّا طَرِيقَ جَهَنَّمَ خَالِدِينَ فِيهَا أَبَدًا ۚ وَكَانَ ذَٰلِكَ عَلَى اللَّهِ يَسِيرًا ۝

169. ஆனால், (அவர்களுக்கு) நரகத்தின் வழியை (க் காட்டுவான்) அவர்கள் அதில் எந்நாளும் நிரந்தரமாக இருப்பார்கள். மேலும், இது அல்லாஹ்வுக்கு மிகவும் சுலபமாக இருக்கிறது.

خَالِدِينَ **காலிதீன**, என்ற பதத்திற்கு நீண்டகாலம் என்று பொருள் கொள்ள இடமுண்டு. ஆதலின், அத்தகைய கருத்துக் கொள்ள இடமில்லை என்பதை أَبَدًا **அபதன்**, என்ற பதம் அறிவிக்கிறது. ஆகவே, காஃபிர்கள் நரகினில் எப்பொழுதுமே நிரந்தரமாக இருப்பார்கள் என்பதும் அதனை விட்டு அவர்களுக்கு விடுதலை கிடைக்காது என்பதும் இதன் கருத்து.

தவிர ذَٰلِكَ **தாலிக்க**, அதாவது 'இது' என்ற பதத்திற்கு காஃபிர்களை நரகினில் எப்பொழுதுமே நிரந்தரமாக வைத்திருப்பது என்பது கருத்து.

يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُمُ الرَّسُولُ بِالْحَقِّ مِنْ رَبِّكُمْ فَآمِنُوا خَيْرًا لَكُمْ ۚ وَإِنْ تَكْفُرُوا فَإِنَّ لِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۚ وَكَانَ اللَّهُ عَلِيمًا حَكِيمًا ۝

170. மனிதர்களே! திண்ணமாக இத்தூதர் உங்கள் றப்பிடமிருந்து உண்மையை உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றார். ஆதலின், (அவரை) விசுவாசியுங்கள் (அது) உங்களுக்கு நலம். ஆனால், நீங்கள் நிராகரித்தால், நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன; மேலும், அல்லாஹ் மிகவும் அறிபவனாக, விவேகமுள்ளவனாக இருக்கின்றான்.

அர்ரசூல் என்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்பதும், **அல்ஹக்கு** அதாவது, உண்மை என்பதற்கு திருக்குர்ஆன் என்பதும், **கைறன் லக்கும்**, உங்களுக்கு நன்மையானதை என்பதற்கு உள்ளும் புறமும் ஒன்று போல் இதய சுத்தியுடன் ஈமான் கொள்ளல் என்பதும் கருத்தாகும்.

يَا أَهْلَ الْكِتَابِ لَا تَغْلُوا فِي دِينِكُمْ وَلَا تَقُولُوا عَلَى اللَّهِ إِلَّا الْحَقَّ ۚ إِنَّمَا الْمَسِيحُ عِيسَى ابْنُ مَرْيَمَ رَسُولُ اللَّهِ

وَكَلِمَتُهُ ۚ أَلْقَاهَا إِلَىٰ مَرْيَمَ وَرُوحٌ مِّنْهُ ۖ فَآمِنُوا بِاللَّهِ
وَرُسُلِهِ ۖ وَلَا تَقُولُوا ثَلَاثَةٌ ۚ انتَهُوا خَيْرًا لَّكُمْ ۚ إِنَّمَا
اللَّهُ إِلَٰهٌ وَاحِدٌ ۖ سُبْحَانَهُ أَن يَكُونَ لَهُ وَلَدٌ ۘ لَّهُ مَا
فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ ۗ وَكَفَىٰ بِاللَّهِ وَكِيلًا

171. வேதத்தையுடைய (யூத கிறிஸ்து)வர்களே! நீங்கள் உங்களின் மதத்தில் (அளவுக்கு) மீறாதீர்கள். இன்னும், அல்லாஹ்வின் மீது உண்மையைத் தவிர (பொய்யை)க் கூறாதீர்கள்; மர்யமுடைய குமாரர் 'ஈஸா மஸீ'ஹானவர் அல்லாஹ்வின் தூதர்தாம்; இன்னும், அவனுடைய வார்த்தை(யினால் ஜனித்தவர்) தான்; அ(வன் அவ்வார்த்தையான)தை மர்யமிடத்தில் போட்டான் - இன்னும் அவனிடமிருந்து (வந்த ஓர்) ஆத்மா(வை உடையவர்)தான்; ஆதலின், நீங்கள் அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் (மெய்யாகவே) விசுவாசியுங்கள்; மேலும், மூன்று (தெய்வம்) என்று கூறாதீர்கள்; (அவ்வாறு கூறுவதை விட்டு) நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்; (அது) உங்களுக்கு நலம். அல்லாஹ் ஒருவன்தான் வணங்கப்படுபவன்; அவன் தனக்குப் பிள்ளை யிருப்பதை விட்டுப் பரிசுத்தமானவன்; வானங்களில் உள்ளதும் பூமியில் உள்ளதும் அவனுக்கே உரியன; மேலும், அல்லாஹ் பொறுப்பேற்பவனா யிருப்பது போதுமானது.

يَا أَهْلَ الْكِتَابِ **'வேதக்காரர்களே'** என்று இறைவன் அழைத்துக் கூறி இருப்பது இவ்விடத்தில் கிறிஸ்துவர்களைக் குறிக்கிறது. கிறிஸ்துவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விஷயத்தில் எல்லையை மீறி அதிகமாக நடந்து கொண்டனர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தெய்வமென்றும், தெய்வ குமாரர் என்றும் கூறியதுமல்லாமல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று திரியேகத்துவத்தையும் உண்டு பண்ணி விட்டனர். ஆகவே, அவர்கள் எல்லையை மீறி ஏற்படுத்தி இருப்பவற்றை விட்டொழிக்கும்

படியும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய அந்தஸ்தை விபரித்தும் இந்த ஆயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

கலிமத்துஹு அதாவது 'அவனது வார்த்தை' என்று ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்துச் சொல்லப் பட்டிருக்கிறது. உலகில் உண்டான சகலமும் அல்லாஹு தஆலாவின் "குன்" அதாவது 'நீ உண்டாகு' என்ற சொல்லிலிருந்தே உண்டாகி இருக்க, ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மட்டும் இந்தப் பெயரைக் கொடுத்ததற்குக் காரணம் என்னவெனில், உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் அந்தரங்கத்தில் "குன்" என்ற வார்த்தையினால் உண்டானாலும் வெளித்தோற்றத்தில் தந்தை, வித்து முதலியவைகள் மூலமாகவே உண்டாகின்றன. ஆனால், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெளித்தோற்றத்தில் தந்தையின் மூலமாக இல்லாமல் நேராக அந்த வார்த்தையின் மூலமாக தோன்றியதால் அவர்களுக்கு 'அவனது வார்த்தை' என்ற பெயர் வந்தது.

மேலும் கிறிஸ்துவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை தெய்வம் என்று நம்பியதற்குக் காரணம் யாதெனில் **'இன்னும் அவனிடமிருந்து (வந்த ஓர்) ஆன்மாதான்'** என்று அவரைக் குறித்து சொல்லப்பட்டிருப்பதும் ஒன்று. இவ்விதமான பதம் முந்திய வேதத்திலும் கூறப்பட்டிருப்பதால் இதைத் தவறான பொருள் செய்து கொண்டு வழி தவறி விட்டனர்.

ஹிக்காயத்து:- ஹாரூன் ரஷீது பாதுஷாவிடத்தில் கிருஸ்துவ மார்க்கத்தை தழுவியுள்ள ஒரு வைத்தியன் இருந்தான். அரசர்களது தர்பாரில் செல்பவர்களுக்கு இருக்க வேண்டிய சகல அம்சங்களும் அவனிடமிருந்தன. அவன் மீது பாதுஷாவிற்கு அதிகப் பிரியம். அவனை இஸ்லாத்திற் சேர்த்து விடவேண்டும் என்பது பாதுஷாவின் விருப்பம். ஒருநாள் அம்மருத்துவரிடம் பாதுஷா நேரில் 'நீர் இஸ்லாத்திற் சேர்ந்து விட வேண்டும்' என்று கூறியபோது அவன் உங்களது வேதத்திலேயே எனது கொள்கைக்கு ஆதாரம் இருக்கும்

போது நான் எப்படி உங்கள் மதத்திற்கு வரமுடியும்? என்று கூறி "இன்னும் அவனிடமிருந்து (வந்த ஓர்) ஆன்மா" என்ற வாக்கியத்தைப் படித்துக் காண்பித்தான். பாதுஷாவிற்கு மிகவும் ஆச்சரியமும் கவலையுமுண்டாயிற்று. அங்கிருந்த மார்க்க அறிஞர்களிற் பலரையும் அழைத்து இது சம்மந்தமாக ஆலோசனை பண்ணினார். அவ்வைத்தியன் அவ்வறிஞர்களது விளக்கங்களை அங்கீகரிப்ப தில்லை. இச்சமயத்தில் மரூ என்ற இடத்திலிருந்து ஹாஜிகளின் ஒரு கூட்டம் அவ்வழியே வந்தது. அவர்களில் ஒருவருக்கு திருக்குர்ஆனில் மிகுந்த பாண்டித்துவமிருந்தது. பாதுஷா அவருக்கு ஆளனுப்பி தமது தர்பாருக்கு அழைத்து இவ்வைத்தியர் கூறுவதைப் பற்றி விசாரித்தார். அதற்கு அவர் 'இன்ஷா அல்லாஹ் இதற்கு தக்கவிடை கூறாமல் உண்பதுமில்லை பருகுவதுமில்லை' என்று கூறிவிட்டு திருக்குர் ஆனைத் திரும்பத் திரும்ப ஓத ஆரம்பித்தார். அதில், **"இன்னும் வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை அனைத்தையும் தன் புறத்திலிருந்து உங்களுக்கு அவன் வசப்படுத்திக் கொடுத்துள்ளான்"** (ஸூரத்துல் ஜாதியா 13) என்ற ஆயத்து வந்தவுடன், இதனை அந்த மருத்துவரிடம் ஓதிக் காண்பித்து "இந்த ஆயத்திற் கூறப்பட்டதிலிருந்து உமது கருத்துப்படி உலகிலுள்ள சகலமும் அல்லாஹு தஆலாவின் ஒரு பகுதியாகவல்லவா இருக்கிறது. ஆனால், நீர் உலகிலுள்ள இவைகள் ஒவ்வொன்றையும் தெய்வம் என்று கூறுவதில்லையே" என்று கூறினார். அம்மருத்துவருக்கு உண்மை வெளியாயிற்று. உடனே அவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிவிட்டார்.

لَنْ يَسْتَنْكِفَ الْمَسِيحُ أَنْ يَكُونَ عَبْدًا لِلَّهِ وَلَا الْمَلَائِكَةُ الْمُقَرَّبُونَ ۚ وَمَنْ يَسْتَنْكِفْ عَنْ عِبَادَتِهِ وَيَسْتَكْبِرْ فَسَيَحْشُرُهُمْ إِلَيْهِ جَمِيعًا ﴿١٧٢﴾

172. மஸீஹானவரும், முகர்ரபான (அல்லாஹ்வின் சமூகத்தில் நெருங்கியவர்களான) வானவர்களும் அல்லாஹ்வின் அடியாராக இருக்க நாணமுறவே மாட்டார்கள், எவர்கள் அவனுக்கு

வணக்கம் புரிவதை விட்டு நாணமுற்று கர்வங் கொள்கின்றார்களோ, அவர்கள் யாவரையும் அவன் தன்னளவில் (வெகு) துரிதத்தில் (எழுப்பி ஒன்று) சேர்ப்பான்.

ரிவாயத்து:- நஜ்ரான் என்னுமிடத்திலிருந்து வந்த கிறிஸ்துவர்களது தூதுவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "எங்களது ஸாஹிபைப் பற்றித் தாங்கள் ஏன் குறை கூறுகிறீர்கள்?" என்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உங்கள் ஸாஹிபு யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "ஈஸா" என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அவரைக் குறித்து நான் கூறிய குறை என்ன?" என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் "அவர் அல்லாஹ்வின் அடிமை" என்று நீங்கள் கூறுகிறீர்கள் என்றனர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அல்லாஹ்விற்கு அடிமையாக இருப்பது குறையல்ல" என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் "இல்லை அது குறைதான்" என்றனர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. அல்லாஹு தஆலாவிற்கு அடிமையாக இருப்பது சிறுமையல்ல. அது பெருமையேயாகும். அவனைத் தவிர்த்து மற்றவர்களுக்கு அடிமையாக இருப்பதுதான் சிறுமை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

فَأَمَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ فَيُوَفِّيهِمْ أُجُورَهُمْ وَيَزِيدُهُمْ مِنْ فَضْلِهِ ۖ وَأَمَّا الَّذِينَ اسْتَنْكَفُوا وَاسْتَكْبَرُوا فَيُعَذِّبُهُمْ عَذَابًا أَلِيمًا

173. ஆதலின், யார் (அல்லாஹ்வை) விசுவாசித்து நற்செயல்களைச் செய்தார்களோ அவர்களின் கூலிகளை அவன் (கொடுத்து) நிறைவேற்றுவான்; மேலும், தனது கிருபையால் அதிகமாகவும் அவர்களுக்குக் கொடுப்பான்; எனினும், யார்

நாணமுற்று கர்வங் கொண்டனரோ அவர்களை அவன் நோவினை கொடுக்கக் கூடிய வேதனையாக வேதனைப்படுத்துவான்.

அல்லாஹு தஆலாவிற்கு ஈமான் கொண்டு ஷரீஅத்தில் ஏவப்பட்டுள்ள நற்செயல்களைச் செய்பவருக்கு அதற்குரிய நற்பயனை அவன் பூர்த்தியாக அளிப்பதுடன் தனது கிருபையினால் அவர்களுக்கு இன்னும் அதிகமாகவும் அளிப்பான் என்பதும், அதனை வணங்குவதற்கு விரும்பாமல் தற்பெருமை கொள்பவர்களை அவர்களது அகம்பாவத்தின் காரணமாக மிகவும் நோவினை செய்யும்படியான வேதனையில் வதைப்பான் என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

وَلَا يَجِدُونَ لَهُم مِّن دُونِ اللَّهِ وَلِيًّا وَلَا نَصِيرًا ۝

174. இன்னும், அவர்கள் தங்களுக்கு அல்லாஹ்வைத் தவிர (வேறு) காரியக்கார்த்தனையும் உதவியாளனையும் பெற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

அல்லாஹு தஆலாவை வணங்குவதற்கு நாணமுற்று தற்பெருமை கொண்டும் இருப்பவர்களை வேதனை செய்யும் போது, அதனை விட்டுக் காப்பாற்ற அவர்களுக்கு வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُم بُرْهَانٌ مِّن رَّبِّكُمْ وَأَنزَلْنَا إِلَيْكُمْ نُورًا مُّبِينًا ۝

175. மனிதர்களே! உங்களின் றப்பிடமிருந்து உங்களுக்கு ஆதாரம் வந்துவிட்டது. இன்னும், (நாம்) உங்களளவில் தெளிவான பிரகாசத்தை இறக்கியிருக்கின்றோம்.

بُرْهَانٌ பூர்ஹான், அதாவது ஆதாரம் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் نُورًا مُّبِينًا

நூரன் முபீனன் அதாவது தெளிவான பிரகாசம் என்பது திருக்குர்ஆனையும் குறிக்கின்றன. பூர்ஹான் என்றதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது முஃஜிஸாத்துகள் என்றுங் கூறுவர். யுக்தி சுருதி ஆகிய இரண்டு வகையிலும் சன்மார்க்கத்தை ஆதரித்து ஆதாரங்கள் அருளப்பட்டிருக்கின்றன என்று மனிதர்களுக்கு இந்த ஆயத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

فَأَمَّا الَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَاعْتَصَمُوا بِهِ فَسَيُدْخِلُهُمْ فِي رَحْمَةٍ مِّنْهُ وَفَضْلٍ وَيَهْدِيهِمْ إِلَيْهِ صِرَاطًا مُّسْتَقِيمًا ۝

176. எனவே, யார் அல்லாஹ்வை விசுவாசித்து அவனை உறுதியுடன் பற்றிக் கொண்டனரோ அவர்களைத் தன்னிடமுள்ள கிருபையிலும், அருளிலும் பிரவேசிக்கச் செய்வான், இன்னும் அவர்களுக்குத் தன்னளவில் (சேர்க்கக் கூடிய) நேரான மார்க்கத்தைக் காண்பிப்பான்.

இதற்கு முந்திய ஆயத்திற் சொல்லப்பட்டுள்ள யுக்தி சுருதி ஆதாரங்களை ஆராய்ந்து அல்லாஹு தஆலாவின் மீது ஈமான் கொண்டு அவனது திருக்குர்ஆனைப் பலமாகப் பிடித்துக் கொள்பவர்களை அல்லாஹு தஆலா தனது கிருபை அருளுக்குரிய நேரான வழியாகிய இஸ்லாம் மார்க்கத்தில் அவர்களைச் சேர்ப்பான் என்பது கருத்து.

ஈமான் கொண்டவர்களுக்கு அல்லாஹு தஆலா அளிக்கிற நன்மைப் பயனானது அவர்களுக்கு அவசியமாகக் கிடைக்க வேண்டிய கடமையன்று. ஏனெனில், நம்மைப் படைத்துக் காத்து இரட்சிப்பவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றையே செய்தோம். கடமையைச் செய்ததற்குக் கூலி கொடுக்க வேண்டும் என்பது கடமையல்ல. என்றாலும், அல்லாஹு தஆலா தனது கிருபையால் நமக்கு நன்மைப் பயனை அளிப்பதால் அதற்கு "கிருபை" என்றும், ஈமானுக்குத் தக்கவாறு கொடுத்து அதிகமாகவும் அளிப்பதால் "அருள்" என்றும் பெயர்கள் வந்தன.

يَسْتَفْتُوْنَكَ ۚ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِي الْكَلٰلَةِ ۚ اِنِ امْرُؤٌا
هَلَكَ لَيْسَ لَهٗ وَلَدٌ وَّلَهٗۤ اُخْتٌ فَلَهَا نِصْفُ مَا تَرَكَ ۚ
وَهُوَ يَرِثُهَاۤ اِنْ لَّمْ يَكُنْ لَّهَا وَلَدٌ ۚ فَاِنْ كَانَتَا اثْنَتَيْنِ
فَلَهُمَا الثُّلُثٰنِ مِمَّا تَرَكَ ۚ وَاِنْ كَانُوْۤا اِخْوَةً رِّجَالًا وَّنِسَآءً
فَلِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ ۚ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ
اَنْ تَضِلُّوْا ۚ وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ

177. (நபியே) உம்மிடத்தில் மார்க்கத் தீர்ப்புக் கேட்கின்றனர்; (ஆதலின்) அல்லாஹ் உங்களுக்கு நெருங்கிய வாரிசு இல்லாதவர்கள் (கலாலா) விஷயத்தில் மார்க்கத் தீர்ப்பளிக்கின்றான் என்று கூறுவீராக! ஒரு மனிதன் தனக்குப் பிள்ளையில்லாமலிருந்து அவனுக்கு ஒரு சகோதரி மட்டும் இருக்க மரணித்தால், அவளுக்கு அவன் விட்டுப்போன (சொத்)தில் பாதியுண்டு; எனினும், (இறந்துபோன) அவளுக்குப் பிள்ளையில்லையானால், அவ(ளின் சொத்துக்க)ளுக்கு (ச்சகோதரனாகிய) அவன் அனந்தரப் பாத்தியக்காரனாவான்; (சகோதரிகளில்) அவர்கள் இருவராக இருந்தால் அவன் விட்டுப்போன (சொத்)தில் மூன்றிலிரண்டு பங்கு அவ்விருவருக்கு முண்டு; (சகோதரர்கள்) அவர்கள் ஆணும், பெண்ணுமான சகோதரர்களானால், இரு பெண்களுக்குள்ள பாகத்தைப் போன்றது ஒரு ஆணுக்குண்டு; நீங்கள் வழி கெடாமலிருப்பதற்காக அல்லாஹ் உங்களுக்கு விபரிக்கின்றான்; மேலும், அல்லாஹ் எல்லா பொருட்களையும் நன்கு அறிந்தவன்.

ஹளரத் ஜாபிருப்னு அப்தில்லாஹ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். அவரை நோய் விசாரிப்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரிடம் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் “நான் கலாலாவாக இருக்கிறேன். எனது சொத்தை நான் எப்படிச் செய்ய வேண்டும்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் விசாரித் தார்கள். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது.

யஸ்தஃப்தூன யுஃப்தீ என்ற பதம் **அல்இஃப்தாஉ** என்ற பதத்திலிருந்து பிறந்தது. விளங்காமல் இருப்பதை விபரித்துக் கூறல், சிக்கலான பிரச்சினையைத் தெளிவுபடுத்தல் என்பது இதன் இயற் பொருள். ஆனால், மத சம்மந்தமான சட்டக் குறிப்புகளுக்கு இந்தப் பதம் உபயோகப்படுகிறது.

கலாலா என்பது தந்தையும் குழந்தையுமில்லாமல் மரணிப் பவருக்குப் பெயர். தந்தையாகவோ அல்லது பிள்ளையாகவோ இல்லாமல் மரணிப்பவருக்கும் பெயர். இந்த இடத்தில் இவ்விரண்டாவது பொருள்தான் கருத்து. அதாவது தாய், தந்தை ஆகிய இரண்டு பேரில் எவரும் இல்லாமலும், புதல்வன் புதல்வி ஆகிய இருவரில் எவரும் இல்லாமலும் இருக்கிற நிலையில் மரணித்தவரது சொத்தை அனந்தரப் பாத்தியங் கொள்வதைக் குறித்து இங்கு மார்க்கத் தீர்ப்பளிக்கப் பட்டிருக்கிறது.

இவ்விதமானவருக்கு ஒரே ஒரு சகோதரி மட்டும் வாரிசாக இருந்தால் அவளுக்குச் சொத்தில் சரிபாதி உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரிகள் இருந்தால், அச்சொத்தில் மூன்றிலிரண்டு பாகத்தை அவர்களெல்லோரும் அனந்தரங் கொள்வார்கள். மூன்றிலிரண்டு பங்குள்ள சொத்தை அவர்கள் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள். ஆனால், ஆணும் பெண்ணுமாகச் சகோதர சகோதரிகள் கலந்திருந்தால் ஒரு ஆணுக்கு இரண்டும் ஒரு பெண்ணுக்கு ஒன்றும் என்று கணித்து அச்சொத்தைப் பாகம் செய்து கொள்ள வேண்டும். சகோதரி இல்லாமல் சகோதரன் மட்டுமிருந்தால் அச்சொத்து முழுவதையும் அவன் அடைவான். இதனைக் குறித்து இந்த சூரத்தின் ஆரம்பத்தில் சில விபரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

தவிரவும், வாரிசு பாத்தியம் சம்மந்தமான விரிவான நூல்களிலும் இதனைக் கண்டு தெளியலாம்.

வாரிசு பாத்தியத்தை விபரித்த பிறகு இறுதியில் وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ "அல்லாஹ் எல்லா பொருட்களையும் (மிகவும்) அறிந்தவன்" என்று கூறப்பட்டி ருப்பதானது, மனிதர்களுக்கு நன்மை பயக்கும் காரியம் எதுவென்பது அவனுக்குத் தெரியும் என்பதையும், மனிதருக்கு நன்மையானதையே அவன் கூறுவான் என்பதையும் அறிவிக்கிறது.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன.

4 வது ஸூரத்து அன்னிஸாஉ முற்றுப் பெற்றது.